பாவேந்தரின் மொழிக் கருத்தியல்கள்

முனைவர் எல். இராமமூர்த்தி

பஜ 7172

பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

பாவேந்தரின் மொழிக் கருத்தியல்கள்

(பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு)

முனைவர் எல். இராமமூர்த்தி
புதுவை மொழியியல் பண்பாட்டு
ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

ISBN : 81-7090-357-2

தமிழ்ப் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டு வெளியீடு :- 14

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 296
திருவள்ளுவராண்டு 2037, பங்குனி - ஏப்பிரல் 2006

07 FEB 2019

நூல்	:	பாவேந்தரின் மொழிக் கருத்தியல்கள்
ஆசிரியர்	:	முனைவர் எல். இராமமூர்த்தி,
பதிப்பாசிரியர்	:	முனைவர் ச. இராதாகிருட்டிணன், மொழிபெயர்ப்புத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
மொழி	:	தமிழ்
பொருள்	:	இலக்கியம்
பதிப்பு	:	முதற்பதிப்பு
உரிமை	:	தமிழ்ப் பல்கலைக்கழகம்
பக்கங்கள்	:	160
தாள்	:	18.6 கி.கி.
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	ரூ. 60
படிகள்	:	1000
அட்டை வடிவமைப்பு	:	பண்பு - 98940 93974
அச்சு	:	இமாலயா ஆப்செட், 2851, 34 B, முதல் தளம், எமரால்டு வணிக வளாகம், திருச்சி முதன்மைச் சாலை, வ.உ.சி. நகர், தஞ்சாவூர் - 613 007. பேசி : 272755

உள்ளுறை...

அணிந்துரை

பதிப்புரை

முன்னுரை

1. பாவேந்தர் தமிழ் 1
கருத்தியல் கோட்பாட்டு (Ideology) அணுகுமுறை

2. பாவேந்தரின் தமிழ் வளர்ச்சிக் கருத்தியல் 27
மொழித்திட்டமிடல் (Language Planning Theory)
கோட்பாட்டு அணுகுமுறை

3. பாவேந்தரின் தமிழ்த்தூய்மைக் கருத்தியல் 55
தூய்மையாக்கக் கோட்பாட்டு (Puristic Approach)
அணுகுமுறை

4. பாரதி, பாவேந்தர் மொழிக் கொள்கைகள் 81
மொழிவழித் தேசியம்

5. பாரதி, பாவேந்தர் : படைப்பாளியின் பகல்கனவு 107
பிராய்டிய அணுகுமுறை

6. பாவேந்தர் தமிழ் 133
மொழிபெயர்ப்பியல் அணுகுமுறை

துணை நூல்கள் 145

முனைவர் சி. சுப்பிரமணியம்,
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

அணிந்துரை

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு

என்ற வாழ்வைத் தமிழோடு இணைத்துத் தமிழர்க்கு மொழி விழிப்புணர்ச்சியை ஊட்டியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். சாதி, சமய மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தம்முடைய புரட்சிக் கருத்துக்களால் தட்டி எழுப்பியவர். பன்முகப்பட்ட ஆளுமை கொண்டவர். திராவிட இயக்கம் சார்ந்த கருத்தியலை முதன்மையாகக் கொண்டு தமிழின வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். தமிழ் மொழியின் மீட்சி, தமிழ்க்காப்பு என்ற நோக்கத்தின் அடிப்படையில் தமிழ் உணர்வைத் தூண்டியவர் எனப் பல சிறப்புகளைக் கண்டவர் பாவேந்தர். தமிழ் மொழியைப் பாரதிதாசனைப்போல் வேறு எந்த கவிஞரும் பாடவில்லை என்றே கூறலாம். பாரதிதாசனின் பன்முகப்பட்ட ஆளுமையை அவர் படைப்புக்களில் இருந்து வெளிப்படுத்துவது இன்றைய ஆய்வாளரின் கடமையாகும்.

அரசு இந்த உயரிய நோக்கத்திற்காகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பாரதிதாசன் அறக்கட்டளையினை நிறுவியுள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழக மொழி பெயர்ப்புத்துறை ஒவ்வொரு ஆண்டும் தகுதி வாய்ந்த அறிஞர்களை அழைத்து, பாரதிதாசனின் தனித் தன்மைகளைச் சொற்பொழிவுகளாக, கட்டுரைகளாக வெளியிட்டு வருகிறது. இவ்வறக்கட்டளையின் மற்றோர் சிறப்பு அறக்கட்டளைச் சொற்பொழிவு நாளிலேயே

அச்சொற்பொழிவு நூலாக வெளியிடுவதாகும். இந்த ஆண்டும் இப்பணியினைச் சிறப்பாகச் செய்து வருகிற மொழிபெயர்ப்புத் துறையினரை, இத்துறைத் தலைவர் முனைவர் ச.இராதாகிருட்டிணன் அவர்களை நான் பெரிதும் பாராட்டி மகிழ்கின்றேன்.

பாரதிதாசனின் மொழிச் சிந்தனைகளைப் பல்வேறு அணுகுமுறையில் ஆராய்ந்து "பாவேந்தரின் மொழிக் கருத்தியல்கள்" என்ற தலைப்பில் இந்நூலை உருவாக்கியுள்ளார் முனைவர் எல். இராமமூர்த்தி, இவர் பல மொழிகளை அறிந்தவர், பல நூல்களுக்கு ஆசிரியர், மொழியியல் வல்லுநர், திறனாய்வாளர். இவர் பாரதிதாசனின் தமிழ், நாடு, இனம், தமிழ் வளர்ச்சி என்பவற்றைப் புதிய முறையில் அணுகியுள்ள பாங்கு பாராட்டத்தக்கது. இந்நூல் பாரதிதாசனுக்குச் சிறப்பு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. மாணவர்களும், ஆய்வாளர்களும் பல்வேறு கோட்பாடுகளை அறிந்து கொள்வதற்கு இந்நூல் உதவியாக அமையும்.

இந்நூல் பல்கலைக்கழக வெள்ளிவிழா ஆண்டில் வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய செய்தி. இத்தகைய பணிகளைத் தொடர்ந்து மொழிபெயர்ப்புத்துறை மேற்கொள்ள என்னுடைய வாழ்த்துக்கள்.

தஞ்சாவூர்
15.03.2006

சி.சுப்பிரமணியம்

முனைவர் ச. இராதாகிருட்டிணன்
தலைவர், மொழிபெயர்ப்புத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

பதிப்புரை

தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத்துறை ஒவ்வொரு ஆண்டும் பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவை ஏற்பாடு செய்து வருகிறது. பாவேந்தர், இருபதாம் நூற்றாண்டில் தனக்கென ஒரு பாதையை வகுத்துக்கொண்டவர். அவருடைய கவிதைகள் பல பாடுப்பொருள்களைக் கருவாக கொண்டவை. பாரதிதாசன் புரட்சிக் கருத்துக்களைக் கவிதைகளாகவும், நாடகங்களாகவும், கட்டுரைகளாகவும் எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றை யெல்லாம் தனித்தனியாக ஆய்ந்து அவரின் ஒட்டுமொத்த பரிமாணத்தை வெளிக்கொண்டு வருவதும், அவர் எதிர்பார்த்த தமிழ் வளர்ச்சி நோக்கி அறிஞர்களைப் பணிபுரிய தூண்டுவதும் இவ்வறக்கட்டளையின் நோக்கமாகும். இந்த அறக்கட்டளையின் தொடர்பணியாக இவ்வாண்டுச் சொற்பொழிவு "பாவேந்தரின் மொழிக்கருத்தியல்கள்" என்ற தலைப்பில் நூலாக வெளிவருகின்றது.

எந்த ஒரு இயக்கத்திற்கும் அடிப்படையாக அமைவது கருத்தியல்களாகும் (Ideology). பாவேந்தர் சமூக முன்னேற்றத்திற்காக கவிதை புனைந்ததோடு மொழி வளர்ச்சி, மொழி மீட்சி, மொழி பாதுகாப்பு என்ற அடிப்படையிலும் கவிதைகளைப் புனைந்துள்ளார். பாவேந்தர் மொழி உணர்வை ஒரு இயக்கமாக்கப் பாடுபட்டவர். பாவேந்தரின் கருத்தியல்களை, சமுதாய மொழியியல் நோக்கில் ஆராய்ந்துள்ளார் முனைவர் எல். இராமமூர்த்தி. இவர் நல்ல மொழியியல் வல்லுனர், திறனாய்வாளர், நிர்வாகத் திறமைமிக்கவர். புதிய புதிய கலைச்சொற்களைப் படைப்பதில் ஈடுபாடுக்கொண்டு ஆய்வு செய்துவருபவர். இந்திய மொழிகளின் சூழலை ஆய்வுசெய்து வரும் இவர் பாவேந்தரின் மொழிக்கருத்தியல்கள் என்ற தலைப்பில் உரையாற்றுவது சிறப்புக்குரியதாகும்.

கருத்தியல் கோட்பாடு, மொழித் திட்டமிடுதல் கோட்பாடு, மொழித்தூய்மைக்கோட்பாடு, மொழிபெயர்ப்பியல் கோட்பாடு, பிராய்டின் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் பாவேந்தரின் தமிழ், தமிழ் வளர்ச்சி, தமிழ்த் தூய்மை ஆகியவற்றை விளக்கி உள்ளது இந்நூலின் சிறப்பாகும். இத்தகைய அணுகுமுறை பாவேந்தரை, சரியாக புரிந்துக்கொள்வதற்கும், பாவேந்தர் வழி கோட்பாடுகளைத் தெரிந்துக்கொள்வதற்கும் உதவியாக அமையும்.

இந்நூல் இரண்டுத் தலைப்புகளில் பாரதி, பாவேந்தரின் மொழி அணுகுமுறைகளை ஒப்பீடு செய்கிறது. பாவேந்தர், பாரதியாரிடமிருந்து எந்த நிலைகளில் வேறுபடுகிறார் என்பதை இதன் வழி அறிந்துகொள்ளலாம்.பாவேந்தர் பற்றிய ஆய்வுகளில் வெளிவந்துள்ள நூல்களில் இது தனித்தன்மையுள்ளதொரு நூலாகும்.

முனைவர் சி.சுப்பிரமணியம் மாண்பமை துணைவேந்தர் அவர்கள் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த அனுமதி அளித்து மொழிப்பெயர்ப்புத்துறைப் பணிகளுக்கு நெறிகாட்டி, ஊக்கப்படுத்தி பெருந்துணையாக இருந்து வருகிறார்கள். அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை அளித்து எங்களை வாழ்த்தியுள்ளார்கள் அவர்களுக்கு நன்றி!

தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து உதவிவரும் பதிவாளர்(பொ) முனைவர் க. பாஸ்கரன் அவர்களுக்கும் நன்றி!

குறுகிய காலத்தில் நூலை செப்பமாக அச்சிட்டுத்தந்த இமாலயா அச்சகத்திற்கு நன்றி!

இந்நூல் தமிழ்ப் பல்கலைக்கழக வெள்ளிவிழா ஆண்டில் மொழிப்பெயர்ப்புத் துறை சார்பாக வெளிவருவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

தஞ்சாவூர்
15.04.2006

ச.இராதாகிருட்டிணன்

முன்னுரை

சங்க இலக்கியம் தொடங்கி, பாரதி வரையிலான தமிழ் இலக்கிய மரபைத் துணையாகக் கொண்டு, தமிழ் இன வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்குமான புரட்சிக் கருத்துக்களை மொழிப்படுத்தியவர் பாவேந்தர். சமுதாய விடுதலையையும் மொழி விடுதலையையும் முதன்மைக் கருத்துக்களாகக் கொண்டு செயல்பட்டவர். பாவேந்தரின் மொழிக் கருத்துக்கள் எந்த ஒரு மொழி உணர்வாளனையும், மொழிப் போராளியாக மாற்றிவிடும். இந்த உண்மையைத் தமிழறிஞர் நன்கு அறிவர். தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் ஓர் இயக்கமாகச் செயல்படுவதற்குக் காரணம் பாவேந்தர் ஊட்டிய தமிழ் உணர்வே.

பாவேந்தர் பல்வேறு பாடுபொருள்களில் தமது கருத்துக்களை வெளியிட்டாலும், தமிழ் மொழி தொடர்பாகச் சில தனித்த கொள்கைகளைக் கொண்டிருந்தார். அக்கொள்கைகளையும் மொழி தொடர்பான செயல்பாடு களையும் கோட்பாடுகளின் அடிப்படையில் விளக்கும் பொழுதுதான், பாவேந்தரின் நிலைப்பாட்டினை விளக்க முடியும். அந்த அடிப்படையில், இங்கே கருத்தியல் கோட்பாடு, மொழித்திட்டமிடுதல் கோட்பாடு, மொழித் தூய்மைக் கோட்பாடு, பிராய்டிய அணுகுமுறை, மொழி பெயர்ப்பியல் அணுகுமுறை ஆகிய நிலைகளில் பாவேந்தரின் மொழிச் சிந்தனைகள் விளக்கப்பட்டுள்ளன.

பாவேந்தர், பாரதிபால் மிகுந்த பற்றுடையவர். ஆனால், நாடு, மொழி, இனம் என்ற சூழலில் பாவேந்தர் தமக்கெனத் தனித்த கருத்தியலைக் கொண்டிருந்தார். பாவேந்தரின் பகல் கனவு கூடத் தமிழரின் முன்னேற்றமாகவே இருந்துள்ளது. பாரதியிடமிருந்து பாவேந்தர் எவ்வாறு? எந்நிலைகளில் மாறுபடுகிறார் என்பதும், இங்கே விளக்கப்பட்டுள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளாகப் புதுவை பாரதி அன்பர்கள் இயக்கத்தில் இணைந்து ஆற்றிய பணிகள் பாரதி பற்றியும் பாவேந்தர் பற்றியும் கூர்மையான ஆய்வு அனுபவங்களை எனக்கு வழங்கியுள்ளது. அந்தப் பட்டறிவும் இந்நூல் உருவாக்கத்திற்கு அடிப்படையாகும்.

பாவேந்தரின் முழுஆளுமையை அவரின் எல்லாச் சிந்தனைகளையும் கொண்டே விளக்கமுடியும். அதற்கு நல்ல வாய்ப்பாகத் தமிழ்ப்பல்கலைக்கழக பாவேந்தர் அறக்கட்டளை அமைந்துள்ளது.

பாவேந்தரின் செயலினை மூச்சினை உனக் களித்தேனே என்ற வரிகளுக்கு ஏற்பத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபட்டு வருபவர் தமிழ்ப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி.சுப்பிரமணியன் அவர்கள். இத்தகைய அரிய வாய்ப்பை எனக்கு நல்கிய அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாவேந்தர் அறக்கட்டளைப் பொழிவை ஒவ்வோர் ஆண்டும் மிகச் சிறப்பான முறையில் நடத்தி வருபவர், மொழி பெயர்ப்பியல் துறைத் தலைவரும், அன்புச் சகோதரருமான முனைவர் இராதாகிருட்டிணன் அவர்கள். துறையையும் மாணவர்களையும், நண்பர்களையும் ஒரு குடும்பப் பாசத்தோடு நடத்திச் செல்பவர். இந்த வாய்ப்பை எனக்கு அளித்து என்னைப் பாவேந்தரின் படைப்புகள் முழுவதையும் ஆராயச் செய்தார். அவருக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாவேந்தர் அறக்கட்டளைச் சொற்பொழிவை நூலாக அமைப்பதற்குப் பெரிதும் துணைநின்ற நண்பர்கள் முனைவர் சிலம்பு நா. செல்வராசு, முனைவர் இராச.திருமாவளவன், தமிழ்ப் பல்கலைக்கழக நண்பர்கள் முனைவர் ஆ. கார்த்திகேயன், முனைவர் சுசிலா ஆகியோருக்கும் நன்றி. இந்நூலைத் தட்டச்சுச் செய்த என் மாணவர் திரு ஏ. எழில்வசந்தன் அவர்களுக்கும் நன்றி.

புதுச்சேரி
15.03.2006

எல். இராமமூர்த்தி

இயல் ஒன்று

பாவேந்தர் தமிழ்

கருத்தியல் கோட்பாட்டு (*Ideology*) அணுகுமுறை

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மகாகவி பாரதி பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவும், தானே ஒரு பெரும் பாரம்பரியத்தின் தொடக்கமாகவும் விளங்குபவர் பாவேந்தர் பாரதிதாசன். அவரைப் பற்றித் தந்தை பெரியார் கூறுவது:

> *"பாரதிதாசன் சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி என்றுதான் கூறவேண்டும். இந்த ஒரு காரணத்தினாலேயே அவர் இன்று தமிழ்நாட்டின் சிறந்த கவியாய் இருந்தும், அவருடைய புகழ் போதுமான வரையில் பரவாமலிருக்கிறது. ஆனால் அவர்மட்டும் வெறும் புகழை விரும்புவாரானால் காலத்திற்கும் பாமரமக்களின் உணர்ச்சிக்கும் ஏற்றவாறு தம் கருத்துக்களை மாற்றிக் கொண்டு மிகச் சிறந்த கவி என்ற பெயரை எளிதில் பெற்றுவிடலாம். ஆனால், உண்மை, நியாயம் அறிவு முதலியவற்றைச் சிறிதும் விட்டுக் கொடுக்க இசையாத இயற்கையான பிடிவாதமுடையவராதலால் அவர் புகழை எதிர்பாராமல், தம் கொள்கைகளில் விடாப்பிடியாக இருந்து வருகிறார்"*

இந்தக் கூற்றுக் கூர்ந்து கவனிக்கத்தக்கது (திருவாசகன் 1993:90).

காலத்திற்கு ஏற்றவாறும், பாமர மக்களின் உணர்ச்சிகளுக்கு ஏற்றவாறும் தம் கருத்துக்களை மாற்றிக் கொள்ளாமல், பழைய ஆசாரங்களிலும், மதங்களிலும் ஊறிக் கிடந்த அன்றைய சமூகத்தினைத் தம் கவிதை களால் மாற்றப் பாடுபட்டார். அக்காலத்து வரலாற்று நிகழ்ச்சிகளையும் சமுதாயச் சிக்கல்களையும் பாடுபொருளாக எடுத்துக்கொண்டார். கடவுள், சமயம், ஆரிய திராவிட இனங்கள், தமிழகத்தின் எதிர்காலம், பெண்கல்வி, குழந்தை மணம், கைம்பெண்நிலை, முதலாளித்துவ எதிர்ப்பு, பொதுஉடைமை ஆகியன பற்றிய இவரது பாடல்கள் மக்களிடையே பெரிய மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கின்றன.

இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சி மனப்பான்மை
ஏற்படுத்துதல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்
(792)

என்று அன்றைய காலகட்டச் சமுதாயத்தின் நிலையை மாற்றுவதைத் தமது கடமையாகக் கொண்டு கவிதை எழுதியவர் பாரதிதாசன் ஆவார். பாரதிதாசனின் மனத்திற்கு மிக நெருக்கமான பாடுபொருளில் தமிழும், தமிழினமும் முக்கியமானவையாகும். தமிழ் மொழியையும் தமிழ் இனத்தையும் பாரதிதாசன் அளவிற்கு யாரும் பாடவில்லை என்றே கூறவேண்டும். தமிழ் என்றால் என்ன என்ற அவரின் கருத்து இங்குச் சுட்டத்தக்கது. தமிழ் இன்பம் என்ற தலைப்பில்,

"தமிழ் என்றாலே தமிழ் மொழியை மட்டும் குறிப்பதோடு நிற்கவில்லை. தமிழ் என்றால் தமிழர்களையும் குறிக்கின்றது. தமிழ் என்ற சொல் தமிழர் படையையும் குறிக்கும்" (பாரதிதாசன் பேசுகிறார்.பக்.57).

என்று கூறுகிறார். தமிழின் நிலைபற்றியும், தமிழ் வளர்ச்சி பற்றியும், தனித்தமிழ் பற்றியும் பல்வேறு கருத்துக்களைப் பாரதிதாசன் வெளியிட்டுள்ளார். அவருடைய கருத்துக்கள் எல்லாம் அளப்பரிய தமிழ்ப்பற்றால் படைக்கப்பட்டவை; உணர்வு சார்ந்தவை என்று சாதாரணமாக எடைபோட்டுவிட முடியாது.

இந்நூலில் உள்ள பாரதிதாசன் பாடல்கள் அனைத்தும் திருவாசகன் சுரதா கல்லாடன்

> "பாரதிதாசன் தத்துவ மேதையோ, அரசியல் விற்பன்னரோ, சட்டப் பேரறிஞரோ, மொழிநூல் வல்லுநரோ, மனித இன வரலாற்று ஆசிரியரோ அல்லர். அவர் ஒரு முழுமையான கவிஞர். எனவே இனம், சமயம், மொழி, சமுதாயம் பற்றி அவர் கூறிய கருத்துக்களின் தராதரத்தை எடையிடுவது முறையாகாது. வீண் செயலுமாகும். அவரது கோட்பாடுகள் கவிதைகளாக மலர்ந்து மணம் பரப்புகின்றனவா? அல்லது கோட்பாடுகளாகவே மொட்டவிழாது இலக்கிய இன்பத்திற்கு ஊறு செய்து நிற்கின்றனவா என்பதே நாம் கேட்க வேண்டிய, விடை அறிய வேண்டிய வினாவாகும். அவரது கொள்கைகளை வெறுப்போர் அவரது கவிதைகளைத் தூற்றுவதையும். அவரது கொள்கைகளை ஏற்றுக் கொண்டோர். கவிதையைப் போற்றுவதையும் நாம் பெரிதும் காணுகின்ற இந்நாளில் இத்தகைய ஆய்வு இன்றியமையாததாகின்றது."

என்று மருதநாயகம் (2004:106) குறிப்பிடுவார்.

பாரதிதாசனின் மொழி, இனம், சமுதாயம் பற்றிய கருத்துக்களைச் சரியான கோட்பாடுகளின் அடிப்படையில் பார்க்கும்பொழுதுதான் அவருடைய உணர்வுகளையும், கவிதை உத்தியையும் புரிந்துகொள்ள முடியும். பாரதிதாசனின் தமிழ்ச் சிந்தனைகளைச் சமூக மொழியியல் அடிப்படையிலும் கருத்தியல் அடிப்படையிலும் ஆராயும் பொழுது அவருடைய கருத்துக்களின் வலிமையைப் புலப்படுத்த முடியும்.

மொழியை அறிவியல் முறையில் அணுகுவது மொழியியலாகும். பாவேந்தரின் மொழி பற்றிய சிந்தனை எல்லாம் உணர்வு நிலையில் இருக்கும் பொழுது மொழியியல் அணுகு முறையில் ஆராய்வது முறையாகுமா? என்ற கருத்து எழலாம். மொழியை அறிவுப்பூர்வமாகவும் அணுகலாம். உணர்வுப் பூர்வமாகவும் அணுகலாம். மொழியை உணர்வுப் பூர்வமாக அணுகுவது அறிவியலுக்கு எதிரான செயல்பாடன்று. மொழியைச் சமுதாயத்தோடு இணைத்துப் பார்க்கும்பொழுது இத்தகைய

அணுகுமுறைகளுக்கு இடம் இருப்பதை அறிந்து கொள்ள முடியும். மொழி, சமுதாயத்தில் பயன்படுத்தப்படும் பொழுது, சமுதாயத்தால் மொழி பாதிக்கப்படுவதும், சமுதாயம் மொழியால் பாதிக்கப் படுவதும் இயல்பே. இத்தாக்கங்களை அறிவியல் அடிப்படையில் விளக்குவது சமுதாய மொழியியல் ஆகும். ஒரு படைப்பாளி, மொழியை ஒரு கருவியாகக் கொண்டு தன் படைப்பைப் படைக்கும் பொழுது, அப்படைப்பு மொழியால் அமைந்த நிலையில், படைப்பின் சமூக நிலையையும் விளக்க முடியும். படைப்பில் காணப்படும் சமூக மொழியியல் கூறுகளைப் படைப்பாளியின் பின்புலத்தோடு இணைத்தும் விளக்கலாம்.

பாவேந்தரின் படைப்புக்களைப் பொறுத்த மட்டில் தமிழே பாடுபொருளாக அமைந்துள்ளது. எந்த ஒரு படைப்பாளனின் படைப்பிலும் அவனுடைய கருத்தியல்கள் வெளிப்பட்டு இருக்கும். பாரதிதாசனின் தமிழ் பற்றிய பாடலில், மொழி பற்றிய பல்வேறு கருத்தியல்கள் வெளிப்பட்டுள்ளன. இக்கருத்தியல்கள் எவை? அவை எவ்வாறு மொழிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை மொழியியல் வழி விளக்கலாம்

பாவேந்தரின் மொழிபற்றிய சிந்தனைகள் எல்லாவற்றிற்கும் மொழியியல் நெறியில் விளக்கமளிக்க இயலாமல் போகலாம். பல மொழிச் சிந்தனைகள் மொழியியல் நெறிகளுக்குப் புறம் பானவையாக இருக்கலாம். அவற்றைப் பாவேந்தரின் மொழிக் கருத்தியலாகக் கொண்டு, அவற்றைச் சமுதாயச் சூழலோடும், கருத்தியல் வெளிப்படுத்தப்பட்ட முறைகளோடும் விளக்கும் பொழுது, பாவேந்தரின் ஆழமான தமிழ்ப்பற்றை விளக்கிக்காட்ட இயலும். அதற்குக் கருத்தியல், கருத்தியல் உருவாக்கம் ஆகியன பற்றிய அடிப்படைப் புரிதல்கள் அவசியமாகின்றன.

1.1. கருத்தியல்

கருத்தியலைப் பற்றிப் பலவேறு அறிஞர்கள் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். கருத்தியலின் அடிப்படை பொருளே கருத்துதான். ஒரு சமூகத்தினரால் பகிர்ந்து கொள்ளப்படும் பொதுக் கருத்து கருத்தியலாக இருக்கும். ஆனால் சமூக நிலையில் ஆதிக்கச் சமூகத்தின் கருத்துக்களே கருத்தியலாகவும், பிறரது கருத்துக்கள் தவறானவை என்றும் பொருள் மாற்றமடையலாம். கருத்தியலை விளக்குவதற்குக் கருத்து

பற்றிய அடிப்படைத் தெளிவு தேவையாகிறது. கருத்தைப் பின்வருமாறு வெவ்வேறு வகையில் விளக்கலாம் (வான் டிங்க் 1998).

1. கருத்து என்பது மனத்தில் உள்ள ஒன்று என்றோ, மனத்தின் செயல்பாட்டால் விளையும் ஒன்று என்றோ கூறலாம்.
2. எண்ணங்களின் வெளிப்பாடு கருத்தாகலாம்.
3. மனித அறிவின் ஒரு பகுதியாகக் கருத்து அமையலாம்.
4. தனிப்பட்டதாகவோ, சமூகத்தினரால் பகிர்ந்து கொள்ளப்பட்டதாகவோ அமையலாம்.
5. ஒரு முக்கிய பொருண்மை குறித்த புதிய சிந்தனை வெளிப்பாடு எனலாம்.

இக்கருத்தை மையமாக வைத்துக் கருத்தியல் விளக்கப் படுகிறது. ராய்மண்ட் வில்லியம்ஸ் (பிஸ்க் (1990) இருந்து எடுக்கப்பட்டது) என்பவர் கருத்தியல் பற்றி மூன்று வகையான விளக்கங்களைத் தருவார். அவை:

1) ஒரு குறிப்பிட்ட குழுவினருடைய நம்பிக்கைகளின் ஒழுங்கமைவு.
2) அறிவியல் நெறிக்கு மாறுபடக்கூடிய நம்பிக்கைகளின் ஒழுங்கமைவு
3) பொதுக்கருத்து மற்றும் பொருண்மையை உருவாக்கும் செயல்

கருத்தியலைப் பல்வேறு கருத்துக்களையும், முடிச்சுக் களையும் உடைய பனுவலாகவும் காண்பர். கருத்தியலை ஒரு பண்பாட்டின் மிக முக்கியமான பகுதி என்றும், ஒரு சமூகத்தினர் தங்களது உயர்மதிப்பு, வேலைப்பாகுபாடு போன்றவற்றின் வகைப்பாட்டில் உள்ள தன்னுணர்வு சார்ந்த விழிப்புணர்வு என்றும் காண்பர். பிரெஞ்சு அமைப்பியல் வாதிகளும், பின் அமைப்பியலாரும், கருத்தியலை விழிப்புணர் வுடைய, ஒழுங்கமைக்கப்பட்ட கருத்துக்கள் என்பதை விடுத்து, அது ஓர் அமைப்போடு இயங்கக்கூடிய வாழ்வியல் நடத்தைகள் என்றும் கூறுவர்.

வரையறுக்கப்படுகிறது. உளவியலார், மனப்பாங்குகளின் பிறப்பிடம் கருத்தியல் என்பார். கருத்தியல்களைத் தனிமனிதன் உருவாக்குவதைவிடச் சமூகமே வரையறை செய்கிறது என்று கூறுவர். மார்க்சியக் கருத்தியலாளர் சமூகத்தில் உள்ள வர்க்கபேதமும், வேலை பகிர்வுமே தங்களது கருத்தியலுக்கான அடிப்படை என்பார்கள். எனவே கருத்தியல் என்பதைத் தனிமனித உரிமையாகக் கொள்ளாமல், அதை ஒரு சமூகச் செயல்பாடாகக் கொள்ளவேண்டும் என்று கருதுவர்.

கருத்தியல் என்பது ஒரு வகையான உண்மைக் கருத்துக்கள் என்று கருதப்பட்டாலும், ஒரு சமூகத்தகுதியால், சமூகத்தகுதியின் விளைவால், புட்டறிவின் விளக்கத்தால் அது கருக்கொள்ளும் நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது சமூக அரசியல், பொருளாதார அதிகாரத் தன்மையின் தொடர்பால் கருத்தியல்கள் உருவாக்கப்படலாம். கருத்தியல் பொதுவாக ஓர் அதிகாரக் குழுவின் கருவியாகவும், சொத்தாகவும், நடவடிக்கையாகவும் கருதப்படுகிறது. அதிகாரமற்றவரின் பண்பாட்டுக் கருத்தாக்கங்களும் செயல்பாடுகளும், கருத்தியல் தன்மையற்றவை என்று அதிகாரக் குழுவால் வரையறை செய்யப்படும்.

1.2. கருத்தியலும் குறிப்பீட்டாக்கமும்

கருத்தியலைக் கருத்துக்கள், சொல்லாடல்கள் அல்லது குறியீட்டுச் செயல்பாடுகள் ஆகியவற்றின் வழியாக அதிகாரத்தைக் கைப்பற்றவோ, அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவோ பயன்படுத்துவர். ஒரே பண்பாட்டைச் சேர்ந்தவர்களால் பகிர்ந்து கொள்ளப்படும் தொன்மங்களும், குறிப்புப் பொருள்களும் (Denotations) கருத்தியலுக்கும், குறிப்பீட்டாக்கத்திற்கும் அடிப்படையாக அமைபவை.

குறிப்பீட்டாக்கத்தைச் சசூரின் கோட்பாட்டின்படி சற்று விளக்கலாம். சசூர் ஒரு குறி என்பது குறிப்பான், குறிப்பீடு இரண்டும் இணைந்தது என்பார். 'பசு' என்ற குறி ஒலிக்குறியாக உள்ளது. அது பசு என்ற நான்கு காலுடைய விலங்கைக் குறிக்கும் உருப் பொருளுக்கும், பசு என்ற உடன் நம் மனத்தில் தோன்றும் மனக்குறிக்கும் சேர்த்தே பொருள் கொடுக்கிறது. இந்த உறவைப்



இதே 'பசு'வைப் புனிதம், அமைதி என்ற பொருள் வெளியில் உள்ளவற்றோடு தொடர்பு படுத்துவதைக் குறிப்பீட்டாக்கம் எனலாம். இந்தக் குறிப்பீட்டாக்கம் என்பது ஒவ்வொரு பண்பாட்டிற்கும் தனித்தனியானது; பண்பாடு சார்ந்து அமைவது.

இந்த நிலையில் கருத்தியல்களும் மொழி வழியாகவோ மொழி அல்லாத பிற செயல்களின் வழியாகவோ புலப்படுத்தப்படலாம். அவ்வாறான புலப்படுத்தலில் மொழியின் குறிப்புப் பொருள்களும், தொன்மங்களும் கருத்தியல் வெளிப்பாட்டிற்குப் பெரிதும் உதவும். இவ்வாறு தொன்மங்களும், மொழிவழியாக அமையும் பனுவலும் கருத்தியலின் பண்பை நிலை கொள்ளச் செய்கின்றன. கருத்தியலுக்கும் குறிப்பீட்டாக்கத்திற்கும் இடையே உள்ள உறவைப் பின்வரும் படம் தெளிவாகக் காட்டும்.



நம்பிக்கைகளுக்கும் விழுமியங்களுக்கும் ஒரு வடிவம் கொடுப்பவை குறிகளாகும். இக்குறிகள் மொழியாகவும், நடத்தையாகவும் அமையலாம். இக்குறிகளைத் தொடர்ந்து பயன்படுத்துவதன் வழியாகக் கருத்தியலுக்கு உயிர் ஊட்டப் படுவதுடன் புதிய கருத்தியல்களை உருவாக்கவும் வழிவகை

நம்பிக்கைகளும் வெளியிடப்படும் பொழுது, அவை மக்களை, ஒத்த பண்பாட்டினராக இனங்காணவும் செய்யும் (பிஸ்க். 1982).

கருத்தியலை உறைந்துபோன விழுமியங்கள் என்பதாக அல்லாமல் ஒரு நடத்தையாகக் கொள்ளவேண்டும் என்பார் பிஸ்க். ஒரு குறிப்பிட்ட கருத்தியலுக்கு ஒருவர் ஆட்படும் பொழுது, அக்கருத்தியலுக்கேற்ப நடத்தையும் வெளிப்படும். கருத்தியலின் மிக முக்கிய அங்கமே அதன் தேர்வுத் தன்மையும், மறைத்தல் தன்மையும்தான். இத்தகைய மறைத்தல் திரித்துக் கூறுதல் என்பன, தான் சார்ந்த ஈடுபாட்டைக் காட்டவும், அதிகாரத்தைக் காட்டவும் பயன்படுத்தப்படுபவையாகும். அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள உருவாக்கும் போலியான உணர்வுகளைத் தகவல் தொடர்புச் சாதனங்கள் வழியாகப் பரப்புவதன் மூலம் கருத்தியல் பரவலாக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு நபரைப் போராளியாகவும், தீவிரவாதியாகவும் பார்க்கும் பார்வை கருத்தியல் சார்ந்ததாகும். தகவல் தொடர்புச் சாதனங்கள், கல்வி, அரசியல், வெளியீடுகள் வழியாக இவை பெருமளவில் பரப்பப்படும் பொழுது அதிகாரக் கருத்தியல் வலுப்பெறுகிறது. இத்தகைய ஆதிக்கம், பாட்டாளி வர்க்கத்தினரது பணிவை இயற்கையானதாகவும் மாற்றிக் காட்டிவிடும்.

1.3. கருத்தியல் மறு உற்பத்தியாக்கம்

கருத்தியல்கள் சமூகச் செயல்பாடுகளாலும், பேச்சுக்கள், உரைகள் வழியாகவும் மறு உற்பத்திச் செய்யப் படுகின்றன. கருத்தியல் உற்பத்தியாக்கம் என்பது தொடர்ச்சியான நிலைபெற்ற செயல்பாடாகும். கருத்தியல்கள் புதிய குழுவினருக்கு அறிமுகமாகும் பொழுதோ, புதிய பயன்பாட்டாளர்கள் வரும் பொழுதோ மறு உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு சமுதாயத்தின் கருத்தியல்கள், சமுதாயவயவாக்கத்தின் வழியாகவோ, பிற செயல்பாடுகளில் பங்கேற்பதன் வழியாகவோ (கற்றல், சொற்பொழிவு) புதிய நபர்களுக்கு அறிமுகம் செய்யப்படுவதுடன் அவர்களாலும் பயன்படுத்தப்படுகின்றன.

கருத்தியல் உற்பத்தியாக்கம் என்பதைச் சமூக நிலையில் பின்வரும் வழிகளில் காணலாம். அவை:

1. அமைப்பு-செயல்பாடு என்ற நிலை

இந்நிலையில் ஓர் அரசு அமைப்போ, நிறுவனமோ கருத்தியலை உருவாக்கி அதைச் செயல்படுத்தும். இது மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் செயல்பாடாக அமையும். கருத்து நிலையிலான நம்பிக்கைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கப்படுவது இந்நிலையில்தான்.

2. செயல்பாடு-அமைப்புநிலை

இந்த நிலையில் மக்களிடம் பொதுவாகப் பகிர்ந்து கொள்ளப்பட்ட, நிலைபெற்ற தொடர்ச்சியான கருத்தியல்கள் ஓர் அமைப்பாக உருவாக்கப்பெறும். இது கீழிருந்து மேல் செல்லும் செயல்பாடாக இருக்கும்.

அதேபோலக் குழுக்கருத்தியல் தனி நபர்களுக்குச் செல்லுதலும், தனிநபர் கருத்தியல் ஒரு குழு உருவாவதற்கும் அடிப்படையாக அமையலாம். கற்பித்தல், உரையாடல், சொற்பொழிவு போன்ற செயல்பாடுகளிலும் மொழியின் பல்வேறு வடிவங்களிலும் (பேச்சு, எழுத்து, கவிதை, கட்டுரை, முதலியன) கருத்தியல்கள் வெளியிடப்படலாம்.

1.4. கருத்தியல் உரைக்கோவை அமைப்புக்கள்

கருத்தியல் உரைக்கோவை என்பது ஒருவரின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் உரைக்கோவையாகும். இந்நம்பிக்கைகள் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ அமையலாம். இவ்வுரைக் கோவையின் மிக முக்கியச் செயல்பாடு, அது கேட்பவரின், அல்லது வாசிப்பவரின் மனத்தில் ஒரு தூண்டல் விளைவை ஏற்படுத்தவேண்டும். கருத்தியல் உரைக்கோவை வழியாகக் கேட்பவரின் மனநிலையைத் தங்களின் நம்பிக்கை, குறிக்கோள், விருப்பத்திற்கு ஏற்ப மாற்றவும் செய்ய முடியும்.

உரைக்கோவை எவ்வாறு கருத்தியலை வெளிப்படுத்தி நிற்கிறது என்பதோடு, அது எவ்வாறு பிறரால் பெறப்படுகிறது என்பதும், முக்கியமானவையாகும்.

கருத்தியலை வெளிப்படுத்தக் குறிப்பிட்ட மொழி அமைப்பு, குறிப்பிட்ட மொழிவடிவம்தான் பயன்படுத்தப்படவேண்டும் என்று கூறவியலாது. ஆனால் ஒவ்வொரு அமைப்பும் வடிவமும்

கருத்தியல் வெளிப்பாடுகள் இரண்டு நிலைகளில் அமைகின்றன. அவை.

1. கருத்தியல் தொடர்பான நம்பிக்கைகளைப் பொதுவாக வெளிப்படுத்தல்.
2. நிகழ்வுகளிலும், சூழல்களிலும் குறிப்பிட்ட நம்பிக்கை களை மறைமுகமாக வெளிப்படுத்துதல்.

எனலாம்.

ஒரே உரைக்கோவை அமைப்பு, ஒரு சூழலில் கருத்தியல் வெளிப்பாடாகவும், வேறு ஒரு சூழலில் கருத்தியல் அற்றதாகவும் செயல்படலாம். இந்நிலை பயன்படுத்துவோரின் விருப்பம், குறிக்கோள், தான் ஏற்றுள்ள பாத்திரம்., ஒரு குழுவின் செயல் ஆகியவற்றால் அறியப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே, சூழலைப் பொறுத்தவரையில், இரண்டு அமைப்புகளைக் குறிப்பிடலாம். அவை,

1. புலப்பாட்டுச் சூழல்
2. புலப்பாட்டில் பங்கேற்பாளர் பங்கு

புலப்பாட்டுச் சூழல் என்பது மேடைப் பேச்சு. சட்டசபை உரை, துண்டு அறிக்கை போன்றன கருத்தியல் தூண்டல் முறையை வெளிப்படுத்தும் தன்மை கொண்டன.

பங்கேற்பாளரின் பங்கு என்ற அமைப்பில் அரசியல் வாதியாக , பெரும் முதலாளியாக, சினிமா நட்சத்திரமாக ஒரு சில தகுதிகளின் அடிப்படையில் சில கருத்தியல்கள் வெளியிடப் படலாம். கருத்தியலை, இத்தகைய சமூகத்தகுதிகளைக் கொண்டவர்கள் வழியாக அறிமுகம் செய்யும் பொழுது, ஒரு அதிகாரத் தன்மையும் நம்பகத்தன்மையும் வெளிப்படும்.

அதேபோலக் கருத்தியலை வெளிப்படுத்தும் நாடகம், சினிமா போன்றவற்றில் கதாநாயகன், வில்லன் போன்ற பாத்திரங்கள் வழியாகக் கருத்தியல் வெளிப்படலாம். ஒவ்வொரு பாத்திரத்தைப் படைப்பதற்கும் ஒவ்வொரு கருத்து முன்னரே சமுதாயத்தில் நிலை நிறுத்தப்பட்டிருக்கும். இத்தகைய முன் கருத்துக்களின் அடிப்படையில் கருத்தியலை வெளிப்படுத்தலாம்.

பயன்படுத்தப்படும் விதமும் கருத்தியல் வெளிப்பாட்டிற்கு உதவலாம். ஒரு கருத்தியலை வெளிப்படுத்தும் உரைக்கோவை, பனுவலாக இருக்கும்பொழுது, பனுவலில் உள்ள எழுத்துக்களின் மாறுபாடுகூடக் கருத்தியலை வெளிப்படுத்தும். செய்தித்தாள்களில் இடம் பெறும் தலைப்புக்கள், பெரிய எழுத்துக்கள், இடம்பெறும் இடம் ஆகியன கருத்தியல் வெளிப்பாட்டிற்குச் சான்றுகளாகும்.

வாக்கியநிலையில், வாக்கியங்களின் அமைப்பு, எந்த வகையான வாக்கியம் ஆகியனவும் கருத்தியல் சார்ந்தவை. வாக்கிய நிலையில் பின்வரும் கூறுகள் கவனிக்கத்தக்கன.

1. வாக்கியங்கள், சொற்கள் வரும் முறை.
2. செய்வினை/செயப்பாட்டுவினை வாக்கியங்கள்
3. எழுவாய் வெளிப்படையாகவோ, மறைந்தோ வரும் நிலை
4. பதிலீட்டுப் பெயர்களின் பயன்பாடு அவை வெளிப் படுத்தும் அதிகார உறவுகள்
5. இனங்காணல் X ஒதுக்கல் என்ற நிலையில் வாக்கியத்தில் இடம் பெறும் நாம் X பிறர் என்ற அமைப்பு.

மொழி நிலையில், கேட்போர்/வாசிப்போரைக் கவரும் வகையில் அமைக்கப்படும் திரும்பத் திரும்ப வருதல், நீக்குதல் பதிலியாக வருதல், உவமை, உருவகம், முரண்கள் ஆகியன கருத்தியல் வெளிப்பாட்டிற்கு உதவுவன.

ஒரு பனுவல்/கவிதையின் தலைப்புகூடக் கருத்தியலை வெளிப்படுத்தும். ஒரு பொருண்மையின் பெரும் அமைப்பு என்ற நிலையில் இத்தலைப்பு அமைவதால் கூறவந்த மொத்தப் பொருண்மையை முன்னிறுத்தும் தன்மை கொண்டது தலைப்பு.

அதேபோலப் பனுவலில் வரும் பேச்சுச் செயல்பாடுகளான (Speech Acts) எச்சரித்தல், ஏவுதல், நம்பிக்கை வெளிப்படுத்தல் போன்றன அதிகாரக் கருத்தியல் சார்பானவை. எனவே மொழிக் கூறுகளின் தன்மை, அவை பயன்படுத்தப்படும் முறை, பயன் படுத்தப்படும் சூழல் ஆகியவற்றை வைத்துக் கருத்தியலை விளக்

1.5. கருத்தியலின் அமைப்பு

எந்த ஒரு கருத்தியலாக இருந்தாலும் அதை ஓர் அமைப்பு நிலையில் ஆராயலாம். அந்த வகையில் பின்வரும் ஆறு கூறுகள் மிக முக்கியமானவையாகும். அவை :

1. உறுப்பினர்கள், 2. செயல்கள், 3. குறிக்கோள், 4. விழுமியங்கள், 5. சமூகநிலை மற்றும் குழு உறவுகள், 6. சமுதாய வளமைகள்.

1. கருத்தியல் என்பது ஒரு குழுவினரது நம்பிக்கைகள் என்ற நிலையில் அதில் உள்ள உறுப்பினர்களது நிலை அறியப்படவேண்டும். அவை பின்வரும் வினாக்களின் வழி அறியப்படலாம்.

1. நாம் யார்?
2. நாம் எங்கிருந்து வந்தோம்?
3. பார்ப்பதற்கு எவ்வாறு இருப்போம்?
4. நம்மவர்கள் யாவர்?
5. நம்முடன் இணையத் தகுதி பெற்றவர்கள் யாவர்?

2. கருத்தியல் என்பது ஒரு நடத்தை என்ற நிலையில் பின்வருவன சிந்திக்கத்தக்கன.

1. நாம் என்ன செய்கிறோம்?
2. நம்மிடம் எது எதிர்பார்க்கப்படுகிறது?
3. நாம் எதற்காக இங்கே இருக்கிறோம்?

3. கருத்தியல் ஒரு நடவடிக்கை அல்லது செயல்பாடாக வெளியிடப்படும்பொழுது அதன் குறிக்கோள்கள் விளக்கப் படலாம்.

1. நாம் இந்தச் செயலை ஏன் செய்கிறோம்?
2. நாம் எதை அடைய விரும்புகிறோம்?

4. கருத்தியலுக்கான விழுமியங்கள் என்ற நிலையில் பின்வருவன

1. நம்முடைய தலையாய விழுமியங்கள் எவை?
2. நம்மையும் பிறரையும் எவ்வாறு மதிப்பீடு செய்கிறோம்?
3. நம்முடைய தனித்துவம் என்ன?

5. கருத்தியலில் பங்கேற்பவர்களின் சமூக நிலையும், சமூக உறவுகளும் அதிகாரத்தைக் காட்டவல்லன. அந்த நிலையில்,

1. நம்முடைய சமூகத் தகுதிகள் யாவை?
2. நம்முடைய எதிரி யார்?
3. நம்மைப்போன்றவர் யார்? நம்முடைய எதிரி எத்தகையவர்?

6. கருத்தியலுக்கு அடிப்படையாக அமையும் மற்றொன்று சமுதாய வளமையாகும். ஒத்த கருத்தியலைக் கொண்டுள்ள வர்களின் சமுதாய வளமை என்ன? எத்தகைய சமூக வளமைகளை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்?

மேலே குறிப்பிட்ட கருத்தியல் அமைப்புகள் இனங் காணலுக்கும் இன ஒற்றுமைக்கும் அடிப்படையாக அமைபவை.

1.6. மொழிவழிக் கருத்தியல்

மொழி வழியாக வெளிப்படும் கருத்தியலைப் பின்வரும் எடுத்துக் காட்டின் வழியாக விளக்கலாம்.

> *"தொடர்ந்து வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி செய்யும்முறையை அறிந்திருந்தும், பெரும் பான்மையோர் பட்டினியில் இருப்பதற்குக் காரணம் அறிவியல் முடிவுகள் செயல்படுத்தப் படாமையே"*

மேலே குறிப்பிட்ட ஒரு வாக்கியம் ஒரு கருத்தைத் தெரிவிக்கிறது. அக்கருத்தைக் கூறுபவர் ஒருவர். அவரின் சமுதாயப் பின்னணி ஒன்றாக உள்ளது. அதை நடைமுறைப்படுத்துபவர் வேறொருவர். அதாவது இங்குக் குறிப்பிடப்படும் இரு பிரிவினரும் அறிவியல் நெறி முறையைப் பின்பற்றும் சமுதாயமாக இருந்தால், அங்கே கருத்தியல் என்பது எதுவும் இல்லை எனலாம். ஆனால்,

அவ்வாறு இல்லாத நிலையில் பின்வரும் எதிர் நிலைகளைக் காணலாம்.

அறிவியல் விவசாயம் X பண்டைய விவசாயம்

நகரம் X கிராமம்

சந்தைப் பொருளாதாரம் X தேவை சார்ந்த பொருளாதாரம்

வளர்ச்சி X நிலைப்பு

மாற்றம் X பழமை

இந்த எதிர்நிலைகளின் அடிப்படையில் பேசுபவர் ‘நாம்’ என்ற அறிவியல் பண்பாட்டைச் சார்ந்தவராகவும், ‘பிறர்’ என்பவர் அறிவியல் சாராதவர் என்றும் புரிந்து கொள்ளலாம். கருத்தியலின் அடிப்படையே நாம் X பிறர் என்பதுதான்.

மேலே குறிப்பிட்ட அணுகுமுறையில், பாவேந்தரின் மொழி பற்றிய கருத்தியலை ஆராயலாம். பாவேந்தரின் கருத்தியல், அன்றைய சமுதாயத்தில் அதிகார வர்க்கத்தினர் உருவாக்கிய கருத்துக்களுக்கு எதிர்நிலையில் கட்டமைக்கப் பட்டதாகும். அக்கருத்தியலைக் கருத்தியல் அமைப்பின் அடிப்படையில் ஆராயலாம்.

பாவேந்தரின் தமிழ், தமிழர் தொடர்பான கருத்தியல்கள் பின்வரும் அமைப்பில் இருப்பதை அறியலாம்.

1. தமிழின் பழமையும் தொன்மையும்
2. தமிழரோடு உறவுடையவர் யார்? யார்?
3. தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்?
4. தமிழர்கள் எதை அடைய வேண்டும்?
5. தமிழர் பண்பாடு எது?
6. பிறரின் பண்பாடு எது?

இக் கருத்தியல் அமைப்பைப் பாவேந்தர் வெளிப்படுத்தும் முறைகள் பல்வேறு வகையாக உள்ளன. கருத்தியலுக்குத் தன்னை நடுநிலைப்படுத்தித் தனக்குத் தமிழ் எத்தகையது? என்றும், தன்னைப் போலவே “நமக்கு” என்ற நிலையில் தமிழர்களுக்கு மொழி எவ்வாறானது? என்றும் கூறுவார். எனவே, கருத்தியல் வெளிப்பாட்டை நான் X நாம், நாம் X பிறர், தெற்குXவடக்கு என்ற பொது நிலையில் காணலாம்.

1.7. தமிழின் தொன்மை

கருத்தியல்கள் அதிகாரச் சூழலில் தோற்றம் பெறுவதும் அதிகார வர்க்கத்தினரது ஆளுமைக்கு உட்பட்ட தகவல் தொடர்புச் சாதனங்களால் பரவலாக்கப்படுவதும் இயல்பானவை. அதிகார இனம் தங்கள் இனம், மொழி பற்றிய உயர்வான கருத்துக்களைச் சமுதாயத்தில் பரவ விடுவதன் வழியாகப் பிற இனம், மொழி ஆகியவற்றைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளும். பிற இனம், பிறமொழி ஆகியன தாழ்வானவை என்ற கருத்து தன்மொழி உயர்வைக் காட்டுவதன் வழியாகவும் தொடர்ந்து கூறுவதன் வழியாகவும், நிலைநிறுத்தப்படும். இத்தகைய சூழலில் எழும் எதிர்ப்புக் குரல் வேறு வகையான கருத்தியலைக் கட்டமைக்கிறது. பாவேந்தர் காலச் சூழலில் வடமொழி ஆதிக்கம், வடமொழி உயர்வு, வடமொழியின் தொன்மை ஆகியன கருத்தியலாகப் பரப்பட்ட சூழலில், இதற்கு எதிரான கருத்தியலை உருவாக்க வேண்டிய சூழல் எழுகிறது.

ஒவ்வோர் இனத்திற்கும், மொழி என்பது பொதுவான இன அடையாளமாக இருக்கும். அனைத்துத் தாய் மொழியாளர்களும் தங்களது மொழி பற்றிய உயர்ந்த மதிப்பீடுகளையே கொண்டிருப்பர். ஆனால் ஆதிக்கச் சூழலில் இம்மதிப்பீடுகள் மாற்றப்படலாம். இத்தகைய ஆதிக்கச் சூழலில், மொழியின் தொன்மையும், மொழியின் சிறப்பும் போற்றப்படுவது அவசியமான செயல்பாடாகிறது. மொழிகளின் தொன்மையை அறிவியல் அடிப்படையில் விளக்குவது ஒரு நிலையாகும். ஆனால், மொழியின் தொன்மை என்பது இறைக் கோட்பாட்டோடும், உலகத் தோற்றக் கோட்பாட்டுடனும் இணைக்கப்படும் பொழுது அது கருத்தியலாகிறது. மொழியின் தொன்மையும், மொழியின் இனிமையும், ஆதிக்கச் சூழலில் பேசப்படும் பொழுது, மொழிவழியாக இன உணர்வை ஊட்டுவதான செயல் பாடாகவே அமையும். இந்த நிலையில் தமிழ் மொழியின் தொன்மை தொடர்பான பாவேந்தரின் கருத்துக்களைக் காணலாம்.

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்களோடும்
மங்கு கட[illegible] இவற்றோடு பிறந்த தமிழுடன்
பிறந்தோம் நா[illegible] (180)

மானிடம் என்னுமோர் ஆதிப்பயிர் - தமிழ்
மக்களென் றேகுதித் தாடுவோம் (237)

..........மனித வாழ்வை
இனியநற் றமிழே நீதான்
எழுப்பினை!...........(446)

நிலவே நீ முன் நடந்ததை கூறுவாய்! மெய்யாய்க் கூறுவாய்
இங்குச் செந்தமிழையும் உன்னையும் கூட்டி
இயற்கை அன்னை வளர்த்த திலையோ பாலூட்டி (1003)

முன்னைத் தோன்றிய மக்கள் முதன்முதல் பேசிய
மொழியே! மொழியே..................(1042)

மொழியில் உயர்ந்தது தமிழ் மொழியே-பண்டு
முதல் நாகரிகமும் பழந்தமிழ் மக்களே! (1047)

ஆதி மனிதன் தமிழன்
ஆதி மனிதன் தமிழன்தான்
அவன்மொ ழிந்ததும் செந்தமிழ்த்தேன் (1668)

சொல்லார்ந்த தமிழ்மொழிக்கும் அதனின் தோற்றம்
தொல் பழமை அடிமுடியைக் கண்டாரில்லை (1863)

என்று தமிழின் தொன்மையைக் கூறுவார்.

பாவேந்தரின் கருத்துக்கள், அவர்சார்ந்த இயக்கக் கருத்துக்களாக இருந்து, தமிழ் தமிழர் சார்ந்த கருத்தியலாகத் திகழ்கின்றன. இவை அனைத்தும் வடமொழி தேவபாஷை என்ற கருத்தியலுக்கு எதிரான கருத்தியலாகக் கருதலாம்.

தமிழின் தொன்மையையும், தமிழரின் தொன்மையையும் கூறியதைப் போல் தமிழ்மொழியின் இனிமையைப் பற்றியும் பாவேந்தர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். பாவேந்தரின் இனிமைக் கருத்தியலை வெளிப்படுத்திய விதம் கருத்தியல்சார் குழு மனப்பான்மையை உருவாக்குவதற்காக என்று எடுத்துக் கொள்ளலாம். தமிழின் இனிமை வழியாக "நான்-நாம்" என்ற ஒருமைப்பாட்டை விளக்குவதை உணரலாம்.

தமிழின் இனிமை, இன்பத்தமிழ், என்ற தலைப்புகளில் அமைந்த பாடல்களில் பாவேந்தர் தமக்குத் தமிழ் எத்தகையது

என்பார். மங்கை ஒருத்தி தரும் சுகம் கூடத் தமிழுக்கு இணை இல்லை என்ற தன்னுணர்வை வெளிப்படுத்துவார். அதேபோல எங்கள் தமிழ் என்ற தலைப்பில்,

இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்
கின்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!

என்று மொழியையும் இனிமையையும் பொதுமையாக்குவார்.

தமிழின் இனிமை வழியாக நான்Xநாம் என்பதைக் கட்டமைத்த பாவேந்தர் தமிழ் மொழியைக் காத்தல் என்ற நிலையிலும் தம்மை முன்னிறுத்திப் பிறரிடம் அதே நிலைப்பாட்டை எதிர் நோக்குவார்.

சலுகை போனால் போகட்டும் - என்
அலுவல் போனால் போகட்டும்
தலைமுறை ஒரு கோடி கண்ட என்
தமிழ் விடுதலை ஆகட்டும் (1830)

என்றும்,

தமக்கொரு தீமை என்று நற்றமிழர்
எனை அழைத்திடில் தாவி
இமைப்பினில் ஓடித் தரக்கட வேன் நான்
இனிதாம் என் ஆவி (240)

என்றும் மொழிக்காப்பிற்கு எதையும் இழக்கலாம் என்பார்.

தமிழ் மொழியினைக் காப்பதற்கு உயிரையும் தருவதற்கு முன்வரவேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர் பாவேந்தர். மொழிகாத்தல் என்பது மிக முக்கியமான செயல்பாடாகக் கொள்ளவேண்டும் என்பதைப் பாவேந்தர் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் 'நான் x நாம்' என்ற கருத்தமைப்பில் கூறுவார்.

1.8. தமிழும் உயிரும்

தமிழ் என்பது தமக்கு மட்டும் உயிர் என்று அல்லாமல் தமிழர்கள் அனைவரும் அதை உயிராகப் பேணவேண்டும் என்பார். உயிர் என்ற கருத்தைப் பற்றிய பாவேந்தரின் கவிதை வெளிப்பாடுகள் பல நிலைகளில் உள்ளன.

செந்தமிழே! உயிரே நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித்தேனே! (237)

...இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்

...தமிழும் நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர் (1764)

...உன்னை வளர்ப்பன தமிழா! உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே

தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் (175)

தமிழ் எங்கள் உயிர் என்பதாலே - வெல்லுந்
தரமுண்டு தமிழருக்கிப்புவி மேலே (178)

கமழும் உன்தமிழினை உயிரென ஓம்பு (237)

விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி - அது
வீரத் தமிழ்மக்கள் ஆவி என்போம் (719)

ஒரு தமிழன் தமிழர்க்கே உயிர் வாழ்கின்றான்
உயிர் வாழ்வோன் தமிழர்க்கே தனை ஈகின்றான் (790)

தமிழின் இனிமையைக் கூறிய பாவேந்தர், தமிழை உயிராகக் கருதுவதற்கு அடிப்படைக் காரணம் தமிழ்மொழி வழியான இனமீட்சி என்ற கருத்தியல் சார்ந்ததாகும். ஓர் இனத்தின் உயிர்நாடியே மொழிதான். பழம்பெருமை வாய்ந்த மொழியும், நாடும், பிறரின் ஆதிக்கச் சூழலில் இருக்கும் பொழுது மொழியை உயிர் என்ற குறிப்பீட்டோடு பயன்படுத்தி, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவார்.

உயிர் என்ற கருத்தைக் கருவாகக் கொண்டு புரட்சிக் கவி என்ற குறுங்காப்பியத்தைப் புனைவார். தமிழ்க்கவியின் வல்லமையைக் கதையாக்கித் தமிழ் உயர்வை மக்களிடையே வளர்க்கப் பாடுபடுவார். கருத்தியல் வெளிப்பாட்டில் கதாநாயகன், எதிர்த் தலைவன் என்று கருத்தமைப்பைத் தமது கருத்தியலுக்குப் பயன்படுத்திக் கொள்வார்.

தமிழறிந்த தால்வேந்தன் எனை அழைத்தான்
தமிழ்க்கவி யென்றெனை அவளும் காதலித்தாள்
அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ், என் னாவி
அழிவதற்குக் காரணமாயிருந்த தென்று
சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ! என்
தாய்மொழிக்குப் பழி வந்தால் சகிப்ப துண்டோ?
உமைஒன்று வேண்டுகின்றேன் மாசில் லாத
உயர்தமிழை உயிர்என்று போற்று மின்கள் ! (142)

அதேபோல 'எதிர்பாராத முத்தம்' என்ற தலைப்பில் அமைந்த படைப்பிலும் தமிழரின் உயர்விற்காகக் கதைத் தலைவன் செத்தான் என்பதாகப் படைப்பார்.

இத்தகைய தமிழ் உயர்வே பிற்காலத்தில் தமிழ்மொழி மீட்சிக்கும் தமிழ்மொழி காத்தலுக்கும் அடிப்படையாக அமைந்தது.

1.9. நாம் X பிறர்

கருத்தியலின் அடிப்படைப் பாகுபாடே, நாம் X பிறர் என்பதுதான். பாவேந்தரின் நாம் X பிறர் என்ற கருத்தியல் அடிப்படை, தமிழர் X ஆரியர், தமிழர் X பார்ப்பனர், தமிழ் X வடமொழி, தமிழ் X இந்தி, தமிழ் X பிறமொழிகள், தெற்கு X வடக்கு என்ற பல்வேறு நிலைகளில் உள்ளது.

ஓர் உயிர்நான்!என் உயிர் இனம் திராவிடம்!
ஆரியன் அல்லேன் என்னும் போதில்
எத்தனை மகிழ்ச்சி ! எத்தனை மகிழ்ச்சி (784)

வீரம் பிறந்த நாட்டிற் பிறந்தவர்
வெற்றித் தமிழர் உலகிற் சிறந்தவர்
ஆரியர் அல்லர் ; மறைந்தி ருந்தே
அம்பு பாய்ச்சும் பூரியர் அல்லர் (1549)

என்று ஆரியரிடமிருந்து, தமிழர் வேறுபட்டவர்கள் என்பதை; உயர்ந்தவர் நாம் என்ற அடையாளத்தை; உயர்ந்த பண்பாட்டுச் சிறப்பு வழியாகவும், நடை, உடை, மொழி வழியாகவும் கட்டமைப்பார்.

நாமெல்லாம் திராவிடர்கள் என்ற எண்ணம்
நம்முளத்தில் வேரூன்ற வேண்டும்! மேலும்
நாமெல்லாம் ஒரே வகுப்பார் என்ற எண்ணம்
நன்றாக நம்முணர்வில் ஏற வேண்டும் (1523)

உடையினிலே ஒன்றாதல் வேண்டும்! உண்ணும்
உணவினிலே ஒன்றாதல் வேண்டும்! நல்ல
நடையினிலே ஒன்றாதல் வேண்டும் ! பேசும்
நாவிலும்எண் ணத்திலும்ஒன் றாதல் வேண்டும் (1524)

நாம் என்று ஒன்றுபடுத்தும் நிலையில், தமிழர்கள் தமிழர்களோடு இணைந்த திராவிடர்கள் என்றும் திராவிட மொழிகள் என்றும் ஒன்றிணைப்பார்.

பண்டைத் தமிழும், தமிழில் மலர்ந்த
பண்ணிகர் தெலுங்கு துளுமலையாளம்
கண்டை நிகர் கன்னடமெனும் மொழிகள்
கமழக் கலைகள் சிறந்த நாடு (900)

தமிழர்கள், திராவிடர்கள் என்று ஒன்றுசேர்க்கும் அதே நேரத்தில் தமிழர் பண்பாடு, ஆரியப் பண்பாட்டிலிருந்து வேறுபட்டது என்பதையும் விளக்குவார்.

ஒருத்தியை ஐவர் மணப்பது உங்கள் நாகரிகம்!
பிச்சை புகல் உயர்வென்னல் உங்கள் நாகரிகம்!
வருபசிக்கு மானம்விடல் உங்கள் நாகரிகம்!
உயிர்கொன்று வேள்விசெயல் உங்கள் நாகரிகம்!
உருவணக்கம் செய்குவதும் உங்கள் நாகரிகம்!
மங்கையரை இழிவு செயல் உங்கள் நாகரிகம்!
பெருமக்கள் ஒருதாயின் மக்களெனச் சொன்னால்
பெருந்தொகை வேற்றுமை நாட்டல் உங்கள் நாகரிகம்!
(1204)

என்று ஆரியப் பண்பாட்டுக் கூறுகளையும்.

ஒருத்தி ஒருத்தனை மணத்தல் எங்கள் நாகரிகம்
ஒருத்தன் ஒருத்தியை மணத்தல் எங்கள் நாகரிகம்
ஒருவன் ஒருத்திக்கு நிகர் எங்கள் நாகரிகம்
உலக மக்கள் நிகர் என்பது எங்கள் நாகரிகம்

கருதிச்செய் தீமைக்குக் கழுவாய் ஒன்றில்லை;
காவலனின் பொறுப்பதெனல் எங்கள் நாகரிகம் ;
பெருத்த உடல் வீழ்ந்தபின் பெரிய நிலை தேடல்
பெருந்தவறே என்பதுதான் எம் நாகரிகமே! (1205)

என்று தமிழரின் பண்பாட்டுக் கூறுகளையும் தருவார். இக் கருத்தியல் வெளிப்பாட்டிற்கு அவர் கையாளும் உத்தியும் கருத்தில் கொள்ளத்தக்கது. குறிஞ்சித்திட்டு என்ற கதைப்பாடலில் தமிழ்ப் பெண் X ஆரியப்பெண் என்ற எதிர்நிலை யமைப்பில் தாமரை என்ற பெண், விநோதையிடம் கூறுவதாக அமைப்பார். அதேபோல 'ஒழுக்கமில்லாதவர்கள் அவர்கள்' என்ற தலைப்பில் அமைந்த கவிதையிலும் ஆரியப்பண்பாட்டினைக் காட்டுவார்.

ஆரியர்கள், வடக்கர்கள் செய்த சூழ்ச்சியின் விளைவே, தமிழரின் இந்தத் தாழ்ந்த நிலை என்பதை வலுவான கருத்தாகக் கொண்டவர் பாவேந்தர்.

புலையொழுக்கம் கொண்டவர்கள் பொல்லா வடக்கர்
தலையெடுத்தார் இன்பத் திராவிடத்தின் தக்க
கலையொழுக்கம் பண்பனைத்தும் கட்டோ டொழித்து
நிலைபுரட்டி நம்நாட்டை நீளடிமை யாக்க...... (727)

என்றும்,

வடநாடு தென்னாட்டை வீழ்த்தச் - செய்த
வஞ்சங்கள் சிறிதல்ல தம்பி........(786)

என்றும்

கேரளம் என்று பிரிப்பதுவும் - நாம்
கேடுற ஆந்திரம் பியப்பதுவும்
சேரும் திராவிடர் சேரா தழித்திடச்
செய்திடும் சூழ்ச்சி அண்ணே (787)

என்றும் வடக்கு X தெற்குக் கருத்தியலோடு, வடவரின் சூ... யையும் வெளிப்படுத்துவார்.

வடக்கு X தெற்குக் கருத்திலைப் பாவேந்தர், வீட்டுக் கோழியும், நாட்டுக் கோழியும் என்ற தலைப்பில் அமை... கவிதை வழியாகவும் வெளிப்படுத்துவார்.

வடக்கன் தெற்குவாழ் தமிழர்க்கு அள்ளிக்
கொடுப்பதாய்ச் சொல்லிக் குதிக்கின்றார்கள்
...
இங்குளார் உழைப்பின் பயனை யெல்லாம்
வடவர் அடியோடு விழுங்கி வாழ்பவர்
....
கம்பு போட்டுக் கழுத்தை அறுக்கும்
வடக்கன் ஆட்சி போன்ற இடக்கு
நம் தாயகத்தில் நாம் கேட்டறியோம் (1684)

என்று வடக்கரின் சூழ்ச்சியைக் கதை வடிவிலும் வெளிப் படுத்துவார்.

இவ்வடக்கு - தெற்கு; தமிழன் - ஆரியன் என்ற கருத்தியலின் வெளிப்பாடுதான் பாவேந்தரின் இராவணன் பற்றிய கருத்துக்கள்

தென் றிசையைப் பார்க்கின்றேன். என் சொல்வேன்
என்றன் சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்குதடா!
அன்றந்த லங்கையினை ஆண்ட மறத்தமிழன்
ஐயிரண்டு திசை முகத்தும் தன்புகழை வைத்தோன் !
(213)

வடவரின் சூழ்ச்சியை வெல்லத் தமிழ் என்ற பெரு உணர்ச்சியைக் கைக்கொள்ள வேண்டும் என்பதே பாவேந்தர் கருத்து. அதை அவர்.

வடக்கினில் தமிழர் வாழ்வை
வதக்கிப் பின் தெற்கில் வந்தே
இடக்கினைச் செயநி னைத்த
எதிரியை, அந்நாள் தொட்டே
'அடக்கடா' என்று ரைத்த
அறங்காக்கும் தமிழே......... (448)
என்று கூறுவார்.

கருத்தியல் சொல்லாடல்களில் மிகமுக்கியமான ஒன்று யார் எதிரி? அவர்களுடைய செயல்கள் எவை? எவை.? என்பதாகும். ஆரியர், பார்ப்பனர்கள் தாம் தமிழுக்கு எதிர் என்பதைப் பல்வேறு இடங்களில் சுட்டிக் காட்டுவார்.

வஞ்சகர், வந்தவர் தமிழாற் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார் (239)

முந்திய காலத்து மன்னர் நம்
முத்தமிழ் நாட்டினில் தொத்திடு நோய்போல்
வந்த வடமொழி தன்னை - விட்டு
வைத்தத னால்வந்த தீமையைக் கண்டோம் (716)

வஞ்சக நரிகள் புலிக்காட்டை ஆளுமோ?
வடக்கர் எம்மை ஆளவும் மாளுமோ? (789)

தமிழர்களின் சிறப்பையும் தமிழ் மொழியின் சிறப்பையும் பலவேறு இடங்களில் கூறி, அத்தகைய தமிழர்கள் விழிப்புணர்வு பெறவேண்டும் என்பதை நோக்கமாகக் கொள்வார். "புகழ்பட வாழ்பவன் தமிழன்" என்றும் "பொதுநலம் புரிபவன் தமிழன் (1048), நாடாண்டாயே, தமிழே நீ ஞாலம் ஆண்டாய் வாழ்வும் ஈந்தாய் (1001)" என்றும் தமிழரின் நிலையைக் கூறுவார்.

கேளீர் தமிழ் வரலாறு - கேட்கக்
கேட்க அதுநமக்கு முக்கனிச் சாறு (1452)

என்று தமிழின் வரலாற்றை நாவலந்தீவின் முதல் மொழியாகக் காட்டிப் பெருமித உணர்வை ஏற்றுவார்.

1.10. தமிழ் X பிறமொழிகள்

மொழிக் கருத்தியல் என்ற நிலையில் முன்னர்க் கூறியது போல வடமொழி, இந்தி, கொச்சை மொழி, ஆங்கிலம் போன்றவற்றைப் பற்றித் தமது கருத்துக்களைத் தெரிவிப்பார். அவை தூய்மையாக்கச் சொல்லாடல் பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. மொழி என்பது வாழ்வோடு பின்னிப் பிணைந்தது. மொழி அழிந்தால் வாழ்வு மங்கும் என்பதை உயர்வு X தாழ்வு என்ற நிலையில் வெளிப்படுத்துவார்.

தமிழ் என்னில் எம்முயிர்ப் பொருளாம் - இன்பத்
தமிழ்குன்றுமேல் தமிழ்நாடெங்கும் இருளாம் (178)

நைந்தா யெனில் நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே (237)

வல்லமை சேர்க்கும் வாழ்வை யுண்டாக்கும்
வண்டமிழ் நைந்திடில் எது நம்மைக் காக்கும் (1043)

பாவேந்தரின் இத்தகைய சொல்லாடல்கள் வழியாகப், பிறமொழி, பிற இனத்தினரது ஆதிக்கத்தை உணர்ந்து கொள்ளலாம்.

1.11. கருத்தியலும் கவிதைத் தலைப்பும்

கருத்தியல் வெளிப்பாட்டில் தலைப்புகள், உட்தலைப்புகள் ஆகியன முக்கிய இடத்தைப் பெறுவன என்பது முன்னர்க் கூறப்பட்டது. பாவேந்தர் தாம் கூறவந்த கருத்தின் சாரத்தைத் தலைப்பாக்கிக் கவிதைகள் புனைந்துள்ளார். அத்தலைப்புக்களில் ஒரு சிலவற்றைத் தொகுத்துப் பார்த்தாலே அவரின் தமிழ் தொடர்பான கருத்தியலை விளங்கிக் கொள்ள முடியும்.

தமிழ் பற்றிய அவர் கவிதைகள் பின்வரும் தலைப்புக்களில் அமைந்துள்ளன.

தமிழ் இனிமை, இன்பத்தமிழ், தமிழ் உணர்வு, தமிழ்ப் பேறு, எங்கள் தமிழ், தமிழ்க்காதல், தமிழ்க்கனவு, தமிழ் வளர்ச்சி, முதலில் உண்டானது தமிழ், இயற்றமிழ் எழில், தமிழர்க்குத் தமிழ் உயிர், சாகாத் தமிழ், கலைகள் தந்த தமிழ், வெற்றித் தமிழ், படைத்தமிழ், செந்தமிழ்ச் செல்வம், தமிழ் வரலாறு, தமிழுக்கு வாழ்வதே வாழ்வு, சாகின்றாய் தமிழா, தமிழ்நாட்டில் ஐந்தாம் படை, தமிழர்மீள வேண்டும், தமிழைக் கெடுப்பவர் கேடு, தமிழ் விடுதலையாகட்டும் முதலியன.

தமிழின் மேன்மையை விளக்குவதன் வழி தமிழர்களின் நிலையை மாற்றிவருவதும் பாவேந்தரின் முக்கியச் செயல் பாடாகும். அதே நேரத்தில் பிறமொழிகளைப் பற்றியும், பிறரைப் பற்றியும் கூறித் தமிழின் உயர்வை வெளிப்படுத்துவார். இந்தி எதிர்ப்புப் பாட்டு, இந்தி கட்டாயம், இந்தி ஒழிப்பது கட்டாயம், வடமொழி எதிர்ப்பு, இந்திக்கு உன்திறம் காட்டு என்று வேறு மொழிகள் பற்றியும் திராவிடர் ஒழுக்கம், திராவிடர் கடமை என்ற தலைப்புகளில் செய்ய வேண்டிய பணிகள் பற்றியும் குறிப்பிடுவார்.

1.12. முடிவுரை

பாவேந்தர் தமிழ்ச் சமுதாய வளர்ச்சியை, அதன் ஒழுக்கப்பாட்டை, உயர்வை, மனித நேயத்தை, இன மானத்தை,

மொழி உணர்வை, சமுதாயச் சீர்திருத்தத்தைத் தூண்டித் தமிழரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர். அவர்காலச் சமூக நிலையில் தமிழர்களை ஒன்றிணைக்க, விழிப்படையச் செய்ய, அவர் மொழியையே பலம் வாய்ந்த கருவியாகப் பயன்படுத்தினார். நைந்துபோன, தன்னிலை மறந்த தமிழர்களைத் தமிழ்மொழி, பண்பாடு வரலாறு வழியாகத் தட்டி எழுப்பி, உணர்வை ஊட்டியவர். வடமொழி ஆதிக்கத்திலிருந்து மீண்டு தமிழ் இன்று பல துறைகளிலும் சிறப்பாகச் செயல்படுவதற்கு அடிப்படைக் காரணம் பாவேந்தர் தமிழர்க்கு ஊட்டிய தமிழுணர்வே.

இத்தமிழ் உணர்வே, கருத்தியல் அமைப்பில், பல்வேறு நிலைகளில் வெளிப்பட்டுள்ளதை விரிவாகக் கண்டோம்.

தம்முடைய கருத்துக்களை, இன ஒற்றுமைக்காகவும், மொழி வளர்ச்சிக்காகவும், தான் X பிறர், வடக்கு X தெற்கு, தமிழ் X பிற மொழிகள் என்ற எதிர் நிலைகளை உருவாக்கி வெளியிட்டுள்ளார். அவர்தம் கவிதைகளுக்கு வைத்த தலைப்புக்கள்கூட அவரின் கருத்தியலுக்குத் துணை செய்வதாக அமைந்துள்ள பாங்கும் விளக்கப்பட்டது. இனி பாவேந்தரின் மொழி வளர்ச்சி தொடர்பான கருத்தியல்களை விளக்கலாம்.

இயல் இரண்டு

பாவேந்தரின் தமிழ் வளர்ச்சிக் கருத்தியல்

மொழித்திட்டமிடல் (Language Planning Theory) கோட்பாட்டு அணுகுமுறை

2.1. மொழிவளர்ச்சி

மொழி வளர்ச்சி என்பது சமுதாய வளர்ச்சியோடு தொடர்புடையது. சமுதாயம் வளர்ச்சியடையும் பொழுது அதனுடன் இணைந்து மொழியும் வளர்ச்சியடையும். இந்தச் சமுதாயவளர்ச்சி, தாய்மொழியின் வழியாக நடைபெறுகின்ற பொழுது, அச்சமூகத்தின் வளர்ச்சி பண்பாடு, விழுமியங்கள் சார்ந்த வளர்ச்சியாக இருக்கும். தாய்மொழியல்லாத பிற ஆதிக்க மொழிகளின் வழியாகச் சமுதாய வளர்ச்சி நடைபெறும் பொழுது அச்சமுதாயத்தின் மொழியும் பண்பாடும் அழியலாம். இத்தகைய சூழலில், தாய்மொழி வளர்ச்சி இன்றியமையாதது. பிறமொழி ஆதிக்கச் சூழலில் இவ்வளர்ச்சி திட்டமிட்ட நிறுவனச் செயல்பாடுகளினாலும், அரசியல், இயக்கச் செயல்பாடுகளினாலும் அமைய வேண்டியதாகிறது. இத்தகைய மொழி வளர்ச்சிக்கான மொழியியல் கொள்கைகள் உள்ளன. ஆனால் ஒரே மாதிரியான மொழியியல் அணுகுமுறைகளை எல்லாச் சமூகத்திற்கும் பொதுவானதாகப் பயன்படுத்த இயலாது. ஒவ்வொரு சமூகத்தின் சமூகச் சூழல், மொழிச் சூழல் ஆகியவற்றின் அடிப்படையில மொழியை அணுகவேண்டியுள்ளது. அதற்கான திட்டமிட்ட செயல்பாடுகள் உள்ளன. அவற்றின் அடிப்படையில் பாவேந்தரின் தமிழ் வளர்ச்சி குறித்த கருத்துக்களை அறிந்து கொள்ளலாம். மொழித் திட்டமிடுதல், மொழிவளர்ச்சி பற்றிய கோட்பாடுகளின் வழியாகப் பாவேந்தரின் தமிழ் வளர்ச்சி எண்ணங்களை மதிப்பீடு செய்யும் பொழுது, அவர் காலச் சமூகநிலை, மொழிநிலை, அந்தச்

சூழலில் அவரின் சிந்தனைகள் ஆகியவற்றை வெளிப்படுத்த இயலும். எந்த ஒரு மொழி தொடர்பான செயல்பாட்டையும், சமூக மொழியியல் அணுகுமுறையில் விளக்கும் பொழுது அச்செயல்பாட்டின் அடிப்படைக் கருத்தியல்களைப் புரிந்து கொள்ளலாம். பாவேந்தரின் தமிழ் வளர்ச்சி தொடர்பான கருத்துக்களை மதிப்பீடு செய்வது இதன் நோக்கமன்று. மாறாக, அவரின் சிந்தனைகளை மொழியியல் அடிப்படையில் விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது இப்பகுதி. எனவே, மொழிவளர்ச்சி மொழிச் சிக்கல்கள், அவற்றிற்கான தீர்வுகள் ஆகியன பொதுநிலையில் விளக்கப்பட்டுள்ளன. இவற்றின் பின்னனியில்தான் பாவேந்தரின் மொழிக்கருத்தியல்களைப் புரிந்துகொள்ள முடியும்.

2.2. மொழித்திட்டமிடுதல்

மொழித்திட்டமிடுதல் என்பது ஒரு துறையாக இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வளர்ந்துள்ளது என்றாலும் மொழித்திட்டமிடுதல் பற்றிய சிந்தனை சமுதாயத்தில் இருந்துதான் வந்துள்ளது. மொழிகள், மக்களின் பயன்பாட்டில் இருக்கும் பொழுது, பல்வேறு பயன்பாட்டிற்கு ஏற்பவும், சூழல்களுக்கு ஏற்பவும் மொழி பயன்படுத்தப்பட்டுதான் வந்துள்ளது. ஆனால், அத்தகைய பயன்பாடு ஒரு முறைப்படுத்தப்பட்ட நிலையில் இல்லாமல் இருந்திருக்கும். ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் மொழியைத் திட்டமிட்டுப் பயன்படுத்தும் பொழுது, மொழிப் பயன்பாடு சீர்மையாக இருக்கும்.ஆரம்ப கால கட்டங்களில் மொழியை ஏனைய சமூக வளங்களைப் போலத் திட்டமிட்டு வளர்க்க முடியுமா? என்ற அய்யம் நிலவியது. ஆனால் பல்வேறு நாட்டு மொழிப் பயன்பாடுகளை வைத்து, ஒரு மொழியைத் திறன்மிக்கதாகவும், தன்னிறைவு பெற்றதாகவும் மாற்றத் திட்டமிட்ட செயல்பாடுகள் தேவை என்று உணரப்பட்டது. இத்திட்டமிட்ட வளர்ச்சிக்கான கோட்பாடுகள் உருவாக்கப் பட்டன. இக்கோட்பாடுகளின் அடிப்படையில் பாரதிதாசன், பாரதி ஆகியோரின் மொழித் திட்டமிடுதல் கொள்கைகளை ஒப்பிட்டுப் பார்க்கலாம். மொழித்திட்டமிடுதலின் இரு வேறு அணுகுமுறைகளுக்கு இவர்களது மொழிச் சிந்தனைகள் உதவும். அவை தனியாக நான்காவது இயலில் விளக்கப்பட்டுள்ளன.

மொழித் திட்டமிடுதலைப் பற்றிப் பல்வேறு வரையறைகள் உள்ளன. மொழித் திட்டமிடுதல் என்பது ஒரு வகையான மொழி

பராமரிப்பு அல்லது மொழி மேலாண்மை என்று நியூஸ்டுபினி (1968) குறிப்பிடுவார். இவர் கருத்துப்படி மொழித் திட்டமிடுதலை மூன்று பிரிவுகளில் அடக்கலாம்.

அவை:

1. மொழிக் கொள்கைகளை உருவாக்குதல்
2. மொழி வளர்ச்சி
3. மொழித்திட்டமிடுதலை நடைமுறைப்படுத்தல்

மொழித்திட்டமிடுதலைப் பல நாட்டு நடைமுறைகளை வைத்து "மொழிச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரசாலோ, அல்லது மொழித்திட்ட அமைப்புக்களாலோ மேற்கொள்ளப்படும் சில முடிவுகள்" என்று விளக்குவார்கள்.

2.2.1. மொழியின் புறச் சிக்கல்கள்

ஒரு நாட்டில் உள்ள மொழிச் பிரச்சனைகள் பல, அந்நாட்டுச் சூழல்களினால் ஏற்படலாம். எனவே, ஒரு நாட்டு மொழிச் சூழல்கள் எத்தகைய தன்மை வாய்ந்தன எனக் காணலாம். இதை மொழியின் புறச் சிக்கல்கள் எனலாம்.

மொழிச் சூழலில் முதலாவதாக பன்மொழிச் சூழலைக் குறிப்பிடலாம். ஒரு நாட்டில் ஒரு மொழி மட்டும் பேசப்பட்டு வந்தால், அங்கு மொழி வளர்ச்சி மட்டுமே திட்டமிடுதலுக்குத் தேவையாகும். ஆனால் பல மொழிகள் பேசப்படும் ஒரு நாட்டில், எந்த மொழியை எந்தச் சூழலுக்குப் பயன்படுத்துவது என்பது ஒரு சிக்கலை உருவாக்கும். அத்தகைய சூழலில் ஆட்சிமொழி, கல்விமொழி என்று சில மொழிகள் முடிவு செய்யப்படும். சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளில் பல மொழிகள் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்ட நிலை, பன்மொழிச் சூழலில் மொழித் திட்டமிடுதலுக்கு எடுத்துக்காட்டாகும்.

இரண்டாவது மொழிச் சூழல் தொடர்பான சிக்கல் என்பது அயல் மொழிகளின் ஆதிக்கம். இச்சூழல் பொதுவாகக் காலனியாதிக்கத்தின் காரணமாக எழுகிறது. இத்தகைய சூழலில், அந்நாட்டினர் தங்கள் தாய் மொழியைப் பேச்சுப் பயன்பாட்டிற்கும் வேறுசில பயன்பாட்டிற்கும் மட்டும் பயன்படுத்துவர். சமுதாய முன்னேற்றத்திற்காகவும், ஆட்சி, கல்வி, சட்டம் போன்ற நிறுவன அமைப்புக்களிலும் பிற ஆதிக்க மொழிகளைப் பயன்படுத்துவர்,

இவ்வாதிக்க மொழிகளின் தொடர்ந்த பயன்பாடு, மேலே குறிப்பிட்ட துறைகளில் தங்களது தாய்மொழி, பயன்படுத்துவதற்கு ஏற்றதன்று என்ற மனப்பாங்கை உருவாக்கிவிடும். இத்தகைய சூழல்களில் அந்த அந்த நாட்டு மொழிகளை ஆட்சி, கல்வி என அனைத்துப் பயன்பாட்டிற்கும் கொண்டுவருவது அவசியமான செயல்பாடாகும். பிறமொழி ஆதிக்கச் சூழல், மொழிக் கலப்பின் வழியாகத் தாய்மொழிகளின் அழிவிற்கும் தாய் நாட்டுப் பண்பாட்டு அழிவிற்கும் காரணமாக அமைகின்றது. இத்தகைய சூழலில் தாய் மொழியைப் பயன்படுத்துவது, அல்லது பிற மொழிகளையே தொடர்ந்து வைத்துக் கொள்வது என்பது அந்த அந்த நாட்டு மக்களின் மனப்பாங்குகளைப் பொறுத்து அமையும்.

மூன்றாவது சிக்கல் ஒவ்வொரு புதிய நாடு உருவாகும் பொழுதும், மக்கள் தங்களது தேசியத்தைக் கட்டமைக்க மொழியை நாடுகின்றனர். இனம், சமயம், மொழி போன்ற தேசிய இனங்காணலுக்குப் பல வாய்ப்புக்கள் இருந்தாலும் மொழிவழித் தேசியக் கட்டமைப்பே பல நாடுகளிலும் பின்பற்றப்படுகிறது. புதியநாடு உருவாகும் பொழுது, அந்நாட்டில் ஒரு மொழி மட்டும் இருந்தால் சிக்கல் வராது. அவ்வாறு அல்லாத சூழலில் எந்த மொழியைத் தேசிய மொழியாக மாற்றித் தங்களின் இன அடையாளமாக மாற்றுவது என்பது மொழித் திட்டமிடுதலை மையமாகக் கொண்டு செய்யப்படும் செயல்பாடாகும். சிறுபான்மையினர் மொழிக்கு எத்தகைய தகுதிகள் அளிக்கவேண்டும். அவை தடைசெய்யப் படவேண்டுமா? சம தகுதி வழங்க வேண்டுமா? போன்றன எல்லாம், சரியான மொழிக் கொள்கைகள் வழியாகத் தீர்க்கப்பட வேண்டிய சிக்கல்கள்.

ஒரு நாட்டில் ஒரு மொழிதான் பேசப்படுகிறது என்ற சூழலிலும் மொழிக்குள் உள்ள சிக்கல்கள் பல நிலைகளில் இருக்கலாம். அந்த மொழி ஒரு பரந்த நாட்டுப் பரப்பில் பயன்படுத்தப்படும் பொழுது, இடம் சார்ந்த வேறுபாடுகளை, வட்டார வழக்குகளை உருவாக்கி இருக்கும். பல்வேறு வட்டார வழக்குகளைக் கொண்ட ஒரு மொழியில் எந்த வட்டாரத்தினரது வழக்கைத் தரமொழியாக எடுத்துக் கொள்ளுவது என்பது சிக்கல் நிறைந்த ஒன்றாகும்.

ஒரே மொழி பேசுகின்ற இரண்டு வட்டார வழக்குகளின்

புரிதல் தன்மையும், தூர இடைவெளியும் அதிகமாக இருக்கும் பொழுது, அவ்விரு வழக்குகளையும் தனித்தனி மொழிகளாகக் கருதுவதா? அல்லது ஒரே மொழி வழக்குதான் என்று கருதுவதா? என்பது அடுத்த சிக்கல். இவ்விரு சிக்கல்களும் அம்மொழி பேசும் சமூகத்தினரது அரசியல், பொருளாதாரப் பண்பாட்டுச் சிறப்புக்களால் அளவிடப்பட்டுத் தீர்க்கப்படுபவை.

2.2.2. மொழியின் அகச் சிக்கல்கள்

மொழியின் புறச் சிக்கல்களோடு, மொழிக்குள்ளேயும் பல சிக்கல்கள் எழலாம். அவற்றை மொழியின் அகச்சிக்கல்கள் எனலாம். அவற்றைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

1. மொழிக்குள் இருக்கும் முதல் சிக்கல் எழுத்துச் சிக்கல் எனலாம். எழுத்து வழக்கு இல்லாத மொழியாக இருந்தால் அம்மொழிக்கு எத்தகைய எழுத்து முறையை வழங்குவது என்பது ஒரு நிலை. எழுத்து வழக்கு பெற்ற மொழியாக இருந்தால், அம்மொழியில் செய்ய வேண்டிய எழுத்துச் சீர்திருத்தங்கள் அடுத்த நிலையாகும். மொழி மாற்றம் தொடர்ந்து நடைபெற்று வரும் சூழலில், சமுதாயத்தில் தோன்றும் மாற்றங்களை மொழிவழியாக வெளிப்படுத்தும் பொழுது, எழுத்துக்கள் போதாமையாகவோ, எண்ணிக்கையில் அதிகமாகவோ, ஒரு சீர்மையில்லாமலோ இருக்கலாம். பயன்பாட்டின் எளிமை கருதியும், கற்றல் சூழலின் எளிமை கருதியும், புதிய எழுத்துக்கள் உருவாக்கப்படலாம் அல்லது இருக்கும் எழுத்துக்களைச் சீர்திருத்திப் பயன்படுத்தலாம். இவையாவும் எழுத்து நிலையில் உள்ள சிக்கல்கள் ஆகும்.

எழுத்துக்கும் ஒலிக்கும் இடையே உள்ள உறவு நிலையில் அடுத்து வருவது சொல்லெழுத்துச் சிக்கலாகும். மொழியில் உள்ள ஒலிகளை சொல்நிலைக்குக் கொண்டுவரும் பொழுது, சில ஒலிகளின் வருகை நிலையில் வரையறைகள் செய்யப்படலாம். மொழிக்கு முதலில் சில ஒலிகள் வரக்கூடாது என்பன சொல்லெழுத்துச் சிக்கல்களை உருவாக்கும். வேற்று மொழிச் சொற்களை எழுதும் பொழுது எவ்வாறு எழுதுவது போன்றன சொல்லெழுத்து தொடர்பான சிக்கல்கள்.

மொழியின் மிக முக்கிய சிக்கலே சொற்கள்தாம். வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு ஏற்பச் சமுதாயத்தில் தோன்றும் புதிய

கருத்துக்களை வெளியிடப் புதிய சொற்கள் தேவைப்படும். அதேபோல மொழியை இதுவரையில் பயன்படுத்தாத புதிய துறைகளில் பயன்படுத்தும் பொழுதும் அத்துறைக் கருத்துக்களை வெளியிடக் கலைச் சொற்கள் தேவைப்படும். கலைச் சொற்களை உருவாக்குவதும், அவற்றைப் பயன்பாட்டில் நிலைபெறச் செய்வதும் சொல் நிலையில் எழும் சிக்கல்கள்.

சொல் நிலையில் உள்ள அடுத்த சிக்கல் பிறமொழி ஆதிக்கத்தினால் வருவதாகும். பிறமொழி, பிற சமுதாயத்தினரது ஆளுகைக்கு உட்பட்ட மொழிகளில் ஏராளமான மொழிக் கலப்பு ஏற்பட்டிருக்கும். இத்தகைய மொழிக்கலப்பு, சொல் நிலையில்தான் அதிகம் இருக்கும். இந்நிலையில் வேற்றுமொழிச் சொற்களை நீக்குவதா? ஏற்றுக்கொள்வதா? நீக்குவதென்றால் எவ்வாறு நீக்குவது? அவற்றிற்குப் பதிலாக இலக்கியச் சொற்களைப் பயன்படுத்துவதா? இல்லை மக்கள் பேச்சு வழக்கில் உள்ள சொற்களைப் பயன்படுத்துவதா? என்பன முக்கியச் சிக்கல்களாகும். இவற்றிற்கு எல்லாம் மொழியை அணுகும் முறைகளிலும் சரியான கொள்கைகளின் அடிப்படையிலும் தீர்வுகள் காணப்படலாம்.

மொழியின் அக நிலையில் அடுத்து வருவது இலக்கணமாகும். மொழி என்பது மாறும் தன்மை கொண்டது என்று எடுத்துக்கொண்டால், காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்களை வைத்துப் புதிய இலக்கணங்கள் எழுதுவது மிகமுக்கிய தேவையாகும். இலக்கண நிலையில் பழமையான இலக்கணங்களால் இன்றைய மொழிப் பயன்பாட்டினை மதிப்பீடு செய்யும் பொழுது புதிய சிக்கல்கள் தோன்றலாம். இலக்கணத் தூய்மை, மொழித்தூய்மை போன்ற நிலைப்பாடுகள் அந்த அந்தச் சமூகப் பின்னணியில் வைத்து ஆராய்ந்து அதற்கான தீர்வுகள் முடிவு செய்யப்படவேண்டும்.

பழமையான மொழிகளில் தோன்றும் மற்றொரு வகையான சிக்கல், இரட்டை வழக்கு நிலை என்பது. மொழியின் இரண்டு வேறு வழக்குகளான பேச்சு வழக்கும், எழுத்து வழக்கும் குறிப்பிட்ட தேவைக்காகப் பயன்படுத்தும் நிலையாகும். பேச்சுமொழி ஒரு சில பயன்பாட்டிற்கும் எழுத்துமொழி ஒருசில பயன்பாட்டிற்கும் என்று பயன்பாட்டு வரையறை செய்யப்பட்டிருக்கும். இலக்கிய இலக்கணச் செழுமை வாய்ந்த

மொழிகளில், எழுத்து மொழியில் படைக்கப்பட்டவையே இலக்கியங்களாகக் கருதப்பெறுவதால் பேச்சு மொழி என்பது கொச்சையான மொழி என்ற மனப்பாங்கு தோன்றியிருக்கும். இத்தகைய சூழலில் மொழி வளர்ச்சிக்குப் பேச்சுமொழிக் கூறுகளை எந்த அளவிற்கு எடுத்துக் கொள்வது என்பதும் மொழித் தூய்மை பேணல் சூழலில் பேச்சு மொழிக்கான இடம் எது? என்பதும் சிக்கல்களை ஏற்படுத்தும். இத்தகைய மொழிச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் பொழுது, மொழி வளர்ச்சி அடையும் என்பது வெளிப்படையான ஒன்றாகும்.

2.3. மொழி வளர்ச்சி நிலைகள்

மொழி வளர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயப் பணியை நிறைவேற்ற ஒரு மொழி பெற்றுள்ள சொல்வளம். அவற்றை வெளிப்படுத்தும் சீர்மையான எழுத்துக்கள், பயன்படு சூழல்களுக்கு ஏற்ற தரமான சொற்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும், மொழித் திட்டமிடுதல் என்பது பெரும்பாலும் மொழி வளர்ச்சியை மையமிட்டுச் செய்யப்படும் செயல்திட்டமாகும். முன்னர்க் குறிப்பிட்ட சிக்கல்கள் ஒவ்வொன்றையும் சமுதாயப் பின்னணியோடு ஆராய்ந்து, சரியான மொழிக் கொள்கைகளை உருவாக்குவதன் வழியாக மொழி வளர்ச்சி திட்டமிடப்படுகிறது. எனவேதான் மொழி வளர்ச்சியைப் பின்வரும் மூன்று நிலைகளில் அளவீடு செய்வர் மொழியியலாளர். அவை.

1. எழுத்துருவாக்கம்
2. புதுமையாக்கம்
3. நிலைபேறாக்கம்

எழுத்துருவாக்கம் என்ற நிலையில் எழுத்துக்கள், சொல்லெழுத்துக்கள் தொடர்பான சிக்கல்கள் முடிவு செய்யப்படும். புதுமையாக்கம் என்பது மொழியைப் புதிய துறைகளில் பயன்படுத்துவது; அவ்வாறு பயன்படுத்தும் பொழுது அத்துறையில் சிறப்பாகச் செயல்படத் தேவையான கலைச் சொற்களை உருவாக்குவது; புதிய துறைகளுக்கு ஏற்பப் புதிய நடையமைப்பை உருவாக்குவது முதலியன அடங்கும். நிலைபேறாக்கம் என்ற நிலையில் மொழியின் ஒவ்வொரு நிலையையும், எளிமை, சீர்மை, பயன்பாட்டுத் திறமை

முதலியவற்றின் அடிப்படையில் தரப்படுத்துவதாகும்.

2.4. மொழிக் கொள்கைகள்

ஒரு நாட்டின் மொழிக் கொள்கைகள் அந்நாடு மொழிகளை அணுகும் முறைகளை வெளிப்படுத்தி நிற்கும். மொழிகளைப் பேணவும், மொழி வளர்ச்சிக்காகவும், அரசு நிலையிலோ, சில மொழிசார் குழு நிலையிலோ, மொழிச் சிக்கல் தொடர்பான கொள்கைகள் உருவாக்கப்படும். மொழிக் கொள்கைகள் பெரும்பாலும் அரசு, அதிகாரம் சார்ந்தே உருவாக்கப்படும். அரசின் சார்பாக உருவாக்கப்படும் மொழிக் கொள்கைகள் செயல்படுத்தப்படுவதில் ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன. அவ்வாறு அல்லாமல் தனிநபரோ, குழுவோ மொழிக் கொள்கையை உருவாக்கலாம். இக்குழுக்களின் அதிகாரம் சார்ந்து, இக்கொள்கைகளை அரசு ஏற்றுச் செயல்படுத்தவும் செய்யலாம்.

ஒரு நாட்டின் மொழிக்கொள்கைகள், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அமைய வேண்டும். அவ்வாறான மொழிக் கொள்கைகளை உருவாக்க, மொழி, சமுதாயம் போன்றவற்றில் உள்ள தேவைகள் முதலில் கண்டறியப்படவேண்டும். ஒரு நாட்டில் நிலவுகின்ற மொழிகள், அவை பயன்படுத்தப்படும் இடங்கள், துறைகள், அம்மொழிபேசும் மக்கள், அவர்களின் மனப்பாங்குகள், சமுதாய சூழல், அரசியல் நிலை, நடைமுறையில் உள்ள மொழிப் பிரச்சனைகள் முதலியவற்றை அறிந்து, அவற்றிற்கு ஏற்ப மொழிக் கொள்கைகளை உருவாக்க வேண்டும். மொழிக் கொள்கைகளை உருவாக்கும் பொழுது, பன்மொழிச் சூழலும், பிறமொழி ஆதிக்கச்சூழலும் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தக் கூடியன. பன்மொழிச் சூழலில் ஒரு மொழியைப் பிற மொழி பேசும் சமுதாயத்தினர்மேல் திணித்தல், சிறுபான்மை மொழிகளுக்கு உரிய அங்கீகாரம் அளிக்காத சூழல் போன்றவை, மொழிக் கொள்கைகளுக்கு எதிர்ப்பைத் தோற்றுவிக்கும்.

2.5. மொழிக் கருத்தியல்கள்

ஒருசில கருத்தியல்களின் அடிப்படையில் ஒரு நாடு மொழிக் கொள்கைகளைப் பின்பற்றலாம். அக்கருத்தியல்களை பின் வருமாறு பிரிக்கலாம். அவை

1. மொழி ஒருமையாக்கம் (Linguistic Assimilations)
2. மொழிப் பன்மைத் தன்மை(Linguistic Pluralisation)
3. வட்டார மொழியாக்கம்(Vernacularization)
4. பன்னாட்டு மொழியாக்கம்(Internationalism)

மொழி ஒருமையாக்கம் என்ற கருத்தியல் ஒருவகையான ஆதிக்கத் தன்மை கொண்டது. ஒரு நாட்டில் எத்தனை மொழிகள் பேசப்பட்டாலும் அவற்றைப் பற்றிய அக்கரை இல்லாமல், அந்த நாட்டின் தேசிய மொழியை மட்டுமே அனைத்துச் சூழலிலும் பயன்படுத்த வேண்டும் என்ற வகையில் இக்கருத்தியல் அமையும். வேறு எத்தனை மொழி பேசும் மக்கள் அந்நாட்டில் வாழ்ந்தாலும் அவர்களுக்கு எந்தவித மொழிச் சலுகைகளும் இல்லாமல், அனைவரும் அந்நாட்டின் தேசிய மொழியையே பயன்படுத்தவேண்டும் என்பது இக்கருத்தியலின் படி அமையும் மொழிக் கொள்கையாக இருக்கும்.

மொழிப் பன்மைக் கருத்தியல் மேலே குறிப்பிட்ட கருத்தியலுக்கு எதிரான தன்மை யுடையது. ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையினர் அந்நாட்டில் ஒரு மொழியைப் பேசுகின்றனர் என்றால் அம்மொழிக்கு உரிய தகுதியை அளித்துப் பல மொழிகளும் அந்நாட்டில் பயன்படும் மொழிக் கொள்கைகளையும் வழங்கும். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஐந்து மொழிகள் தேசிய மொழிகளாக இருப்பதற்கு இத்தகைய கருத்தியலே அடிப்படைக் காரணமாகும். இத்தகைய கருத்தியலின் அடிப்படையில் உருவாக்கப்படும் மொழிக் கொள்கைகள், சிறுபான்மை மொழிகளுக்கு உரிய தகுதியை, வழங்குவதற்கு வழிவகை செய்யும்.

ஒரு வட்டார மொழியே ஆட்சி, கல்வி, சட்டம் போன்றவற்றிற்கும் பயன்படுத்தப் படவேண்டும். இத்துறைகளில் அந்நிய மொழிகள் இருப்பின் அவற்றை அகற்றி அந்த இடங்களில் நாட்டின் தேசிய மொழி இடம் பெற வேண்டும் என்ற அடிப்படையில் மொழிக் கொள்கைகள் உருவாக்கப்படும். அனைத்துத் துறைகளிலும், அனைத்து நிலைகளிலும் வட்டார மொழிகளே இடம்பெறச் செய்யும் கொள்கைகளை உருவாக்குவதும் இக்கருத்தியல்தான்.

அயல் மொழிகள் அல்லது பன்னாட்டு மொழிகளே அனைத்துப் பயன்பாட்டிற்கும் போதுமானது என்ற கொள்கைக்கு அடிப்படையாக அமைவது பன்னாட்டு மொழியாக்கக் கருத்தியல். வளர்ந்த நாடுகளைப் போல முன்னேற்றம் அடைவதற்காக வளர்ந்த நாட்டு மொழிகளைப் பயன்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற பன்னாட்டு மொழிகளை அனைத்துப் பயன்பாட்டிற்கும் தேர்வு செய்வர்.

இவ்வாறு பல்வேறு கருத்தியலின் அடிப்படையில் மொழிக் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. மொழிக் கொள்கைகள் என்பன மொழியின் புறச்சிக்கலைத் தீர்வு செய்வதற்கு மட்டுமல்லாமல் மொழிக்குள் உள்ள அகச் சிக்கல்களைச் சீர் செய்வதற்கும் பயன்படும். மொழிக்குள் உள்ள அயல்மொழி வழக்குகளை நீக்க வேண்டும் என்பது கூட மொழிக் கொள்கையின் அடிப்படையிலானதுதான். அதேபோல அயல்மொழிகளைக் களைந்து, அந்த இடங்களில் தாய்மொழிச் சொற்களை நிரப்புவதற்கு, இலக்கியத் தரவுகளை நாடவேண்டுமா? மக்கள் வழக்கை நாடவேண்டுமா? இரண்டையும் கவனத்தில் கொள்ளலாமா? முதலியன மொழிக் கொள்கைகளின் அடிப்படையில் முடிவு செய்யப்படுகின்றன. கலைச்சொல் நிலையில் இத்தகைய முடிவுகள் பெரும்பாலும் மக்களின் பயன்பாட்டாலே நிலைபேறாக்கம் செய்யப்படுகின்றன.

மொழிக் கொள்கைகளால் நடைமுறைப்படுத்தப்படும் செயல்திட்டங்களை இரண்டு வகையான பிரிவுகளில் அடக்கலாம். அவை 1. ஒரு மொழிக்குத் தகுதியை அளிக்கும் தகுநிலைத்திட்டம், 2. மொழிக் கூறுகளைச் செம்மைப்படுத்தும் தரவு நிலைத் திட்டமாகும்.

மொழித்திட்டமிடுதல் தொடர்பான கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் பொழுதுதான் பாவேந்தரின் மொழி அணுகுமுறையைப் புரிந்து கொள்ள முடியும். மொழி தொடர்பான சிந்தனைகளும் அணுகுமுறைகளும் அரசு, அரசு சார்ந்த அமைப்பின் செயல்பாடாக இல்லாமல் தனிமனிதன், தனிக் குழுக்களின் செயல்பாடாகவும் இருக்கலாம். பாவேந்தரின் மொழி அணுகுமுறை எத்தகைய தன்மை வாய்ந்தது என்பதை இக்கோட்பாடுகளின் வழியாக அறிந்து கொள்ளலாம்.

2.6. பாவேந்தரின் மொழிக் கொள்கைக் கருத்தியல்

பாவேந்தரின் மொழிக் கொள்கைகளையும், மொழி வளர்ச்சிக்கான கருத்துக்களையும் அவர்தம் கவிதைகளில் பல இடங்களில் தெளிவுபடுத்தியுள்ளார். அவரின் மொழிக் கொள்கைகள், மொழி வளர்ச்சிக் கருத்துக்கள் ஆகியவற்றை மொழியியலின் அடிப்படையில் இங்கு மதிப்பீடு செய்யப் படவில்லை. ஆனால், சமுதாய மொழியியல் நோக்கில் அவர் ஏன் இந்தக் கருத்தியல்களைக் கொண்டிருந்தார் என்பதைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும். இதுவரை மொழித்திட்டமிடுதல் தொடர்பான அணுகுமுறைகள், இவரின் மொழிக் கொள்கைக்கான கருத்தியல்களைப் புரிந்து கொள்ளவே விளக்கப்பட்டது. பாவேந்தரின் மொழிக் கொள்கைக்கான கருத்தியல் எது என்பதைப் பின்வரும் கவிதைவரிகளின் வழித் தெரிந்துகொள்ளலாம். பண்டைத் தமிழ்நாட்டு வேந்தரின் காலச் சூழல் என்று வரும்? எனக் கேட்கும் இவ்வரிகள்.

ஒலி என்பதெல்லாம் செந்தமிழ் முழக்கம்
ஒளி என்பதெல்லாம் தமிழ்க் கலைகளாம்! (239)

என்றமைந்துள்ளன. தமிழ்நாட்டில் கேட்கும் ஒலிகள் செந்தமிழ் முழக்கமாகவும், பார்க்கும் அனைத்தும் தமிழ்க் கலைகளாகவும் இருக்க நினைக்கும் அவருடைய மொழிக் கருத்தியல், மொழி ஓரினமாதல் என்றும் வட்டார மொழியாக்கம் என்றும் எடுத்துக் கொள்ளலாம். தமிழகத்தில் தமிழ் வட்டாரமொழி என்ற நிலையிலும், தமிழைத் தவிர வேறு மொழிகளுக்கு இடம் இல்லாத சூழலில் மொழி ஓரினமாதல் கருத்தியல்களும் இவருடைய மொழிக் கொள்கைகளாக அறிந்துகொள்ளலாம்.

நன்று தமிழ் வளர்க -தமிழ்
நாட்டினில் எங்கனும் பல்குக பல்குக
என்றும் தமிழ் வளர்க! - கலை
யாவும் தமிழ் மொழியால் விளைந்தோங்குக! (177)

என்ற வரிகளின் வழியாகப் பாவேந்தர் எங்கும் தமிழ், எதிலும் தமிழ், என்றும் தமிழ் என்பதையே அவருடைய மொழிக் கொள்கையாகக் கொண்டிருந்தார் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

2.6.1. இனம் -மொழி -நாடு

ஒவ்வொரு இனமும் தனது இன அடையாளத்திற்கு மொழியையே முன்னிறுத்துகின்றது என்று விளக்கப்பட்டது. பாவேந்தரும் இன அடையாளமாக, நாட்டின் அடையாளமாக மொழியையே முன்னிறுத்துவார். அதை, அவர்,

இனத்தைச் செய்தது மொழிதான்; இனத்தின்
மனத்தைச் செய்தது மொழிதான் (1724)

என்றும்,

ஒரு மொழியால் ஓர் இனமாம் - அவ்
வோரின மேஒரு நாடாம்..... (1565)

என்று கூறுவார். பாவேந்தரின் மொழிக் கொள்கை என்பதை ஒரு மொழி - ஓர் இனம் - ஒருநாடு என்ற கருத்தியல் அடிப்படையில் புரிந்து கொள்ளலாம்.

2.6.3. தமிழ் வளர்ச்சிக் கொள்கை உருவாக்கம்

மொழி வளர்ச்சி தொடர்பான மொழிக் கொள்கைகளை வகுக்கும் பொழுது பொதுவாக இரண்டு முறைகளைப் பின்பற்றுவர். ஒன்று அரசு, அதிகார அமைப்புச் சார்ந்து மொழிக் கொள்கைகள் உருவாக்கப்பட்டு, அக்கொள்கைகள் மக்களிடம் சென்று சேர்வது. இது மேலிருந்து கீழ் என்ற வகையைச் சேர்ந்தது. ஆனால், மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் கடமையாக ஓர் இயக்கமாகக் குறிப்பிட்ட செயல்பாடுகளைச் செய்யக் கூறி, அதன் வழியாக அரசு மொழிக் கொள்கைகளை உருவாக்குவது. இதைக் கீழிருந்து மேல் வகையாகக் குறிப்பிடலாம். மொழிக் கொள்கைகளின் வெற்றி அது மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில் அடங்கியுள்ளது. எனவேதான் பாவேந்தர் மொழிக் கொள்கைகள் மக்களிடமிருந்து உருவாக வழிசெய்கிறார். அவர் தமிழ் வளர்ச்சி என்பது அதிகாரிகளிடம் இல்லை மக்களிடம்தான் உள்ளது என்பதை,

தமிழ் வளர்ச்சி இயக்குநர்கள் கையில் இல்லை (1867)

என்பார். ஆனாலும் எந்த ஒரு மொழிக் கொள்கையும் அரசியல் அமைப்பின் வழியாகவே வெற்றியடையும் என்பதையும் அதைச் சட்டம் வழி நிறைவேற்ற வேண்டும் என்பதையும் பின்வருவாறு தெரிவிப்பார்.

தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டின் முதலமைச்சராய்
வருதல் வேண்டும் (521)

தமிழ்க்கல்வி தமிழ்நாட்டில்
கட்டாயம் என்பதொரு
சட்டம் செய்ய! (522)

மக்கள் இயக்கமாகச் செய்யப்படும் பணிகள், அரசு மொழிக் கொள்கைகளை உருவாக்க வழிசெய்யும் என்ற நிலையில், மங்கையர், முதியோர், வணிகர், அரசியல் சீர் வாய்ந்தோர், புலவர், குடும்பத்தார், கோவிலார், அறத்தலைவர், விழா நடத்துவோர், கணக்காயர், மாணவர், பாடகர், கூத்தர், பாட்டியற்றுவோர், சொற்பொழிவாளர், ஏடெழுதுவோர், பெருஞ்செல்வர் முதலான பலருக்குத் தங்களின் தமிழ்ப்பணியை விளக்குவார் பாவேந்தர். இவருடைய, தமிழ் வளர்ச்சிக்கான ஒவ்வொருவரின் பணியும், இவ்வியலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

2.7. தமிழ்ப்பணி, தமிழ்த்தொண்டு

மொழி வளர்ச்சியைப் பொதுவாக எழுத்துருவாக்கம், புதுமையாக்கம், நிலைபேறாக்கம் என்ற மூன்று பிரிவுகளில் அடக்குவர். இந்த நிலைகளில் பாவேந்தரின் கருத்துக்களைப் பார்ப்பதோடு அவருடைய தமிழ்ப் பணி, தமிழ்த்தொண்டு என்ற சிந்தனைகளையும் பகுத்துப் பார்க்கலாம்.

அமுதென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை
அறமென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை (1001)

என்றும்

தமிழுண்டு தமிழ்மக்களுண்டு -இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு (178)

என்றும் தமிழ் வளர்ச்சிப் பணி என்று பொதுவாகக் கூறாமல், தமிழ்த்தொண்டு, தமிழ்ப்பணி என்று கூறுவதன் வழியாகத் தமிழ்வளர்ச்சி என்பது மொழியைத் தாண்டிய ஒன்று என்பது உணரத்தக்கது.

தமிழ் வளர்ச்சி என்ற நிலையில் பாவேந்தர் பழம் பெருமைகளைப் பேசிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது.

உண்மையான வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும் என்ற கருத்தில்,

தமிழகத்தில் பழமையின் சிறப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் போதும் என்னும் மனோபாவம் பொதுவாகப் பரவியிருக்கிறது. இது முன்னேற்றத்திற்கு வழிகாட்டாது. தமிழுக்குச் சிறந்த எதிர்காலம் இருக்கிறது. இன்றைய நவயுக எழுத்தாளர்களும், கவிஞரும் தமிழ்நாட்டின் எதிர்காலம் சிறப்படைய வேண்டுமானால், அதற்கு உண்மையாகவே புத்துயிர் பிறக்க வேண்டுமானால் இத்தனை எழுத்தாளர்களும், கவிகளும் குறுகிய சாதி வேறுபாடுகளைத் தகர்த்து எறியக் கங்கணங் கட்டிக் கொண்டே புறப்பட வேண்டும். அடிமை மனப்பான்மையை ஒழித்துச் சுயேச்சையான எண்ணத்தையும், பரந்த நோக்கங் களையும் வளர்க்க முற்பட வேண்டும். (பாரதிதாசன் பேசுகிறார் 49).

என்றும்

எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பல கழித்தோம்; குறைகளைந் தோமில்லை (178)

என்றும் கூறுவார்.

2.8. இலக்கியம், கவிதை

தமிழ் வளர்ச்சி என்பது இலக்கிய வளர்ச்சி என்றே பெரும்பாலும் கருதப்படுகிறது. இலக்கிய வளர்ச்சி என்பது தமிழ் வளர்ச்சியின் ஒரு பகுதியே. ஒட்டு மொத்தத் தமிழ் வளர்ச்சி என்பது இலக்கிய வளர்ச்சியோடு, இலக்கியம்சாராப் பிற வளர்ச்சிகளு மாகும் என்பது மொழியியலாளர் கருத்து. அதே கருத்தைப் பாவேந்தர்

அந்நாளில் இலக்கியத்தை ஆய்தல் ஒன்றே
அரும்புலமை எனும் மடமை அகன்ற திங்கே (790)

என்று கூறிக் காலத்தின் வளர்ச்சிக்கேற்ப இலக்கண இலக்கிய வளர்ச்சி ஏற்படவேண்டும் என்றும் கூறுவார்.

தமிழ் இனிமையானது என்பதை நாம் ஆட்சேபிக்கவில்லை. தமிழுக்குச் சொல்லப்படும் உயர்வைத்தான் நாம் ஆட்சேபிக்கின்றோம். மனிதன் செயலற்றுப் போகும்படி தமிழின் உயர்வு கற்பித்து எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.......கால தேச வர்த்தமானத்துக் கேற்ற இலக்கணமும் இலக்கியமும் மாற்றியமைக்கத்தான் வேண்டும். இல்லாவிடில் அழிந்து போகும். (பாரதிதாசன் பேசுகிறார். பக்.26, 27)

பாவேந்தர், தமிழ் வளர்ச்சி என்பது இலக்கிய வளர்ச்சியும், பழம் பெருமை பேசுவதும் ஆகாது என்று கூறினாலும், அவர் செயல்பாட்டு நிலையில் கவிதை புனைவதையும், தமிழின் பெருமையையுமே பேசுவார். அறிவுப் பூர்வ நிலையில் அவரின் சிந்தனைகள் இருந்தாலும், சமுதாயச் சூழல், மொழியை அறிவு நிலையில் அணுகுவதற்குத் தடையாக உள்ளது. எனவேதான், தமிழை உணர்வு நிலையில் பார்ப்பதற்குக், கவிதையையும், பழம் பெருமையையும் அடிக்கடி பேசுவார்.

இலக்கிய வளர்ச்சி என்பதைக்,

கலையே வளர் ! தொழில் மேவிடு
கவிதை புனை தமிழா! (213)

என்றும்

இந்நாளில் பழந்தமிழில் புதுமை ஏற்றி
எழுத்துக் கினிப்பேற்றிக் கவிதைதோறும்
தென் நாட்டின் தேவைக்குச் சுடரையேற்றிக்
காவியத்தில் சிறப்பேற்றி.......... (790)

என்றும் இலக்கிய வளர்ச்சி பற்றியே அதிகம் பேசுவார்.

2.9. மொழி வளர்ச்சி

மொழி வளர்ச்சி செயல்பாடுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1.ஒரு மொழியைப் புதிய துறைகளில் பயன்படுத்தும் பொழுது அம்மொழி வளர்ச்சி பெற்றதாகக் கருதலாம். எடுத்துக்காட்டாகக் கல்வி, ஆட்சி, தகவல்தொடர்பு ஆகிய

துறைகளில் மொழியைப் புதிதாகப் பயன்படுத்துதல் ஆகும். இத்துறைகளில் பயன்படுத்தும் பொழுது அவற்றில் மொழி சிறப்பாகச் செயல்படத் தேவையான கலைச் சொற்களை உருவாக்குதல்.

2. வளர்ந்துவரும் சமுதாய, அறிவியல் முன்னேற்றங்களைச் செவ்வனே வெளிப்படுத்த உரிய சொற்களைத் தயாரித்தல்.

3. காலத்திற்கேற்ப மொழிக் கூறுகளில் தோன்றும் மாற்றங்களை அந்தந்த மொழிகளின் அமைப்பிற்கேற்பச் செம்மைப்படுத்தி மொழிப் பயன்பாட்டில் ஈடுபடுத்தல்

4. சமுதாயத் தேவைகளுக்கேற்ப மொழி வழக்குகளை நிலைபேறாக்கம் செய்தல்

5. எழுத்து வழக்கில்லாத மொழிகளுக்கு எழுத்து முறையை உண்டாக்குதல். நடைமுறையில் உள்ள எழுத்து முறையில் தேவையான சீர்திருத்தங்களைச் செய்தல்.

6. பிற மொழிகளில் இருந்து தேவையான மொழி பெயர்ப்புக்களைச் செய்தல்.

7. சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும், சமுதாயச் சூழல்களுக்கேற்றவாறும் மொழிகளில் புதுமையாக்கம் மேற்கொள்ளுதல்.

8. கல்வித் துறைக்கெனப் புதிய நூல்கள், பாடபுத்தகங்கள், துணைநூல்கள், செய்முறைப் பயிற்சி நூல்கள் ஆகியவற்றைத் தயாரித்தல்.

9. பிறதுறைப் பயன்பாட்டிற்கெனக் கையேடுகள், நடைஏடுகள், அகராதிகள் போன்றன உருவாக்குதல்.

எனப் பல்வேறு வகைகளில் மொழி வளர்ச்சியைப் பற்றி விவரிக்கலாம். பாவேந்தர் அவர்கள் மொழி வளர்ச்சி என்ற நிலையில் பின்வருவனவற்றைக் குறிப்பிடுவார்.

எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக

விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.
உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலவென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
(178)

எனக் குறிப்பிடுவார்.

2.10. தமிழ்க்கல்வி

பாவேந்தர் மொழி வளர்ச்சி என்ற நிலையில் முதன்மையாகக் கருதுவது தமிழ்க் கல்வி வளர்ச்சிதான். தமிழ் நூல்கள், இலக்கணநூல்கள் ஆகியன இதற்கு அடிப்படையாகும். தமிழ்க்கல்வி சிறப்பாக அமைய வெளியுலகில் உள்ள அத்தனை புதிய சிந்தனைகளுக்கும் "புதியதாகப் பெயரெலாங் கண்டு" என்று கூறுவதிலிருந்து கலைச்சொற்கள் படைப்பதனைக் குறிப்பிடுகிறார். ஆனால் அப்புதிய கருத்துக்களைத் தெளிவுபடுத்தப் படங்களோடு சுவடி செய்ய வேண்டும் என்கிறார். அதேபோலத் துறைதோறும் நூல்கள் எழுதுவதும் வளர்ச்சி என்கிறார்.

இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் -
துன்பங்கள் நீங்கும், சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மை யுண்டாகிடும், வீரம் வரும் (177)

என்று தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையான தமிழ்க்கல்வியின் வளர்ச்சியைப் பெரிதாகப் போற்றுகிறார்.

அவர் குறிப்பிடும் 'செந்தமிழைச் செழுந்தமிழாக' மாற்றும் நிலை சிந்திக்கத்தக்கது. இலக்கிய வளம் மிகுந்த செந்தமிழை, கல்விசார் பணிகள், பிற மொழியில் உள்ள கருத்துக்களைக் கொண்டுவந்து செழுந்தமிழாக மாற்ற வேண்டும் என்று கூறுவதிலிருந்து, தமிழின் புதுமையாக்கத்தைப் பேசுகிறார் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

2.11. மொழிபெயர்ப்பு

மொழி வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது மொழி பெயர்பபுப் பணியாகும். தமிழ்மொழியைக் கல்வி மொழியாக்கும் பொழுது, தமிழ்க்கல்விக்கான அறிவியல், கலை போன்ற செய்திகளைத் தமிழுக்குக் கொண்டு வருவது அவசியமாகும். இதையே பாரதி,

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்திங்குச் சேர்ப்பீர்

என்று கூறுவார. இதற்குப் பாரதி இரண்டு வழிகளைக் கூறுவார். ஒன்று பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் பெயர்த்தல், மற்றது இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் ஆகும்.

பாவேந்தரும் மொழி பெயர்ப்பைக் குறிப்பிடும் பொழுது இரண்டுவிதமாக மொழி பெயர்ப்பைக் குறிப்பிடுவார், ஒன்று பிறமொழியிலிருந்து தமிழ் மொழிக்குப் பெயர்த்தல் மற்றது தமிழ் மொழியிலிருந்து பிற மொழிக்குப் பெயர்ப்பதாகும்.

தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும் (212)

என்று பிறமொழியில் இருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பன பற்றிக் கூறுகிறார.

தாயெழிற் றமிழை: என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற (179)

என்று தமிழைக் குறிப்பாகத் தமிழ்க் கவிதையைப் பிறமொழிகளுக்குக் கொண்டு செல்லும் விருப்பத்தைத் தெரிவிக்கிறார்.

2.12. அகரமுதலி

தமிழ் வளர்ச்சியில் தமிழ் அகராதிகள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. தமிழ்ச் சொற்களஞ்சியப் பெருக்கத்தைப் பற்றி ஒருசில இடங்களில் பாவேந்தர் குறிப்பிடுவார். அகரமுதலியின்

சிறப்பை அவர் கூறுவதன் வழியாகத் தமிழில் அகராதிகள் வேண்டும் என்ற அவரின் கருத்தை உணரலாம்.

சொல் லுலகக் குதிரை தூய அகரமுதலி
வெல்லுவாய் நீ ஏறி வீர நூலுக் குதவி
சொற்களஞ் சியத்தைச் சொந்த மாக்கிக் கொண்டால்
கற்ப தெல்லாம் புரியும் கற்ப னைகள் விரியும் (1794)

என்று அகர முதலியைப் போற்றுவது நூல் எழுதுவதற்கும், தனித்தமிழில் எழுதுவதற்கும் உதவும் என்று கருதலாம்.

2.13. எழுத்துச் சீர்திருத்தம்

எழுத்துச் சீர்திருத்தம் என்ற நிலையில் எழுத்து வழக்கு இல்லாத மொழிகளுக்கு எழுத்தை உருவாக்குவதும் எழுத்து வழக்கு உள்ள மொழியில் பயன்பாட்டுச் சீர்மை கருதி எழுத்துச் சீர்திருத்தம் செய்வதும் மொழிவளர்ச்சியின் ஒரு பகுதியாகும். பாவேந்தர் பார்வையில் எழுத்துச் சீர்திருத்தம் என்பது மொழிக்கு எதிராகச் செய்யப்படும் செயல் என்று கருதலாம். ஆனால், எழுத்துச் சீர்திருத்தத்தில் பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்கிறார். அவருடைய காலகட்டத்தில் இரண்டு விதமான சீர்திருத்தப் போக்குக்கள் இருந்தன. ஒன்று தமிழில் இருக்கும் எழுத்துக்களில் உள்ள சிலவற்றை மட்டும் சீர்மை நோக்கித் திருத்துவது; மற்றொன்று எளிமை, சீர்மை நோக்கி அனைத்து எழுத்துக்களையும் திருத்துவது அல்லது மாற்றுவதாகும். இந்த இரண்டாவது கருத்துப் பாவேந்தருக்கு உடன்பாடில்லாத கருத்தாக உள்ளது.

எழுத்துக்களைச் சீர்திருத்தும் ஆர்வலர்க்கோர்
விண்ணப்பம்; எதற்காக இந்த வேகம்? பழுத்துக்
கனிந்திட்ட மொழிகளுக்குப் பழம் அழுகச்
செய்வதுவா உங்கள் திட்டம்? ஒழுக்கத்தில் ஓர் அழகு
வேண்டுமாயின் உயர் பெரியார் திருத்தத்தை ஏற்க
(1867)

எழுத்துச் சீர்திருத்தம் என்பது ஒரு குறிப்பிட்ட பணிகளுக்குத் தான் என்பதும், அதனால் சிந்தனைக்குத் தடையில்லை என்பதும் அவர்கருத்து.

பயில்கின்ற வர்க்கும் அச்சுக் கோப்பவர்க்கும்
பாங்காக வளர்கின்ற பொறியியற்கும்
செயல்பட நீர் விழைகின்றீர் ; எழுத்தமைப்பால்
சிந்தனைக்குவந்த தடை செப்புவீரே? (1867)

பாவேந்தர் காலத்தில், தமிழ் எழுத்துக்களில் இருந்த எழுத்துச் சீர்திருத்தத்தை,

கழுத்தறுப்பு வேலைகளைச் செய்வதெல்லாம்
காளைகளைக் காயடிக்கும் செயலை ஒக்கும் (1867)

என்று வன்மையாகக் கண்டிக்கிறார்.

எழுத்து நிலையில் தமிழ்ச் சொற்களை இந்தி மொழியில் எழுதுவது பாவேந்தர் காலத்தில் மற்றொரு நிலை. தமிழகச் சூழலில் இந்தித் திணிப்பின் விளைவாகத் தமிழ்ப் பெயர்கள் எல்லாம் இந்தியில் எழுதப்பட்டன. அதை அவர்,

செந்தமிழ்ச் சொற்களை இந்தியால் எழுதுதல்
அறிவிலாச் செயல்! அறமிலாச் செயல்! (1535)

என்று கண்டிப்பார்.

தமிழின் எழுத்துச் சீர்திருத்தத்திற்குப் பாவேந்தர் உடன்படாத நிலைக்குக் காரணத்தையும் அவரே குறிப்பிடுகிறார்.

எழுத்தைக் கொல்வது மொழியைக் கொல்வதே
மொழியைக் கொல்வது இலக்கியம் கொல்வதே
இலக்கியம் கொல்வதோ இனத்தைக் கொல்வதே (1536)

என்பார். மொழியைக் கருவி என்ற நிலையில்பார்ப்பவர்கள் எந்தக் குறியீடுகளாலும் மொழியை எழுதலாம் என்று கருதுவர் அதனால்தான் பெரும்பாலான மொழிகள் ஆங்கில எழுத்து வடிவத்தை, எழுதும் முறைக்குப் பயன்படுத்துகின்றன. மொழியை உலகளவில் கொண்டு செல்ல, உலகப் பொதுமையான ஆங்கிலக் குறியீட்டைப் பயன்படுத்தலாம் என்றும் கூறுவர். ஆனால் இலக்கியச் செழுமைவாய்ந்த தமிழ் மொழியில் தமிழ் எழுத்துமாற்றம் என்பது இலக்கியத்திற்கும், இனத்திற்கும் எதிரானது;

2.14. துறைதோறும் வளர்ச்சி

மொழியைப் புதிய துறைகளில் பயன்படுத்துவது மொழியின் வளர்ச்சி நிலையைக்காட்டும். இலக்கியப் பயன்பாட்டிற்கு மட்டும் என்று இருக்கும் மொழியைக் கல்வி, வாணிகம், சட்டம் எனப் பல்துறைகளிலும் பயன்படுத்தும் பொழுது மொழி வளர்ச்சியடையும். இவ்வாறு புதிய துறைகளில் பயன்படுத்தும் பொழுது, அத்துறை தொடர்பான சொற்களை உருவாக்குவதும், புதிய நடையை உருவாக்குவதும் அவசியமான பணியாகக் கருதப்படும். பாவேந்தர் தமிழ் இலக்கியத்திற்கே முதன்மை இடம் அளித்தாலும், துறைதோறும் தமிழ் வளரவேண்டும் என்றும் கருதுவார்.

தமிழினும் படைத்தது தமிழிலக்கியமே
தமிழைத் திறம்படப் பேசவும் எழுதவும்
வைத்தது யாது? வண்டமிழ் இலக்கியம் (1838)

என்று இலக்கியத்தின் பெருமை பேசினாலும், தமிழைப் புதிய துறைகளில் பயன்படுத்த வேண்டும் என்பதையும் விரிவாகக் கூறுவார்.

செயல் செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
சீறிவந்தே!
ஊழியஞ்செய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
வளர்ச்சி கொண்டே (514)

என்பார். தமிழ் மொழியை ஆங்கிலத்திற்கு இணையான மொழியாக மாற்ற முயலவேண்டும் என்பதை,

ஆங்கிலம்தான் உலகமொழி என்று சொல்வார்
ஆனாலும் தமிழ் மொழி நம் தாயே அன்றோ?
ஆங்கிலந்தான் உலகமொழி என்றுசொல்வார்
தமிழ்மொழியும் அந்நிலை எய்தும் வண்ணம்
ஈங்கிருந்து பெருமுயற்சி செயலாம் அன்றோ? (1840)

சமுதாய முன்னேற்றத்திற்கு ஏற்பப் புதிய கருத்துக்கள் தோன்றும் பொழுது அப்புதிய கருத்துக்களைத் தமிழ் மொழியில்

வெளியிடுவது புதுமையாக்கம் என்று மொழியியலில் கூறப்படும். இப்புதுமையாக்கம் என்பதைக் கலைச் சொல்லாக்கம் புதிய நடை உருவாக்கம் என இரு நிலைகளில் பார்க்கலாம் என்று முன்னர்க் கூறப்பட்டது.

2.15. கலைச் சொல்லாக்கம்

ஒரு மொழியில் புதிய சொற்கள் இரண்டு வழிகளில் உருவாக்கப்படுகின்றன. ஒன்று உள்நிலையாக்கம் எனப்படும். அதாவது ஒரு மொழியில் உள்ள சொந்தக் கூறுகளை வைத்துக் கொண்டு புதிய சொற்களை ஆக்குதல். மற்றொன்று கடன்வாங்கல் எனப்படும். புதிய கருத்துக்கள் தமிழ் மொழிக்கு வரும்பொழுது, முதல் நிலையில் கருத்தோடு அச்சொல்லையும் கடன் வாங்கிப் பயன்படுத்துவர். அவ்வாறு அல்லாமல் புதிய கருத்தைக் கடன்வாங்கிக் கருத்தை வெளிப்படுத்தும் சொல்லின் அமைப்பை அப்படியே வைத்துக் கொண்டு, அச்சொல் அமைப்பில் தமிழ்க் கூறுகளை இடம் மாற்றலாம். இதற்குக் கடன் மொழிபெயர்ப்பு என்று பெயர். புதிய கருத்துக்குத் தமிழில் உள்ள பழைய பெயர்களைப் புதிய பொருளிலும் வழங்கலாம். இவையெல்லாம் கலைச் சொல் உருவாக்க நெறிமுறைகள்.

தமிழில் கலைச்சொல்லாக்கம் எவ்வாறு நிகழ வேண்டும் என்பது பற்றிய பாரதியின் கொள்கை பின்வருமாறு.

> *இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகிக்க வேண்டும். திருஷ்டாந்தமாக ஆக்ஸிஜன், ஹைட்ரஜன் முதலிய பதார்த்தங்களுக்கு ஏற்கனவே தமிழ்நாட்டில் வழங்கப்பட்டிருக்கும் பிராணவாயு, ஜலவாயு என்ற நாமங்களையே வழங்க வேண்டும். தமிழ்ச் சொற்கள் அகப்படாவிட்டால் சமஸ்கிருத பதங்களுக்கும், அவஸ்தைகளுக்கும் தமிழ், சமஸ்கிருத மொழி களையே வழங்குதல் பொருந்தும். இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத விடத்தில் இங்கிலீஷ் பதங்களையே உபயோகப் படுத்தலாம். ஆனால் குணங்கள், செயல்கள் நிலைமைகள் இவற்றிற்கு இங்கிலீஷ் பதங்களை ஒரு போதும் வழங்கக் கூடாது. பதார்த்தங்களின் பெயர்களை*

மாத்திரமே இங்கிலீஷில் சொல்லலாம். வேறு வகையில் உணர்த்த இயலாவிடில் (16:263).

கலைச்சொல்லாக்கத்தில் தமிழுக்கு அடுத்த இடத்தை வடமொழிக்கு வழங்குகிறான் பாரதி. ஆனால் ஆங்கிலத்திற்கு மிகவும் வரையறுக்கப்பட்ட இடமே பாரதியினால் வழங்கப் படுகிறது. பொருட்களைச் சுட்டுவதற்கு மட்டுமே ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தப்படவேண்டும் எனப் பாரதி கருதுகிறார்.

ஆனால், இத்தகைய வரையறைகள், படிநிலையைப் பாவேந்தரிடம் காணமுடியாது. அவரின் கொள்கை எல்லாம் தமிழ்தான். தமிழ் தவிர வேறு எந்த மொழிக்கும் இடமில்லை. அவரின் கருத்தைப் பின்வருமாறு அறியலாம்.

புதுப் பொருள்கள் தோன்றின ; அப்பொருள்கட்கெல்லாம்
புதுப் பெயர்கள் தமிழினிலே சேர்க்க வேண்டும்
இதையறியார் வேறு மொழி கிடைக்கு மட்டும்
இத்தமிழே இருக்கட்டும் என்று சொன்னால் (1840)

பாவேந்தர், புதிய பொருட்களுக்கு வேறு மொழிப் பெயர்கள் தமிழில் வழங்குவதை விரும்பவில்லை. பாரதியைப் பொறுத்தவரை, ஆங்கிலத்தை மூன்றாம் நிலைக்கு ஒதுக்கியதற்குப் பிரித்தானிய ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வே காரணமாகலாம் என்று நுஃமான் (1999:54) குறிப்பிடுவார். பாவேந்தரைப் பொறுத்தமட்டில் இந்நிலைப்பாட்டிற்கு, ஆங்கிலம், வடமொழி, ஹிந்தி ஆகிய பிறமொழிகளின் ஆதிக்கமே என்பதை உணர்ந்துகொள்ளலாம். இது தொடர்பான செய்திகள் அடுத்த இயலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

2.17. தமிழ்க்காப்பும், தமிழ்ப் பரவலாக்கமும்

பாவேந்தரின் தமிழ் வளர்ச்சிச் சிந்தனைகள் பெரும்பாலும் தமிழ்க்காப்பு என்ற அளவிலேயே முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழும், தமிழரும். பிறமொழி ஆதிக்கத்தால், அழிந்து போவதைப் பொறுக்காமல் பல வழிகளில், தமிழ் தமிழர் தொடர்பான கருத்தியலை வெளிப்படுத்தியுள்ளார். பாவேந்தரின் தாரக மந்திரமாக இருப்பது

கெடல் எங்கே தமிழின் நலம்
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க! (548)

என்பதாகும்.

முன்னர்க் குறிப்பிட்டதுபோலப் பாவேந்தர் மொழிக் கொள்கை என்பது மக்களிடமிருந்து உருவாகவேண்டும் என்று கருதுகின்றார், எனவே, ஒவ்வொருவரும் மொழிக்குச் செய்ய வேண்டிய கடமைகளை எடுத்துரைப்பார்.

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன் முன்னேற்றம்
..
தொண்டு செய்வாய்!தமிழுக்குத்
துறைதோறும், துறைதோறும்
துடித்தெழுந்தே........................ (513)

தமிழ் வளர்ச்சிக்கு ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய தொண்டை "வரிப்புலியே தமிழ்காக்க எழுந்திரு" என்ற கவிதையில் பின்வருமாறு குறிப்பிடுவார். இவை மொழியியல் நோக்கில் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கவை.

மங்கையர் முதியோர் :
திருவான செந்தமிழின்
சிறுமையினைத் தீர்ப்பதென
எழுக! நீவிர்
....
பகர்கின்ற செந்தமிழின்
பழி நீக்கப் பெண்களெலாம்
பறந்து வாரீர்

வணிகர் :
வணிகர் தம் முகவரியை
வரைகின்ற பலகையில், ஆங்
கிலமா வேண்டும்?
மாணுயர்ந்த செந்தமிழால்
வரைக! என அன்னவர்க்குச்
சொல்ல வேண்டும்
....

அறிவிப்புப் பலகையெல்லாம்
அருந்தமிழ் சொல் ஆக்குவதே.....

அரசியல் சீர் வாய்ந்தவர் : தமிழ்க்கல்வி தமிழ்நாட்டில்
கட்டாயம் என்பதொரு
சட்டம் செய்ய!

புலவர் : புதுநூல்கள் புதுக்கருத்தால்
பொதுவகையில் தரவேண்டும்
....
அரசினர் மொழியாக
அரசியலார்மொழியாக
அரசியல் சார்
வரிசையுறு சட்டமன்றின்
மொழியாக, வையம் அறி
மொழியாகத்
திருமலிந்த தமிழ் மொழிதான்
ஆகும்வரை நம்புலவர்
சேர்ந்து தொண்டு
புரிக என வேண்டுகிறோம்.

குடும்பத்தார் : செந்தமிழுக்கே
வருமிக்க தீமையினை
எதிர்த்திடுவீர் நெஞ்சாலும்
வாய் மெய் யாலும்

கோவிலார் : தெற்கோதும் தேவாரம்
திருவாய்நன் மொழியான
தேனிருக்கச்
செக்காடும் இரைச்சலென
வேதபா ராயணமேன்
திருக்கோ யில்பால்

அறத்தலைவர் : செந்தமிழில் புதுப்புது நூல்
விளைப்பதற்குச் செல்வத்தைச்
செலவு செய்தால்
நற்றமிழ்நா டுயராதோ!

விழாநடத்துவோர் : திருமணத்தில்
மணமக்கள் இல்லறத்தை
மாத்தமிழால் தொடங்கிடுக
மல்கும் இன்பம்

கணக்காயர் : தமிழ்ப்புது நூல் ஆதரிப்பீர்
தமிழ்ப்பாட்டை ஆதரிப்பீர்
தமிழர்க் கென்றே
அமைந்துள்ள கருத்தினையே
ஆதரிப்பீர்..........

மாணவர் : ஆங்கிலத்தைக் கற்கையிலும்
அயல் மொழியைக்
கற்கையிலும்
எந்த நாளும்
தீங்கனியைச் செந்தமிழைத்
தென்னாட்டின்
பொன்னேட்டை
உயிராய்க் கொள்வீர்

பாடகர் : தமிழ்நாட்டுப் பாடகரே
தமிழ்பாடித் தமிழ்மானம்
காப்பீர் நன்றே

கூத்தர் : தமிழ்ப்புலவர் தனித்தமிழில்
நாடகங்கள் படக்கதையை
எழுதவேண்டும்

சொற்பொழிவாளர் : உலகுக்குத் தமிழ்மொழியின்
உயர்வுகளைக் காட்டுவது
சொற் பெருக்காம்

ஏடெழுதுவோர் : ஆங்கிலத்துச் செய்தித்தாள்
அருந்தமிழின் சீர்காக்க
எழுதல் வேண்டும்

பெருஞ்செல்வர் : தமிழுக்குப் பொருள் கொடுங்கள்
தமிழறிஞர் கழகங்கள்
நிறுவிடுங்கள்

தமிழ்ப்பள்ளி கல்லூரி
தமிழ் ஏடு பலப்பலவும்
நிலைப்பச் செய்வீர் !

பாவேந்தரின் மொழி வளர்ச்சிக் கொள்கை மொழி வளர்ச்சியை மட்டும் கருத்தில் கொண்டது என்று கூற இயலாது. மொழிப் பாதுகாப்பு, மொழிமீட்பு, மொழிப் பரவலாக்கம் என அனைத்தும் இணைந்த ஒன்றாக உள்ளது. தமிழ் வளர்ச்சி என்பது அரசிடம் இல்லை என்பது அது ஒவ்வொரு தமிழனிடம் உள்ளது என்பதையும் அவர் கருத்தாகக் கொண்டுள்ளார். அதேபோலத் தமிழ் பரப்புதல் என்பதை யும் அவரின் தமிழ் வளர்ச்சிக் கொள்கை என்று கூறலாம்.

கைத்திறச் சித்திரங்கள்
கணிதங்கள் வான் நூற்கள்
மெய்த்திரு நூற்கள் சிற்பம்
விஞ்ஞானம், காவியங்கள்
வைத்துள தமிழர் நூல்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தக சாலை எங்கும்
புதுக்குநாள் எந்தநாளோ?

தமிழரின் அறிவெல்லாம் பலருக்கும் தெரியச் செய்வதும் தமிழ் வளர்ச்சிதான். இத்தகைய வளர்ச்சியைத்தான் பாவேந்தர் தமிழ்த்தொண்டு என்றும், தமிழப்பணி என்றும் குறிப்பிடுகிறார். தமிழ்ப்பணி என்பது தமிழுக்கு எதிரானவற்றை அழித்தல், தமிழ்ப்பாதுகாத்தல், தமிழ் பரப்புதல் என்று கூறலாம்.

2.18. தமிழ்ப்பாதுகாப்பு

தமிழ்வளர்ச்சி என்பது தமிழரின் வளர்ச்சி என்பதாகக் கொண்டவர் பாவேந்தர்

செந்தமிழே உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை உனக்களித்தேனே!
நைந்தா யெனில் நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே! (179)

என்றும்

தமிழ்காத்து நாட்டினைக் காப்பாய் - பெண்ணே

தமிழரின் மேன்மையைக் காப்பாய் (242)

என்றும்

தமிழ் அழிந்திட்டால் தமிழர் அழிவார்
நம் தமிழ் காப்பது நம்கடன் அன்றோ (710)

என்றும்

எங்கள் உடல் பொருள் ஆவியெல்லாம் - எங்கள்
இன்பத் தமிழ் மொழிக்கே தருவோம் (719)

என்றும்

ஏங்கவிடோம் தமிழ்த்தாய் தன்னையே - உயிர்
இவ்வுடலை விட்டு நீங்கும் வரை (719)

என்றும் தமிழுக்கு வாழ்வதே வாழ்வாகும் என்ற நிலைப்பாட்டில் பாவேந்தரின் தமிழ்க் காப்பை உணர்ந்து கொள்ளலாம்.

மொழித்திட்டமிடுதல் கோட்பாடுகளின் வழியாகப் பாவேந்தரின் கொள்கைகளைப் பார்க்கும் பொழுது, தமிழ்நாடு தமிழ் இனம் என்பதன் அடிப்படை தமிழ் மொழியாகிறது. தமிழ் வளர்ச்சி என்பது மொழி வளர்ச்சியோடு மொழி மீட்சி, மொழிப் பாதுகாப்பு, பரவுதல் எனப் பல்வேறு தளங்களில் விரிவடைகிறது, மொழி வளர்ச்சி என்பது மொழியின் வளர்ச்சி மட்டுமன்று, மொழி மீட்சியும் மொழிப் பாதுகாப்பும் ஒருவகை வளர்ச்சியே என்பதைப் பாவேந்தரின் கருத்தியல் அடிப்படையில் புரிந்து கொள்ளலாம். மொழி மீட்சி, மொழிக் காப்பு என்பன தூய்மையாக்கச் செயல்பாடுகளோடு இணைந்து செய்யப்படுவன. பிறமொழி, பிற இன ஆதிக்கச் சூழலில் தூய்மையாக்கச் செயல்பாடுகள் எவ்வாறு அமைகின்றன என்பது அடுத்த இயலில் விளக்கப்பட்டுள்ளது.

இயல் மூன்று

பாவேந்தரின் தமிழ்த்தூய்மைக் கருத்தியல்

தூய்மையாக்கக் கோட்பாட்டு (*Puristic Approach*)

அணுகுமுறை

3.1. மொழிப்பற்று

மொழியே தானே மூச்சு மொழியே தானே உணர்வு
மொழியே தானே வாழ்வு மொழியே தானே இன்பம்
மொழியே தானே மனிதன் மொழியே தானே விழிகள்
மொழியே தானே உலகம் மொழியின்றேல் நாம் யாரோ?
(1861)

தமிழை மூச்சாகவும், வாழ்வாகவும் கொண்டவர் பாவேந்தர் அவர் மொழிப்பற்று பற்றிக் கூறும்பொழுது,

மொழிப்பற்று மிக்குடையான் மொழிப்போர் வீரன்
மொழிவெறியன். அவன் அல்லன்! மொழியைக்
கொல்லும் கழிவடையே மொழி வெறியன் என்று
சொல்க (1840)

என்று கூறுவதன் வழியாக மொழிவெறியர்கள் மொழியை அழிக்கின்றனர்; அம்மொழியினைக் காக்கப் போராடும் வீரனே மொழிப்பற்றுள்ளவனாகிறான் என்பது அவர் கருத்தாகிறது. பாவேந்தரின் பாடல்களில் மொழிப்பற்று அதிகமாக அமைவது மட்டுமல்லாமல், படிப்பவருக்கும் தமிழுணர்வுவை ஊட்டு வதாகவும் அமைகிறது. தமிழ்மொழியின் வாழ்வும், மொழியின் மீட்சியுமே பாவேந்தரின் மொழிப்பற்றிற்கு அடிப்படைக் காரணங்கள் எனலாம்.

தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழ்வார்
தமிழ் மீண்டால்தான் தமிழ்நாடு மீளும்

என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ் விடுதலைக்காகவும் தமிழ் வாழ்விற்காகவும் வாழ்நாளெல்லாம் போர்க்குரல் கொடுத்தவர் பாவேந்தர். மொழிக்கலப்பு, பண்பாட்டுக் கலப்பு, மொழித்திணிப்பு, பார்ப்பனச் சமூகத்தின் ஆதிக்கம், தெலுங்கின் ஆதிக்கம், ஆங்கில மொழியின் பரவல் என்ற நிலையிலான காலச்சூழல், எந்த ஓர் உணர்வாளனையும், மொழிப்போர் வீரனாக மாற்றிவிடும். இத்தகைய சூழல்களில் பாவேந்தரின் எதிர்வினைகளை மொழித்தூய்மைக் கருத்தியலோடு இணைத்துக் காணலாம்.

3.2. மொழித்தூய்மை

ஒரு சமுதாயத்தில் தூய்மைச் சிந்தனை தோன்றுகின்ற தென்றால் அச்சமூகத்தில் அதிகாரப் படிநிலைகள் உள்ளன என அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு சமுதாயமும், ஒவ்வொரு மொழியும் தத்தம் இயங்கு தளத்தில் செயல்படும்பொழுது, அங்கே ஆதிக்கச் சூழல் ஏற்படுவதில்லை. வேற்றுச் சமூகம், வேற்று மொழி, அவற்றின் ஆதிக்கம் என்ற நிலையில், இவ்வாதிக்கத்தின் எதிர் விளைவாகத் தூய்மைச் சிந்தனைகள் தோன்றும். இத்தகைய சூழலில், ஆதிக்கத்திற்கு உட்பட்ட சமூகம் இரண்டு விதமான போக்குகளைக் கடைப்பிடித்து, மொழியையும், சமூகத்தையும் மீட்டெடுக்க முயலும். அவை. 1. சீர்திருத்த வழி 2. மீட்பு வழி. ஆதிக்கச் சூழலில் இருந்து மொழியையும், இனத்தையும் மீட்க, அந்தச் சமூகத்தின் பழமைச் சிறப்புகளையும், பண்பாட்டுத் தொன்மைகளையும் கொண்ட சொல்லாடல்களை உருவாக்கி மக்களை ஒன்றிணைக்கச் செய்வது மீட்பு வழியாகும். இத்தகைய மீட்பு வழியில் மொழி ஒரு முக்கியமான குறியீடாகப் பயன்படும், ஆதிக்கச் சூழலின் தன்மை அதிகமாக இருக்கும் பொழுது, பழம் பெருமைகள் அதிகம் பேசப்படும்.

சீர்திருத்தவழியில், ஆதிக்கச் சூழலை எதிர்கொள்ளும் சமூகம், தங்கள் மொழியிலும், சமூகத்திலும், சில மாற்றங்களை ஏற்றுத் தங்களது சமூகத்தையும், மொழியையும் மாற்றியமைத்துக் கொள்ளும். சீர்திருத்த வழியில் பெரும்பாலும் வேற்றுச் சமூக மாதிரிகளே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இத்தகைய

மாற்றங்களுக்குச் சமூகத்தில் தோன்றுகின்ற பொருளாதார மாற்றங்கள் அடிப்படையாகும். இவ்விரு வழிகளின் அடிப்படையில் ஆதிக்கச் சக்திகளைப் பாதிக்கப்பட்ட சமூகம் எதிர்கொள்ளும்.

மொழி தொடர்பான ஆதிக்கச் சூழலில் மொழியின் தனித்தன்மையை மீட்பதும், மொழிவழியாக இனத்தூய்மையைக் காப்பதும் முன்னிலைப்படுத்தப்படும். வேறு சமுதாய இயக்கங்களுக்கும் மொழி இயக்கத்திற்கும் ஒரு சில வேறுபாடுகள் உள்ளன. சமுதாயத் தூய்மை தொடர்பான இயக்கங்கள் மக்களிடமிருந்து உருவாகலாம். ஆனால், மொழி தொடர்பான தூய்மைச் சிந்தனைகள், ஒரு சில மொழி பற்றிய சிந்தனை கொண்டவர்களிடமிருந்து தோற்றம் பெறும். இவர்களின் கருத்துக்கள் மக்களிடையே பரவி இயக்கமாக மாறும்.

மொழித்தூய்மை என்பது ஒரு கருத்தியலாக மட்டுமின்றி ஒரு செயல்பாடாகவே கருதப்படுகிறது. எனவே, மொழித் தூய்மையாக்கத்தை மொழித் திட்டமிடுதலின் ஒரு பகுதியாகக் கொள்ளலாம். மொழி வளர்ச்சிக்காகச் செய்யப்படும் செயல்பாடாக இருந்தாலும், இச்செயல்பாட்டில் மொழியின் பாதுகாப்பும், மொழியின் மீட்சியும் முக்கியமானதாகிறது. தமிழ் மொழியைப் பொருத்தவரை, தமிழ்த் தூய்மையாக்கம் என்பது தனித்தமிழ் என்ற நிலைப்பாட்டில் முன்னிறுத்தப்பட்டது.

3.3. மொழிச் சூழலும் தனித்தமிழும்

தமிழ் மீட்பு என்ற நிலையில், பாவேந்தர் தமிழியக்கம் என்ற நூலின் முன்னுரைப் பகுதியில் பின்வரும் கருத்தைக் கூறுவார்.

> *தமிழ் நாட்டில் நம் தமிழ் பல துறைகளிலும் தாழ்மைப்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழார்வம் மிக்க இளைஞர்கள் இத்தகைய துறைகளில் தமிழ் முன்னேற்றம் கருதி இயன்றவாறு கிளர்ச்சி செய்யவேண்டும்..... கோயிலில் பிறமொழிக் கூச்சலைத் தடுக்க.....தெருதோறும் சென்று பிறமொழி விளம்பரப் பலகையை மாற்றியமைக்கச் சொல்லி வற்புறுத்த......மற்றும் பல வகையிலும் கிளர்ச்சி செயின் தமிழ் விடுபடும். தமிழ்நாடு விடுபடும்.*

பிறமொழி ஆதிக்கச் சூழல் உள்ள இடங்களைச் சுட்டிக்காட்டுவதோடு, அவற்றை நீக்குவதற்கான கிளர்ச்சியைச் செய்ய வேண்டும் என வற்புறுத்துவார். மேலும் அவர் தனித்தமிழைப் பற்றிக் கூறும்பொழுது

> *தனித்தமிழ் என்பது வேற்று மொழியின் மீது கொண்ட பகை உணர்ச்சியால் எழுந்ததன்று. தமிழின் வளத்தை இன்னும் செறிவுடையதாக்க ஏற்பட்டது. எந்த இனத்தாரின் மீதும் பாய்வதற்கோ, குற்றம் சாட்டுவதற்கோ இவ்வியக்கம் தோற்றுவிக்கப் படவில்லை. இது இயற்கையான நிகழ்வே. யாரோ சில இலக்கண வல்லுநர்களின் மூளையில் தோன்றிய காழ்ப்பு அன்று. செவ்வியதாக அமைந்த தமிழ் மொழியின் மேல் தூசு படர்ந்து பொலிவு மங்கிப்போகாமல் இருக்கும்படி காத்துக் கொள்ளவே இந்நெறி வேண்டப்படுகிறது. ஆங்கிலம் வழங்கும் அறிவியற் புதுமைகளை எல்லாம் வரவேற்று அவற்றைத் தூய தமிழில் மொழி பெயர்த்தல். வேண்டும் என்பதே தமிழின் பற்றாளர் விருப்பம். எந்த அரசியல் கட்சிக்கும் இழுத்துச் செல்லும் கருத்துத் தனித்தமிழ் ஆதரவாளருக்கு இல்லை. பழைய புராண இதிகாசம் போன்ற நூல்களை ஒழித்து விடுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டதன்று தனித்தமிழ். மாறாகப் பழம்பெரும் நூல்களைக் காப்பதற்காகவே ஏற்பட்டது (குயில் குரல் : 1, இசை.8).*

மேலே குறிப்பிட்ட பாவேந்தரின் கருத்துப்படி பார்க்கும் பொழுது தனித்தமிழ் இயக்கம் ஒரு மொழி மீட்பு இயக்கமாகவும், சீர்திருத்த இயக்கமாகவும் இருப்பதை அறிந்து சொள்ளலாம். ஆங்கில மொழியின் அறிவியல் புதுமைகளை ஏற்று அவற்றைப் பின்பற்றித் தனித்தமிழில் தருவதன் வழியாக இதை ஒரு சீர்திருத்த இயக்கமாகக் கொள்ளலாம். அதேபோலத் தமிழின் வளத்தையும் பழம்பெரும் நூல்களைக் காப்பதற்கும் ஏற்பட்ட இயக்கம் என்று கூறும் பொழுது, இதை ஒரு மொழிக் காப்பு இயக்கமாகவும் கருதலாம்.

இங்கே பாவேந்தர் வேற்று மொழி மீது கொண்ட உணர்வு, பகை உணர்ச்சியன்று என்று குறிப்பிட்டாலும் தமிழ் மீட்சி என்ற

நிலையில் வடமொழி, தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளைப் பற்றித் தம் கவிதையில் பலவாறாகக் குறிப்பிடுவார். ஆங்கில மொழியின் அறிவியல் புதுமைகளை வரவேற்கும் சூழலையும், பார்ப்பன எதிர்ப்புத் தன்மையை வைத்தும், பிற சமூகச் சூழல்களை வைத்தும் தனித்தமிழ் இயக்கம் என்பது ஒருவகையான அதிகாரப் பகிர்வுக்கான செயல்பாடு என்று கருதலாம்.

3.4. தூய்மையாக்கக் கோட்பாடு

தூய்மையாக்கத்தைக் கோட்பாட்டு நிலையில் ஆய்வு செய்த நியூஸ்டுபினி (*1989*) அதை மூன்று வகையாகப் பிரிப்பார். அவை.

1. தூய்மையாக்கச் செயல்பாடு
2. தூய்மையாக்கச் சொல்லாடல்
3. தூய்மையாக்கக் கருத்தியல்கள்

தூய்மையாக்கச் செயல்பாடு என்ற நிலை மொழியில் கலந்த பிறமொழிக் கூறுகளைக் கண்டறிதலும் அவற்றை நீக்குதல் பற்றிய செயல்பாடுகளையும் குறிக்கும். தூய்மையாக்கச் செயல்பாடுகள் மொழியில் கலந்துள்ள அனைத்துப் பிறமொழிக் கூறுகளையும் நீக்குவதாக அமைய வேண்டும். ஆனால் இச்செயல்பாட்டில் ஒருசில குறிப்பிட்ட மொழிக் கூறுகள் மட்டும் மொழியைக் கெடுப்பதாகக் கருதப்படலாம். வேறுசில மொழி கூறுகள் மொழிக்கு உதவுபவையாகக் கருதப்படலாம். அதேபோல ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரது பேச்சுக்களை உயர்வாகவோ அல்லது பேச்சுமொழியே தீட்டாகவோ கருதப்படலாம். மொழியில் கலந்த எல்லா மொழிக் கூறுகளையும் நீக்காமல் ஒரு சில மொழிகளைக் குறிவைத்துத் தாக்கும் நிலையில், இச்செயல்பாடு ஒருவகையான கருத்தியல் அடிப்படையில் இயங்குகிறது என்பதைச் சுட்டிக்காட்ட இயலும். மொழியின் பேச்சு மொழிக் கூறுகளை இழிவாகக் கருதும் போக்குத் தூய்மையாக்கத்தின் தீவிரத்தை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

தூய்மையாக்கச் சொல்லாடல்கள் என்ற நிலை, மொழியில் கலந்துள்ள பிற மொழிகள் பற்றிய சொல்லாடல்களையும், பிறமொழிச் சொற்கள் ஏன் நீக்கப்படவேண்டும் என்ற கருத்துக்களையும் எடுத்துரைக்கும். இத்தகைய சொல்லாடல்கள் பிறமொழியின் தன்மையையும் அம்மொழி பேசுவோரின் பண்பாடு ஆகியவற்றையும் இழித்துக் காட்டும். கலப்புக்கு உட்பட்ட

மொழியின் தாழ்ந்த நிலை பற்றியும், மொழி அழிவைப் பற்றிய அக்கறையில்லாத மக்களைப் பற்றியும் நேரடியாகவும், மறைமுக மாகவும் எடுத்துரைக்கலாம்.

தூய்மையாக்கக் கருத்தியல் என்பது தூய்மையாக்கச் செயல்பாட்டிற்கும், சொல்லாடலுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்கிக் காட்டும். சமூகத்தின் பின்புலத்தோடு, இவ்வுறவுகள் விளக்கிக் காட்டப்படும் பொழுது, அங்கே தூய்மையாக்கக் கருத்தியல்கள் வெளிப்படலாம். சமூகத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட ஆதிக்கச் சாதியினரை எதிர்த்து அதிகாரக் கட்டமைப்பை மாற்றுவதற்காக அவர்களின் மொழியே, கலப்பை ஏற்படுத்துகிறது என்று கூறலாம். இத்தகைய சூழலில் ஒரு குறிப்பிட்ட இனத்தவரின் மொழிக் கலப்பை மட்டும் சுட்டிக்காட்டுவது அதிகார அமைப்பை மாற்றுவதற்கான மறைமுகக் கருத்தியல் எனக் கருதலாம்.

இத்தகைய தூய்மையாக்கக் கோட்பாட்டுப் பின்னணியில் பாவேந்தரின் மொழிக்கலப்புச் சிந்தனைகளை விவரிக்கலாம்.

3.5. பாவேந்தரும் மொழித்தூய்மைச் சொல்லாடல்களும்

பாவேந்தர் தமிழ் மொழிபற்றியும், தமிழர் பற்றியும், தமிழ் மரபு பற்றியும் பல்வேறு இடங்களில் போற்றிப் பாடியுள்ளார்.

முன்னைத் தோன்றிய மக்கள் முதன் முதலில் பேசிய
மொழியே! மொழியே.....
...
தென்னவன் சேரன், சோழன் செம்மையிலே வளர்ந்த
திருவே...................
முதன்முதல் செந்தமிழ் நான்மறை செப்பிய
முத்தே! முத்தே.............. (1042)

என்றும்,

சேர சோழ பாண்டிய ரெல்லாம்
ஆர வளர்த்த ஆயே வாழ்க!
ஊரும் பேரும் தெரியா தவரும்
பாரோர் அறியச் செய்தாய் வாழ்க !

....

முத்தமிழ் அம்மா முத்தமிழ் அம்மா
தத்துவ உணர்வை முதலில் தந்தாய்
எத்தனை இலக்கியம் இலக்கணம் வைத்தாய்
முத்துக் கடலே பவழக் கொடியே
எழுத்தே பேச்சே இயலே வாழ்க!
இழைத்தே குயிலே இசையே வாழ்க!
தழைத்த மயிலே கூத்தே வாழ்க!
ஒழுக்க வாழ்வின் உயிரே வாழ்க!
தமிழே ஆதித் தாயே வாழ்க
தமிழர்க் கெல்லாம் உயிரே வாழ்க!(1088)

என்றும் அவர் பாடிய அடிகள் குறிப்பிடத்தக்கவை.

பாவேந்தரின் ஆய்வு என்ற நிலையில் இக்கருத்துக்களைப் பார்ப்பதைவிடப் பிறமொழிக் கலப்பிற்கு எதிராக இவை பாடப்பட்டவை என்ற நோக்கில் இவற்றை ஆராயவேண்டும். தூய்மைச் சொல்லாடல்கள், கலப்பை ஏற்படுத்தும் மொழிகளைப் பற்றி அமையலாம். அம்மொழியினைப் பேசுபவர்களைப் பற்றியதாகவும் இருக்கலாம். பாவேந்தர் கருத்துப்படி வடமொழி, வடவர், ஆரியர், இந்தி, தெலுங்கு, தமிழ் மொழியின் பேச்சு வழக்கு ஆகியனவற்றைக் கலப்பாகக் காண்கிறார். அவை ஒவ்வொன்றைப் பற்றியும் பாவேந்தரின் கருத்துக்களை இனிக் காணலாம். பிறமொழிக் கலப்பிற்கு எதிராக அமையும் தமிழ்மொழி உயர்வை முதலில் கவனிக்கவேண்டும்.

இவை போன்று தமிழின் பெருமைகளையும், தமிழ் இலக்கண இலக்கியங்களின் பெருமைகளையும் வாய்ப்புக்கள் கிடைக்கும் போதெல்லாம் கூறிக் கொண்டே இருப்பார். பழந்தமிழ் இலக்கியங்களான சங்கப்பாடல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் இவற்றையும் இவற்றின் சிறப்பையும் கூறுவார். தமிழின் தொன்மைப் படைப்புக்களான சங்க இலக்கியப் பாக்கள் சிலவற்றின் அடிப்படையில் பாடல்களைப் புதிய மொழியில் ஆக்கியுள்ளார். கண்ணகி புரட்சிக் காவியம், மணிமேகலை வெண்பா ஆகியன பண்டைக் காப்பியங்களின் மறு ஆக்கமாகும். அதே போலத் தமிழறிஞர்கள் திரு.வி.க. மறைமலையடிகள் போன்றோரைப் புகழ்ந்தும் கவிதை

புனைந்துள்ளார். பண்டைத் தமிழின் சிறப்பை எடுத்துக் கூறித் தமிழ் உணர்வை வளர்ப்பதும் அதன் வழியாகத் தமிழ்ப் பாதுகாப்பும், மீட்சியும் ஏற்படுத்துவதும் பாவேந்தரின் நோக்கமாகக் கருதலாம். தமிழின் சிறப்பைக் கூறும் அதே நேரத்தில் பிறமொழிகள் பற்றிய அவரது கருத்துக்களையும் தொகுத்துப் பார்க்கும் பொழுது அவரின் மொழி உணர்வை அறியலாம்.

3.5.1. வடமொழிக் கலப்பு

தமிழ் மொழியின்பால் கலந்துள்ள பிற மொழிகளின் தன்மை பாவேந்தரைத் தமிழை உயிராகக் கருத வைக்கிறது. அதே நேரத்தில் பிறமொழிகளின் மேல் வெறுப்புணர்ச்சியாகவும் வெடிக்கிறது.

கமழும் உன் தமிழினை உயிரென ஓம்பு
காணும் பிறமொழி களோவெறும் வேம்பு (239)

மொழிக் கலப்பை அவர் கூறும் பொழுது, தாய்ப்பாலில் நச்சு சேர்ப்பதைப் போலக் கருதுவார்

தாய்ப்பாலில் நஞ்செனவே
தமிழில் வடமொழி சேர்த்தார் (538)

வடமொழி எதிர்ப்பிற்கு அடிப்படையாக அமைவது வடவரின் சூழ்ச்சியும், தமிழ் மொழிப் பழிப்புமே என்பதை,

வஞ்சகர் வந்தவர் தமிழாற் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார் (239)

என்று கூறுவார்.

மொழிக் கலப்பு என்பது மொழியின் மாற்றத்திற்கு வழிகோலுகிறது. வடமொழியால் தமிழ்மொழியின் தனித்தியங்கும் ஆற்றலைக் கெடுக்க நினைப்பவரைக் கடுமையாகச் சாடுவார்.

வடமொழியால் செந்தமிழை மாற்றும் கொடுமை
பட முடியா தன்றோஇப் பாரில் !.. (1659)

என்றும், வடமொழிக்கு எதிரான போரைத் தொடங்க

உரை செய்ய நூலெழுத வந்தோர் - அவற்
றுள் வட சொல் ஏன்தாம் கலந்தார் ?
சரி செய்ய ஆனதை நீபார் - அவர்
தடுத்தால் தொடங்குவாய் மொழிப்போர் (1457)

என்றும் அழைப்பார்.

வடமொழிக்குதவி தமிழ்மொழி அன்றோ?
மறுமொழி கூறாதிருப்பது நன்றோ?
கடல் சூழ் வையம் ஆண்டது தமிழோ?
கையேந்தி வந்தவர் பேசிய மொழியோ? (1003)

தமிழ் மொழியில் கலந்த வடமொழிச் சொற்கள் தமிழின் தனித்தன்மையைக் கெடுத்ததோடு, தமிழ் வடமொழியில் இருந்து வந்தது என்ற கருத்தையும் பரப்பியிருந்தது. அதைப் பாவேந்தர்

தடிப்பாகிப் போவதுண்டோ
உம்முள்ளம்? தமிழென்றும்
வடசொல் என்றும்
வடிப்பாக்கி நோக்கிடவும்
மாட்டீரோ? (519)

செத்த வடமொழி காட்டியும் -நம்
செந்தமிழ் மேல்எய்த ஈட்டியும்
பொத்தென வீழ்ந்தது பன்முறை (720)

வடமொழிக் கலப்பை எதிர்க்கும் பொழுது செத்த வடமொழி என்று கூறி அதற்கு எதிராகச் செந்தமிழ் என்ற முரண் நிலையைக் காட்டுவார். தனித்தியங்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டு என்பதைத்,

தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு ! (239)

என்பார் பாவேந்தர்.

தமிழுக்குத் தரும் ஏற்றம் ஒவ்வொன்றும் அன்றைய சமூகத்தில் வடமொழிக்கு இருந்த தகுதியை எதிர்த்து, தமிழுக்கும் அத்தகுதிகள் உண்டு என்பதைக் காட்டுவதாக அமைகிறது. வடமொழி இன்றித் தமிழ் தனித்தியங்காது, வடமொழியே முதலில் தோன்றிய மொழி, வடமொழியில்தான் வேதங்கள் உள்ளன என்ற கருத்துப் பரவலின் எதிர்க்குரல்தான் பாவேந்தர் காட்டும் தமிழின் சிறப்புக்கள். வடமொழிக்கு எதிராகத் தமிழின் சிறப்புகளைத் தொடர்ந்து வெளிப்படுத்தியே மொழி உணர்வை ஊட்ட முடியும் என்ற நிலையில், வடமொழிக்கும் பிறமொழிக்கும் கட்டப்பட்ட கருத்து நிலைகளை உடைத்து எறிகிறார்.

தமிழின் தொன்மையைக் கூறும் இடங்களில் எல்லாம் இந்தக்

கருத்து எதிர்ப்பைக் காணலாம். அவை முதல் இயலில் விளக்கப்பட்டன.

3.5.2. திராவிடக் கருத்துக்கள்

வடமொழி, வடவர், ஆரியர் ஆகியனவற்றிற்கு எதிரான மற்றொரு எதிர்நிலைக் கருத்துதான் திராவிடமாகும். ஆரியர்களின் பிரித்தாளும் சூழ்ச்சியே தமிழ் தெலுங்கு என்ற பிரிவுகள் என்பார்.

கேரளம், என்று பிரிப்பதுவும் - நாம்
கேடுற ஆந்திரம் பிய்ப்பதுவும்
சேரும் திராவிடர் சேரா தழித்திடச்
செய்திடும் சூழ்ச்சி அண்ணே - அதைக்
கொய்திட வேண்டும் அண்ணே.

என்றும்

செந்தமிழ் கேரளம் ஆந்திரம் - அவை
சேர்ந்திடும் கன்னடம் என்பதுவும்
நந்தம் திராவிட நாடெனல் அல்லது
வந்தவர் நாட ாமோ? அவை
வடவர் நாடாமோ?

என்றும் கூறுவதிலிருந்து திராவிடர் என்பர் வடவரிலிருந்து வேறுபட்டவர் என்று காட்டுகிறார். திராவிடர் பண்பாடு வடவர் பண்பாட்டிலிருந்து வேறுபட்டது எனப் பல பாடல்களில் குறிப்பிடுவார். திராவிடம் என்னும் தலைப்புடைய கவிதையில் தமிழ்தான் திராவிடமாயிற்று என்று பின்வருமாறு கூறுவார்.

தமிழ் என்ற சொல்லைத் தமிழோ என்றார் ஏன்
....
தமிழென்று சாற்றுவதற்கு மச்ச புராணம்
த்ரமிளென்று சாற்றியதும் காண்க
....
தமிழோவும் மற்றும் தமிரிசயும் வேறு
த்ரமிளத்ரமில் எல்லாம் சாற்றின் - தமிழின்
திரிபே அவைகள்
....
திராவிடம் தன்னந் தனி ஆரியமா?

திராவிடம் இன்பத் தமிழின் திரிபன்றோ? (1857)

ஆரியர் மிலேச்சர் ஆதலால், ஆரியத்து
வேரினர் பார்ப்பனர் ; வேறினத்தவர்
ஆதலால் அவரின் வேத மந்திரம்
தீது பயப்பன ஆதலால், திராவிடர்
வாழ மாறு மனங் கொளார் என்பதும்
தாழ இன்னலே சூழுவார் என்பதும்,
அன்றாட வாழ்வில் அறிந்தோம் ஆதலால்
நம்மொழி நம்கலை நம்ஒ ழுக்கம்
நம்பேர் ஒட்பம் நடைமுறை மாய்க்கவே
தம்மொழி தீயதம் தகையிலா முறைகளை
மணமுதல் திராவிடர் வாழ்க்கை முறைகளில்
இணைக்க அவர்கள் எண்ணினர்.......(902)

என்று ஆரியர் மொழிவழியாகவும், பண்பாடு வழியாகவும் தமிழை ஒழிக்க நினைத்தனர் என்று கூறுவார். மேலும் அவர்,

திராவிட நாடே தமிழ்நா டன்றோ
திருத்தமிழ்நாடே திராவிட மன்றோ
திராவிடம் மீட்பவர் தமிழ்நாடு மீட்பவர்
தமிழ்நாடு மீட்பவர் திராவிடம் மீட்பார் (1470)

என்று கூறுவதிலிருந்து திராவிடநாடு மீட்சி வழியாகத் தமிழ்நாட்டு மீட்சியை எதிர் நோக்குகிறார். இவை அனைத்தும் வடமொழி, வடவருக்கு எதிரான சொல்லாடல்களாகக் கொள்ளலாம்.

3.5.3. இந்திமொழி

பாவேந்தர், பார்ப்பனர்களையும், இந்தி பேசுவோரையும் சேர்த்தே வடவர் என்று கூறுகிறார். இந்தி மொழி பற்றியும் இந்தித் திணிப்பு பற்றியும், இந்தி எதிர்ப்புப் பாட்டிலும் பல்வேறு இடங்களிலும் குறிப்பிடுகிறார்.

செந்தமிழ் தன்னில் இல்லாத பல
சீமைக் கருத்துக்கள் இந்தியில் உண்டோ?
எந்த நலம்செய்யும் இந்தி -எமக்
கின்பம் பயப்பது செந்தமி ழன்றோ?(716)

இன்னலை ஏற்றிட மாட்டோம் - கொல்லும்

இந்தியப் பொதுமொழி இந்தி என்றாலோ
கன்னங் கிழிந்திட நேரும்-வந்த
கட்டாய இந்தியை வெட்டிப் புதைப்போம் (716)

இந்தி மொழி பற்றிக் கூறும் பொழுதெல்லாம் தமிழினை ஒப்பிட்டே குறிப்பிடுவார்.

இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம்-நீங்கள்
எல்லாரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழுக்குத் தீமை வந்தபின்னும்- இந்தத்
தேகமிருந்தொரு லாபமுண்டோ?
விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி - அது
வீரத் தமிழ்மக்கள் ஆவி என்போம்
இந்திக்குச் சலுகை தந்திடுவார் - அந்த
ஈனரைக் காறி யுமிழ்ந்திடுவோம்! (718-719)

வடமொழித் திணிப்பின் தொடர்ச்சியே இந்தித் திணிப்பு என்ற கருத்தில் வடவரின் செயலைக் குறிப்பிடுவார்.

வேதம் வடமொழி என்றனர் - தமிழ்
வீண்மொழி என்றுபு கன்றனர்
ஏதும்செல் லாதெனக் கண்டபின் - இன்று
இந்தியைக் கட்டாயம் என்றனர் (720)

வடக்கர் அனுப்பிவைத்த இந்த மொழியே-எம்
வாழ்வைக் கெடுக்க வந்த இந்தி மொழியே
....
ஆரியம் என்னுமொரு செத்தமொழியின் - மெய்
அழுக்கில் புழுத்த இந்திமொழியே (721)

இன்பத் தமிழ்மொழி உலக முதன்மொழி
இந்தி மொழியோ ஒழுங்கிலா இழிமொழி (1458)

இந்திமொழியை இகழ்ந்தும், இந்தித் திணிப்பை எதிர்த்தும் அமையும் இவரது கருத்துக்கள் தூய்மையாக்கச் சொல்லாடல் சார்ந்ததாகும்.

3.5.4. தெலுங்குமொழி

பாவேந்தரின் மொழித் தூய்மைச் சிந்தனைகள் மொழித் தூய்மையை மட்டுமல்லாது, பண்பாட்டுத் தூய்மை, தமிழிசை என

எல்லா நிலைகளிலும் எதிரொலிக்கக் காணலாம். மேடையில் தமிழ்ப்பாடல்களே பாட வேண்டுவார் கவிஞர்.

தமிழ் பேசுவோர்க்குத் தீந்தமிழினிதோ
தாங்க ளறியாத பிறமொழி பாடுதல் இனிதோ (553)

மொழி மட்டுமின்றித் தமிழிசைக்கும் பழமைத் தன்னமையை ஏற்றுவது இவர் தமிழ்மொழி மீதும் இசைமீதும் கொண்ட ஈடுபாட்டைக் காட்டும்.

பழந்தமிழ் மக்கள் அந்நாள்
பறவைகள் விலங்கு வண்டு
தழை மூங்கில் இசைத்ததைத் தாம்
தழுவியே இசைத்த தாலே
எழும் இசைத் தமிழே
....
என் வியப்பின் வைப்பே (446, 447)

இசை என்பது என்ன? என்று வினவிப் பாவேந்தர் பாட்டின் சிறப்பை வெளிப்படுத்துவார்.

பாட்டுக்குப் பாவம் எப்படியோ அப்படியே இசையும் முக்கியம்..........பாடல்களின் நோக்கம் என்ன எனில் பாவ்மும் இசையும் மொழியும் இருப்பது மாத்திரமல்ல பாடும் போது கருத்து விளக்கமுற வேண்டும்.........., இவற்றை எல்லாம் எண்ணித்தான் நம் தமிழையே மூன்றாகப் பிரித்து இசையை நடுவில் அமைத்தனர் (பாரதிதாசன் பேசுகிறார்.பக்.39)

இசையைப் பற்றிக் கூறும்போது கருத்தை முக்கியமாகக் கருதுகிறார் பாவேந்தர். தெலுங்கு இசையும் இந்துஸ்தானியும், தமிழிசை அளவிற்குக் கவிஞரை ஈர்க்கவில்லை. அதற்குக் காரணம் பொருள் புரியாமையயாகலாம். அதைவிடத் தமிழிசைப் பற்று, வேறு இசை வெறுப்பிற்கு அடிப்படையாகிறது.

அதைப் பாவேந்தர்.

விந்தை உரைத்திடுவேன் - அந்த
வேளையில் அங்கொரு வாள்விழி கொண்டவள்
முந்த ஓர் பாட்டுரைத்தாள் - அது

முற்றும் தெலுங்கில் முடிந்து தொலைந்தது
பிந்தி வடக்கினிலே........மக்கள்
பேசிடும் பேச்சினில் பாட்டு நடத்தினள்
எவ்விதம் சகிப்பேன்......
சங்கீத விற்பனனாம் - ஒரு
சண்டாளன் ஆரம்பித்தான் இந்துஸ்தான் ஒன்றை (176)

என்று தன்னுடைய பிற இசை பற்றிய மனப்பாங்கை வெளிப்படுத்துவார். எனவேதான்

என் னருமைத் தமிழ்நாட்டை
எழிற்றமிழால் நுகரேனோ
செவியில் யாண்டும்
மின்னல் நிகர் தமிழிசையே
கேளேனோ (537)

என்றும்,

தமிழ்நாட்டுப் பாடகரே
தமிழ்பாடித் தமிழ்மானம்
காப்பீர் நன்றே (537)

என்றும் கூறுவார்.

வடவர் ஆரியருக்கு எதிரான கட்டமைப்பில் தெலுங்கு மொழியைத் தமிழோடு இணைத்த பாவேந்தர், இசை என்ற நிலைப்பாட்டில் தெலுங்கு இசையை ஒரு கலப்பாகவே கருதுவார். தமிழ்நாட்டில் தமிழிசைதான் ஒலிக்க வேண்டும் என்பது அவருடைய கருத்து. எனவேதான்,

எந்தநாளும் தமிழிசையே பாடு வோர்கள்
இருக்கின்றார் சிலர் என்றால் அவரை விட்டுப்
பொன்னாகத் தெலுங்கிசைபா டிடுவார் தம்மைப்
போய் அழைப்பார் தமிழிசையை இயக்குவோர்கள் (552)

எனக்கூறுவார்.

தமிழ் அமைப்பு இசைக்கு ஒவ்வாது என்று கூறித் தமிழிசை பாடாதோரைக் கடுமையாகச் சாடுகிறார்.

தெலுங்கிசைத்தால் மறுப்பீர்கள்! தமிழே பாடச்
செய்யுங்கள்! அதற்காகத் திரண் டெழுங்கள்!

இலங்கு தமிழ் மொழியினிலே பாடல் இல்லை
என உரைத்தால், அறையுங்கள், தமிழமைப்பு
நலமுள்ள இசைக்கொவ்வா தென்பார் வாலை
நறுக்குங்கள்.................. (552)

தமிழிசைக்கு ஏற்றம் தருகிறோம் என்று கூறிப் பல்லவிகள், கீர்த்தனங்கள், இசைவிரிவு செய்வாரைப் பார்த்துச் சுண்ணமிடிப் பார்கள் பாடும் பல்வகை இலோசான இசைகள்போதும் என்று கூறுவார். தெலுங்கிசை, இசைக் கீர்த்தனங்கள் வேண்டாம் என்பதைப்,

பாரதியா ரேபோதும், தியாகர் வேண்டாம் (553)

என்று கூறி இசைத் தூய்மையை வெளிப்படுத்துவார்.

3.5.5. பேச்சுமொழி

தமிழ்த் தூய்மை சொல்லாடலில் பாவேந்தர் இலக்கியத் தமிழே தூய்மையானது; இலக்கியத்தில் உள்ள பேச்சுத் தமிழை ஒரு கலப்பாகவே கருதுகிறார். சிறந்த தமிழில் உயர்ந்த இலக்கியங்கள் படைக்கும்போது, பேச்சுத் தமிழை அவர் விரும்புவதில்லை. வடநாட்டார் பண்பாடு, தெலுங்கிசை, பார்ப்பனர் மொழி எல்லாவற்றையும் கலப்பாகக் காணுவதைப் பின்வரும் தமிழ் நாட்டுச் சினிமாப் பாடலால் அறியலாம். பேச்சுத் தமிழிலும், பிராமணர்கள் பேசும் தமிழே அதிகம் இருப்பதையும் அந்த நிலைக்கு எதிரான தமது கருத்தைப் பின்வருமாறு கூறுவார்.

வடநாட்டார் போன்ற உடை, வடநாட்டார் மெட்டு
மாத்தமிழர் நடுவினிலே தெலுங்கு கீர்த்தனங்கள்
வடமொழியில் ஸ்லோகங்கள்! ஆங்கில ப்ரசங்கம்
வாய்க்கு வரா இந்துஸ்தான்! ஆபாச நடனம்
ஆடையும் இவை அத்தனையும் கழித்துப் பார்க்குங்கால்
அத்திம்பேர் அம்மாமி எனுந் தமிழ்தான் மீதம்............ (211)

பாவேந்தர் தூய்மையாக்கச் சொல்லாடல் என்ற நிலையில் பேச்சுத் தமிழே கலக்காத எழுத்துத் தமிழையே விரும்புகிறார். ஆனால், செயல்பாட்டு அளவில் பேச்சுத் தமிழ்க் கூறுகளை ஏராளமாகப் பயன்படுத்துவார். பாவேந்தர் தமிழ்க் கனவு என்ற பாடலில்,

கோதை ஒருத்தி கொச்சைத் தமிழால்
புகழ்ந்தாளென்று பொறாமல் சோர்ந்து
வீழ்ந்தான்! உடனே திடுக்கென விழித்தேன்
அந்தோ! அந்தோ! பழைய
நைந்த தமிழரொடு நானிருந் தேனே (182)

பேச்சுத் தமிழே கலக்காத நிலை கனவில்தான் சாத்தியம் என்று பாவேந்தர் கருதுவதாகக் கொள்ளலாம். இருந்தாலும் இவரின் விருப்பம் தனித்தமிழ்தான் (பாவேந்தரின் கனவு பற்றிப் பின்னர் விரிவாக விளக்கப்படும்).

பாவேந்தர் தமது கவிதைகளில் சமூகச் சீர்கேடுகளையும் சாதிக் கொடுமைகளையும் மூட நம்பிக்கைகளையும் சாடுகிறார். இதற்குக் குடுகுடுப்பைக்காரன், கழைக்கூத்தாடி, குரங்காட்டி போன்ற அடித்தள மக்களைப் பயன்படுத்திக் கொள்கிறார். இவர்கள் தம் கூற்றில் வரும் கவிதைகள் பேச்சு மொழியில் அமைத்திருப்பது, இங்கே சுட்டிக்காட்டத்தக்கன. பேச்சுமொழி என்பது அவர்களின் சமூகப் பிரச்சனைகளோடு ஒப்பிடும் போது, அது கலப்பாகக் கருதத் தேவையில்லை என்று அவர் கருதியிருக்கலாம். அதே போலக் கவிதை எளிமைப்படுத்த இத்தகைய கூறுகளைப் பாவேந்தர் பயன்படுத்தியிருக்கலாம்.

தமிழ்த் தூய்மைச் சொல்லாடல் என்ற நிலையில் பாவேந்தர் வடமொழி, இந்தி ஆகியவற்றின் மொழிக்கலப்பையும், அதற்கு எதிர்நிலையில் தமிழின் உயர்வையும் தூய்மைச் சொல்லாடலாக அமைத்திருக்கிறார் என்று அறிகிறோம்.

3.6. தூய்மையாக்கச் செயல்பாடுகள்

தூய்மையாக்கச் சொல்லாடல்கள், மொழியின் தூய்மை ஏன் பேணப்படவேண்டும் என்பதை நேரடியாகவும் மறைமுகமாகவும் விளக்கும். நேரடியாக விளக்கும் பொழுது மொழி கலப்பிற்கான காரணங்களும், அவற்றை நீக்குவதற்கு வழிகளும் சுட்டிக்காட்டப்படும். மறைமுகமாக அமையும் சொல்லாடல்கள் மொழியின் பெருமையையும், மொழியின் வளத்தையும் சுட்டிக்காட்டித் தூய்மை பேணப்படவேண்டிய அவசியத்தை விளக்கும். அந்த வகையில் தமிழில் கலந்துள்ள வடமொழி, இந்தித் திணிப்பு ஆகியவற்றிற்கான நேரடி சொல்லாடல்களையும், தமிழின் சிறப்புப் பற்றிய மறைமுகச் சொல்லாடல்களையும் விளக்கமாகப் பார்த்தோம்.

மொழியில் கலந்துள்ள பிறமொழிச் செற்களை நீக்கும் முறையை விளக்குவது தூய்மையாக்கச் செயல்பாடாகும். தூய்மையாக்கச் செயல்பாடு, ஒவ்வொருவரின் கருத்தியல்களுக்கு ஏற்ப மாறுபடும். மொழியில் கலந்துள்ள பிற மொழிகளை அணுகும் பொழுது, புதிய கருத்துக்களை ஏற்று, அதைத் தமிழில் வெளியிடுதல், புதிய கருத்து மாதிரிகளை மட்டும் வைத்துக் கொள்ளுதல், மக்கள் வழக்கில் இருக்கும் சொற்களைக் கலப்புச் சொற்களுக்குப் பதில் பயன்படுத்துதல், இலக்கிய வழக்குகளைக் கொண்டு பிற மொழிச் சொற்களை நீக்குதல், வழக்கில் நிலைபெற்ற சொற்களையும் நீக்குதல் எனப் பல்வேறு முடிவுகளின்படி செயல்பாடு அமையும்.

மொழியை அமைப்பின் அடிப்படையில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. எழுத்து, 2. சொல், 3. வாக்கியம் எனலாம். மொழித்தூய்மை என்பது பெரும்பாலும் சொல்நிலையிலேயே ஆராயப்படுகிறது. இந்நிலையில் பாவேந்தரின் தூய்மைச் செயல்பாடுகளை அவருடைய கவிதைகளில் அவர் கூறியிருப்பதன் வழியாக ஆராயலாம்.

3.6.1. தூய்மைச் செயல்பாட்டு அளவுகோல்

பாவேந்தர் தூய்மைச் செயல்பாட்டிற்குத் தனித் தமிழ் என்கின்ற நிலைப்பாட்டை எடுப்பார். தனித்தமிழ் குறித்த அவர் சிந்தனைகளைக் கவிதைகளில் பல இடங்களில் காணலாம்.

தனித்தமிழில் இந்நாட்டுக்கு
தக்க புதுக் காப்பியம், நன்
னூல், இயற்ற..............(524)

தமிழ்ப் புலவர் தனித்தமிழில்
நாடகங்கள் படக்கதைகள்
எழுத வேண்டும் (539)

என்று கூறுவதிலிருந்து பாவேந்தரின் மொழித்தூய்மைச் செயல்பாடு தனித்தமிழ் சார்ந்து என அறிகிறோம். தனித்தமிழ் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது

தமிழில்நீ புலமைபெற, வேண்டும்-அது
தமிழ்பெறத் தமிழரைத் தூண்டும்

தமிழிலே யேபேச வேண்டும்-அது
தனித்தமிழ் வளர்ச்சியைத் தூண்டும் (1467)

என்று தமிழில் கல்வி கற்கும் போதும் பேசும்போதும் தனித்தமிழ் வளர்ச்சியடையும் என்பார்.

தமிழரிடம் எல்லாம் உண்டு என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் வினா விடையாக வைத்துத் தனித்தமிழில் இலக்கியங்கள் உள்ளனவா? என்று கேட்டு அவரே விடையளிப்பார்.

கேள்வி : *நன்றான அக்கருத்தை*
நாட்டுகின்ற இலக்கியங்கள்
ஒன்றேனும் தனித்தமிழில் - தமிழரே - இங்கு
உள்ளதுவோ சொல்லிடுவீர் - தமிழரே?

விடை : *இன்று நீர் தனித்தமிழ் ஒன்*
றிருப்பதாக ஒப்புகின்றீர்......(1774)

என்று கூறுவதிலிருந்து தனித்தமிழ் என்பது மெதுவாக வளர்ந்து, ஏற்கக்கூடிய நிலைக்கு வருவது என்று கூறுவதாகக் கொள்ளலாம்.

3.6.2. இலக்கணங்கள்

மொழி அமைப்பிற்கான வரையறைகளைத் தருவது இலக்கணமாகும். பாவேந்தர் கருத்து இலக்கணமும், இலக்கியமும் தெரியாமல் ஏடு எழுதுதல் கேடு நல்கும் என்பதாகும். தமிழ் மொழி வரையறைக்குப் பாவேந்தரின் இலக்கணச்சிந்தனை ஆரம்ப காலகட்டத்தில் இருந்த நிலைப்பாட்டில் இருந்து மாறியுள்ளது.

சாகாத் தமிழ் என்ற தலைப்பில் அமைந்த கவிதையில்

அகத்தியர் காப்பி யர்கள்
கெடுப்பினும் கெடாமல் நெஞ்சக்
கிளைதொத்தும் கிளியே வாழி! (447)

என்று கூறுவார்.

பாவேந்தரின் வடமொழி எதிர்ப்பு, பார்ப்பனர் எதிர்ப்பு நிலையே தொல்காப்பியத்தை மொழியைக் கெடுக்கும் இலக்கணம் என்று கருத வைக்கிறது. அகத்தியர், தொல்காப்பியர் அனைவரும்

ஆரியர்கள் என்பதால் ஆரியர்கள் தமிழ் மொழிக்கு நன்மை செய்யமாட்டார்கள் என்று ஆரம்பகால கட்டங்களில் நம்புகிறார். அவர்கருத்துப்படி தொல்காப்பியமும் நன்னூலும், தமிழுக்கு நன்மை செய்யவில்லை என்பதைப் பின்வரும் பாடலின் வழி அறிகிறோம்.

இயல்பினில் தோன்றிய தாகும் - தமிழ்
இந்நாவ லத்தின்மு தன்மொழியாகும்
அயலவர் கால்வைக்கும் முன்பே - தமிழ்
ஐந்தின் இலக்கணம் கண்டதுமாகும்.
அகத்தியன் சொன்னது மில்லை - தமிழ்
அகத்திய மேமுதல் நூலெனல் பொய்யாம்
மிகுதமிழ் நூற்கொள்கை மாற்றிப் - பிறர்
மேல்வைத்த நூலேஅகத்தியமாகும்!
நாடுதொல் காப்பிய நூலும் - இங்கு
நம்மவர் கொள்கைந வின்றிட வில்லை
ஏடுகள் தந்தன ரேனும் - தமிழ்
இயற்கைக்கருத்தந்த நூற்களில் இல்லை (1452)

தொல்காப்பியம், நன்னூலைத் தொடர்ந்து பல புதிய இலக்கண நூல்கள் வரவில்லை என்றால் அது அவ்விரு நூல்களுக்கும் பழியே என்பார். அதேபோல அவ்விருநூல்களில் வடமொழி, வடஎழுத்து ஒழுங்குமுறை பற்றிக் கூறியிருப்பதால், தமிழ் தனித்தியங்காது என்ற கருத்தை அவ்விலக்கணங்கள் தாங்கியிருப்பதாகக் கருதுகிறார்.

தனித்தியங்கத் தக்கதெனத்
தமிழ்பற்றித் தமிழ்ப்புலவர்
சாற்று கின்றார்
இனித்திடும் அவ்விருநூலில்
வடமொழி ஏன்? வட எழுத்துக்
கொழுங்கு தான் ஏன்? (523)

எனவே, வடமொழி நீக்கித் தனித்தமிழ்க் காப்பியம் வரவேண்டும் என்று கூறுவார். ஆனால், பிற்காலத்தில் தொல்காப்பியர் தமிழர்தான் எனத் தெரிந்து தொல்காப்பியத்தை ஏற்றுக்கொள்வார். அதைப் பின்வருமாறு கூறுவார்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன்
கையுழைப் பினாலுயர்ந்த மனிதருக்குள்
தொல்காப்பிய மனிதன் தமிழன் என்று (1863)
தொல்காப்பிய மொழியே எம்
தூய நல்மொழியாம் (1860)

என்று கூறுவதிலிருந்து அவர் முன்னர்க் கொண்ட கருத்தை மாற்றிக் கொண்டார் எனலாம். எனவே தொல்காப்பியம், நன்னூல் அடிப்படையில் அவருடைய இலக்கணத் தூய்மை அமைகிறது எனலாம்

3.6.3. இலக்கணநிலை

இலக்கணநிலையில் புணர்ச்சி விதிகள் பின்பற்றப்பட வேண்டும் என்று கருதுவார். கல்த்தரை, வாள்த்தடங்கண் என்று எழுதுவதைக் கண்டிக்கிறார்.

வாட்டடங்கண் கற்றரை யை
வாள்த்தடங்கண் கல்த்தரை என்
றெழுதி முன்னைப்
பாட்டினிலே பெரும் பிழையை (525)

'எனக்கு வந்த அஞ்சல்' என்ற தலைப்பிலான கவிதை, கடிதத்தில் உள்ள பிழைகளைச் சுட்டிக்காட்டுகிறது. அதில் எழுத்துப்பிழை, புணர்ச்சிப்பிழை, தொடர்ப்பிழை ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுவதன் வழியாகப் பாவேந்தரின் இலக்கணத் தூய்மையை உணரலாம்.

எனக்கு வந்த அஞ்சலட்டையில்
இருந்தவை பத்து வரிகள் - அவற்றில்
இருந்தவை நூறு பிழைகள் (1044)

3.6.4. எழுத்து நிலை

எழுத்து நிலைப் பிழைகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். அவை 1. உச்சரிப்புப் பிழை, 2.இலக்கணப் பிழைகள் . முதல் பிரிவுப் பிழைகள் பேச்சு மொழியின் தாக்கத்தால் வரலாம். வடஎழுத்துக்களைத் தமிழில் எழுதும்போது, வடமொழி உச்சரிப்புக்களை அப்படியே கொண்டு வருவது ஒரு நிலை. அவ் உச்சரிப்புகளுக்கு ஏற்பத் தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்துவது

மற்றொரு முறை. வடமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தி எழுதவேண்டும் என்று பாவேந்தர் கருதுவார். எனவேதான், கிரந்த எழுத்துக்களைக் கொண்டு எழுதுவதைப் பிழையாகக் கருதுவார். இரண்டாவது வகையான பிழைகள் இலக்கண நிலையில் வரும் ஒற்றுப் பிழையும், தொடர் பிழையும் ஆகும்.

உச்சரிப்புப் பிழை : இனிப்பு - இணிப்பு
இழுப்பு - இளுப்பு
மனை - மணை
குணம் - குனம்
இளமை - இலமை

தமிழில் உள்ள னகர, ணகர, ளகர, ழகர வேறுபாடுகளினால் வரும் பிழைகள் இவை

வடஎழுத்து : காட்சி - காஷி
சிவாசி - சிவாஜி
சீவா - ஜீவா
முட்டி - முஷ்டி
வேட்டி - வேஷ்டி

புணர்ச்சிப் பிழைகள் : முட்கம்பி - முள்கம்பி
முப்புறம் - முப்புரம்
முப்பத்து மூன்று - முப்பத்தி மூன்று
கவர்ந்து கொண்டான் - கவர்ந்துக் கொண்டான்
கண்டு சொன்னான் - கண்டுச் சொன்னான்
காற்றுப்பட்டது - காற்று பட்டது
கடித்துத் தின்றான் - கடித்து தின்றான்
எவரைக் கண்டீர் - எவரை கண்டீர்
எப்படிச் சொன்னீர் - எப்படி சொன்னீர்

தொடர்ப் பிழைகள் : அவைகள் வந்தன - அவைகள் வந்தது
பாட்டி செத்தாள் - பாட்டி செத்தது
சேய் பிறந்தது - சேய் பிறந்தாள்

3.6.5. சொல்நிலைத் தூய்மையாக்கம்

சொல்நிலையில் மொழிக் கலப்பு என்பது மொழி அழிவுக்கு அழைத்துச் செல்லும் என்பது பாவேந்தர் கருத்து. எனவே, சொல்

நிலையில் தூய்மை பேணப்படவேண்டும் என்பார்.

வண் தமிழை எம்முயிரை
வட சொல்லி னால் அழிக்க
எண்ணிடுவோர்..............(1461)

என்றும்

அந்தமிழ்த்தாய் முகத்தினிலே ஆரியக்கறை ஏன்? நம்
அழகு தமிழ்ச் சோலையிலே ஆகாஷ்வாணி ஏன்?(1455)

என்றும் சொல் தூய்மை குறித்துக் கூறுவார்

பாவேந்தரின் சொல் நிலையில் தூய்மையாக்கச் செயல்பாடுகளை இரணடு பிரிவுகளில் காணலாம். ஒன்று வடமொழி ஆங்கிலம் இவற்றிற்குத் தமிழ்ச்சொல் உருவாக்கம் (சொல்லாக்கம்). மற்றொன்று தமிழின் வேர்ச்சொல்லாய்வு ஆகும். சொல்லாக்க நிலையில் பின்வருமாறு சொற்களை உருவாக்குவார்.

வடமொழிச் சொற்கள்

உத்யோகம் - அலுவல்
நியாயத் தலம் - அறமன்றம்
வந்தேமாதரம் - தாயகத்திற்கு வணக்கம்
பிரதி - படி
நமஸ்கர்ரம் - வணக்கம்
ஆகாஷ்வாணி - வானொலி

ஆங்கிலச் சொறகள்

இஞ்சின் - இழுப்பு வண்டி
கார்ட் - கண்காணி
லாரி - சரக்கேற்றும் பொறி இயங்கி
டிரங்கால் - தொலைபேசிப் பொறி
டைரக்டர் - படக்கணக்கர்
பஸ் - மக்கள் இயங்கி
சில்க்ஷாப் - துணிக்கடை

சொல்லாக்க நிலையில் பாவேந்தர் உருவாக்கிய வடமொழிக்கு இணையான சொற்கள் பல இன்று வழக்கில் நிலை பெற்றிருப்பதைக் காணலாம். ஆங்கில மொழிக்கு இணையான

சொற்கள் பல வழக்கிற்கு வரவில்லை. ஆனால் வேறு சொற்கள் வழக்கில் நிலைபெற்றுள்ளன. படக்கணக்கர், மக்கள் இயக்கி போன்றவற்றை நிலை பெறாத சொற்களுக்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம். பாவேந்தரின் சொல்லாக்க நெறி என்பது பிறமொழிக் கருத்திற்கு இணையான தமிழ்ச் சொறகளை உருவாக்குவது எனலாம். பிறமொழி மாதிரிகளை எடுத்துக் கொண்டு, அம்மாதிரிகளில் தமிழை ஏற்றுவதை ஒரு சில சொற்களில் செய்துள்ளார். சொல்லாக்கங்களைப் பொறுத்த மட்டும் எல்லாக் கலப்புச் சொற்களையும் நீக்கவேண்டும் என்பதே அவர் எண்ணம் எனலாம். மக்கள் வழக்கில் நிலைபெற்ற பிறமொழிச் சொற்களை நீக்குவதன் வழியாக மொழித்தூய்மை நடைபெற வேண்டும் என்று கருதுகிறார்.

3.6.6. சொல்லாய்வு

பாவேந்தரின் தனித்தமிழ் உணர்வும், தமிழ் மொழியின் தொன்மை நிலைநாட்டலும் அவருடைய சொல்லாய்வுக்கு அடிப்படையாக அமைகின்றன. இக்கருத்தை அவர்

எம்மொழிக்கும் தமிழ்ச் செம்மொழி வேரென
எண்பிக்க மாட்டாயா தம்பி (1780)

என்றும்

என் அன்னைக்குத் தமிழுக்கு நான் தொண்டு செய்வதில் என்ன வரினும் அஞ்சேன். இஃதோர் பெரும்பதம். இதை நம் தமிழ்ப்புலவர்கள் பேராசிரியர்கள் அடைந்தால் அந்த நாள் தமிழகத்தில் மீட்சி நாளாம்.

தமிழனின் கண்ணும் கருத்தும் தமிழின் வேரைப் பார்க்கட்டும், அதன் பழமையைப் பார்க்கட்டும், தமிழன்றி இந்த நாவலந்தீவில் ஏது மொழி? எத்தனை மொழிக்கு? எந்த எந்த நாட்டு மொழிக்கு நம் தமிழ் தாய்? என்பதை எண்ணட்டும் (திராவிடம் : 37)

பாவேந்தரின் எண்ணம் தமிழ்மொழி பல நாட்டு மொழிகளுக்குத் தாய். இதைக் கருத்தில் கொண்டே அளப்பரிய உணர்வு நிலையில் சொல்லாய்வு செய்கிறார். எனவே, இச்சொல்லாய்வை அறிவியல் நெறிப்படி அணுக

வேண்டியதில்லை. இச்சொல்லாய்வு அன்றைய பிறமொழி ஆதிக்கத்தின் எதிர்விளைவு என்ற நிலையில் எடுத்துக் கொள்ளலாம்.

3.7. தூய்மையாக்கக் கருத்தியல்கள்

தமிழ்த் தூய்மையாக்கம் எதற்காகச் செய்யப்படவேண்டும்? எவ்வாறு செய்யப்படவேண்டும்? என்பதற்கான அடிப்படைகளை விளக்குவது தூய்மையாக்கக் கருத்தியல்கள் ஆகும். கருத்தியல்களை இரண்டு பிரிவாகப் பிரிப்பர். அவை ஒன்று நேரடிக் கருத்தியல்கள் மற்றொன்று மறைமுகக் கருத்தியல்கள். தமிழ்த் தூய்மையைப் பொருத்த மட்டும் பாவேந்தரின் தூய்மையாக்கக் கருத்தியல்கள் நேரடியானவைதான்.

நைந்தா யெனில் நைந்து போகுமென் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே

என்ற நிலையிலும்

தமிழ் அழிந்திட்டால் தமிழர் அழிவார்
நம் தமிழ் காப்பது நம்கடன் அன்றோ

என்ற நிலையிலும் தமிழ்க் காப்பே அடிப்படைக் கருத்தியலாக அமைகிறது.

பிறமொழிக்கலப்பு என்ற நிலையில் அனைத்துக் கலப்புகளையும் எதிர்க்கிறார். இருப்பினும் ஆங்கில மொழியை, மற்ற வடமொழி, இந்தி போன்றவற்றைப் போல அவர் எதிர்க்கவில்லை என்பதும் காணத்தக்கது. ஆங்கிலம் உலகமொழி என்ற கருத்தாக்கமும் கல்வி நிலையில் ஆங்கிலம் உதவும் என்ற கருத்தாக்கமும் இருப்பதை அறியமுடிகிறது.

பாங்கிற்கும் பயனிருக்கும்
உலக மொழி ஒன்று
ஆங்கிலத்தை உலகொருமை
அறிவுக் கேற்பாய் நன்று (1789)

என்றும்,

ஈங்கிரண்டு மொழிகள் போதும்
எண்ணமெலாம் ஓங்கும் (1790)

என்றும் ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்ளும் நிலையைக் காணலாம்.

அவர் வாழ்ந்த புதுவைப் பகுதியில் பிரெஞ்சு மொழி ஆட்சி மொழி. ஆங்கிலத்தேவை புதுவையில் இல்லை. இந்தியச் சூழலில் ஆங்கிலம் தேவை என அவர் நினைத்திருக்கலாம்.

ஆங்கிலமும் பிறமொழியும் கல்வி நிலையில் மட்டுமே பாவேந்தரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

ஆங்கிலத்தைக் கற்கையிலும்
அயல்மொழியைக் கற்கையிலும்
எந்த நாளும்
தீங்கனியைச் செந்தமிழைத்
தென்னாட்டின் பொன்னேட்டை
உயிராய்க் கொள்வீர் (534)

என்றும்

பன் மொழிகள் கற்பதுவும்
படிப்புக் கழகாகும்
இன்பத் தமிழை ஏற்றதின் பின்
எய்துவதே சாலும் (1789)

என்றும் கூறுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

பாவேந்தரின் தமிழ்த் தூய்மைக் கருத்தியல்களைத் தனியாகப் பிரித்துக் காண இயலாது. தமிழ் என்றாலே தனித்தமிழ், தமிழ்வளர்ச்சி, தமிழின மீட்சி என்றே அமைவதால் அவற்றைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

- *இன்பத்தமிழ்க் கல்வி யாவரும் கற்றல்*
- *பிறதேசத்தார் தமிழன்பால் குற்றம் செய்தால், நொறுக்குதல்*
- *கலைவளர்த்தல், தொழில் மேவிடுதல்*
- *வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டல்*
- *துயர் செய்ய எண்ணிடும் பகைவரைத் தூளாக்குதல்*
- *தனித்தியங்கும் ஆற்றல் தமிழுக்குண்டு என உணர்த்தல்*
- *தமிழர் ஆட்சியை நிறுவல்*
- *தமிழ்க் காப்பை அறமாகவும், தொண்டாகவும், ஊழியமாகவும் ஏற்றல்*
- *துறைதோறும் துறைதோறும் தமிழுக்கு அழகு சேர்த்தல்*

- செந்தமிழின் பழி நீக்குதல்
- வடமொழியையும், பிழைத்தமிழையும் ஒழித்தல்
- புதுநூலில் புதுக்கருத்தைப் புனைதல்
- வடமொழியை வேரறுத்தல்
- கெடல் எங்கே தமிழின் நலம் அங்கெல்லாம் கிளர்ச்சி செய்தல்
- தமிழிசை நிறுவுதல்
- இலககணம் இலக்கியம் தெரியாமல் ஏடு எழுதுதலைத் தவிர்த்தல்
- தமிழ்க் காப்பிற்கு உயிர் அளித்தல்
- இந்தித் திணிப்பை எதிர்த்தல்
- இந்தி, வடமொழி ஆதரவாளரை இனங்காணல்
- வணிக விளம்பரப் பலகைகளைத் தமிழாக்குதல்
- பொருள்களைத் தமிழில் அழைத்தல்
- தெருப்பெயரைத் தமிழில் எழுதல்
- தமிழிலே வழிபாடு நடத்துதல்
- தனித்தமிழை வளர்த்தல்
- இன்பத் தமிழ் மொழி உலகின் முதல்மொழி எனல்
- எளிய நூல்கள் தமிழில் எழுதுதல்,
- மொழிபெயர்த்தல்

பாவேந்தரின் முதன்மைக் கருத்தியல்களாகத் தமிழின் தொன்மையை நிலைநாட்டடல், தமிழ் இனம், ஆட்சி ஆகியவற்றை மீட்டல், தமிழ்மொழி காத்தல், தமிழுக்குத் தீங்கு செய்வோரை எதிர்த்தல் எனலாம்.

இயல் நான்கு

பாரதி, பாவேந்தர் மொழிக் கொள்கைகள்

மொழிவழித் தேசியம்

4.1. பாவேந்தரின் பாரதி

20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற இரு பெருந் தமிழ்க் கவிஞர்கள் பாரதியும் பாவேந்தரும். பாரதியாரின் உணர்ச்சிக் கவிதைகளாலும், நடவடிக்கைகளாலும் ஈர்க்கப்பட்ட பாவேந்தர் அவருக்குச் சீடரானர். பாரதியார், தமிழ் உணர்வாளராகச், சாதிமறுப்புப் போன்ற சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையும், புதுமைப் போக்கும் கொண்டவராக இருந்ததால், அவரோடு பழகிய பாவேந்தருக்கு அவரின் மீது அளவற்ற ஈடுபாடு தோன்றியது. பாரதிபால், பாவேந்தர் கொண்டிருந்த பெருமதிப்பு நிலையானது. பாவேந்தரின் கொள்கைப் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் பாரதியிடம் கொண்ட நன்மதிப்புக் குறையவே இல்லை என்று கூறலாம்.

உய்வகை காட்டும் உயர்தமிழுக்குப்
புதுநெறி காட்டிய புலவன் பாரதி (587)

என்று பாவேந்தர் பாரதியைப் புகழ்வார். பாவேந்தருக்குப் பாரதிபால் அளவற்ற ஈடுபாடு ஏற்பட்டதற்குத் தமிழும் ஒரு காரணமாகும். அதைப் பாவேந்தர்.

வாளேந்து மன்னர்களும் மானியங்கொள்
புலவர்களும் மகிழ்வாய் அந்நாள்
தாளேந்திக் காத்த நறுந்தமிழ் மொழியைத்
தாய்மொழியை உயிரை இந்த

நாள் ஏந்திக் காக்குநர் யார்? நண்ணுநர் யார்?
என அயலார் நகைக்கும் போதில்
தோளேந்திக் காத்த எழிற் சுப்ரமணிய
பாரதியார் நாமம் வாழ்க! (582)

என்று நறுந்தமிழ் மொழியைக் காத்ததாலும்,

தமிழ்க் கவிதையில் உரைநடையில் தனிப் புதுமை
சுவையூட்டம் தந்து சந்த
அமைப்பினிலே ஆவேசம் ; இயற்கையெழில்
நற்காதல் ஆழம்காட்டித்
தமைத்தாமே மதியாத தமிழர்க்குத்
தமிழறிவில் தறுக் குண்டாக்கிச்
சுமப்பரிய புகழ் சுமந்த சுப்ரமணிய
பாரதியார் நாமம் வாழ்க ! (582)

என்று தமிழ் அறிவில் தறுக்குண்டாக்கியதாலும் பாரதிமேல் பாவேந்தருக்கு ஈடுபாடு ஏற்பட்டது எனக் கூறலாம்.

பாவேந்தர், பாரதியின்பால் நன்மதிப்பு கொண்டிருந்தாலும், தம்முடைய கொள்கைகளில், மொழி அணுகுமுறையில் தமக்கென ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். பாவேந்தரும், பாரதியும் தமிழ் பற்றிய சிந்தனைகள் சிலவற்றில் ஒன்றுபட்டும், பல நிலைகளில் வேறுபட்டும் செயல்படுகின்றனர். அவற்றை இனி விரிவாகக் காணலாம்.

4.2. தமிழ்உணர்வு

உணர்வு என்பது முற்றிலும் அகநிலை சார்ந்ததாகும். ஒருசில நிகழ்வுகளின் தாக்கம், ஒருவகையான உணர்வைத் தோற்றுவிக்கலாம். மொழி உணர்வு, சமூக அரசியல் நிலைப்பாட்டிற்கு ஏற்பத் தோன்றுவதாகும். இவ்வுணர்வு ஒரு மொழியைப் பற்றிய உயர்கருத்துக்களையும் பிற மொழிகள் பற்றி மோசமான கருத்தாடல்களையும் கொண்டு இருக்கலாம். அல்லது பிற மொழிகளின் மீது நன்மதிப்பும் தாய்மொழி மீது எதிர்மறை கருத்துக்களையும் உருவாக்கலாம். மொழி உணர்வு நிலையைப் பொறுத்தமட்டும் பாரதியும் பாவேந்தரும் இரண்டு கருத்துக்களில் ஒன்றிச் செல்லுகின்றனர். தமிழ், தமிழின் தொன்மை, தமிழின் இனிமை ஆகிய நிலைகளில் இருவரின் உணர்வுகளும் ஒன்றாக உள்ளன.

செந்தமிழ் நாடெனும் போதினிலே -இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே

என்று பாரதியும்

தமிழுக்கு அமுதென்று பேர்- அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

என்று பாவேந்தரும் மொழியின் இனிமை பற்றிக் கூறுவர். அதேபோல மொழியின் தொன்மை என்ற நிலையில் "வானம் அளந்ததனைத்தும் அளந்திடும் வண்மொழி" என்றும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்," என்றும் கூறுகின்றார் பாரதி. பாவேந்தரும் தமிழின் தொன்மையைக் குறிப்பிடும் பொழுது.

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்
மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் (180)

என்பார். ஒவ்வொரு தாய் மொழியாளனுக்கும் அவனுடைய மொழி இனிமையானதுதான். இதற்குக் காரணம் அத் தாய்மொழியில் ஒருவருக்கு இருக்கும் ஆற்றலாகும். பாரதி *

எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு.
இவற்றிலே தமிழைப் போல வலிமையும், திறமையும்
உள்ள தொடர்புப் பாஷை வேறொன்றும் இல்லை (23:103)

என்று குறிப்பிடுவார்.

பாரதியின் காலத்தில் ஆங்கிலம் கற்ற பலரால் தமிழ் மொழி தாழ்வாகக் கருதப்பட்டமை, பாரதி இவ்வாறு தமிழின் சிறப்பை விதந்து கூறுவதற்குக் காரணமாகலாம். பாரதியின் தமிழ் உணர்வை நுஃமான், *(1999)*

---

* பாரதி கட்டுரை மேற்கோள், அருணா பதிப்பகம் (1964) வெளியிட்ட நூலில் இருந்து எடுக்கப்பட்டவை.

அறிவியலுக்குப் புறம்பானவை எனினும், அவை அவனது சுதேச உணர்வின் வெளிப்பாடுகள் என்றே நாம் கருத வேண்டியுள்ளது

என்பார்.

மேலும் அவர்,

பிரதேச உணர்வும், தேசிய உணர்வும் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் இணைந்தே செயற்பட்டன. சுதந்திரப் போராட்டக் கால இந்தியச் சிந்தனையாளர் பலரிடம் இப்பண்பினை நாம் காணலாம். பாரதி இதற்கு விதிவிலக்கல்ல. பிரதேச ரீதியிலான தமிழ்ப் பண்பாட்டு உணர்வும் தேசிய ரீதியிலான முழு இந்தியப் பண்பாட்டு உணர்வும் பாரதியிடம் இணைந்தே காணப்படுகின்றன (1991:18)

என்பார்.

பாவேந்தரின் மிகவும் அடிப்படையான பாடுபொருள்களில் தமிழும் ஒன்று. தமிழ்மொழி பற்றிப் பாரதியைவிட ஏராளமான கவிதைகளைப் பாரதிதாசன் புனைந்து சிறப்பித்துள்ளார். பாரதிக்கு அடிப்படையாக அமைந்தது தமிழர்களின் ஆங்கில மோகம் என்றால், பாவேந்தரின் தமிழ் உணர்விற்கு அடிப்படையாக அமைவன பல. தமிழர்களின் தாழ்ந்த உணர்வற்ற நிலை, வடமொழி ஆதிக்கம், இந்தித் திணிப்பு, ஆங்கில ஆதிக்கம், பார்ப்பனர்களின் வடமொழிப்பற்று, தமிழ்மொழி, பிறமொழிக் கலப்பின்றித் தனித்து இயங்கும் ஆற்றல் அற்றது என்ற கருத்துக்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பாவேந்தருக்குத் தேசிய விடுதலையோடு தமிழ் இன விடுதலை, தமிழ்மொழி விடுதலை ஆகியன இத்தகைய உணர்வுகளை உருவாக்கி உள்ளன எனலாம். இத்தகைய தமிழின் மிகைப்பற்றே பிறமொழிகளைத் தாழ்வாகவும் பாவேந்தரைக் கருதிடச் செய்தது.

பாரதிகாலத்தில், பாரதி ஆங்கில ஆதிக்கம் பற்றியே அதிகம் உணர்ந்திருக்கிறான். காக்கைத் தமிழ் என்கின்ற கட்டுரையில்

தமிழ்பாஷை இறந்து போய்விடுமென்றும்

தமிழ்நாட்டில் எல்லாப் பாஷைகளுக்குமே பிரதியாக இங்கிலீஷ் பாஷை ஏற்படுமென்றும் நம்பிய மூடர்களில் சுமார் 100 வருடங்களுக்கு முன்பு நமது ஜனங்களிலே பலர் இருந்தார்கள். இப்போது கூட அந்த நம்பிக்கையுடையவர்கள் ஆங்கிலேயர்களில் அநேகர் இருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள பாஷைகள் எல்லாம் மடிந்துபோய் அவற்றின் இடத்திலே இங்கிலீஷ் நிலவிடும் என்பது இவர்களுடைய எண்ணம் (28:104)

என்று குறிப்பிடுவார்.

இத்தகைய பின்னணியில்தான்,

பொதுவாக இந்நாட்டில் ஆங்கிலம் கற்றோரெல்லாம் சுய பாஷாபிமானம் என்பது குன்றியிருப்பது அன்றி, அதன் நயமறியாது திட்டுவதை நினைக்கும் பொழுது நமக்கு வருத்த முண்டாகிறது (23:64)

என்றும் பாரதி எழுதுவார்.

4.3. வடமொழி உணர்வு

ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை எதிர்த்த பாரதி, வட மொழி பற்றி உயர்ந்த கருத்துக்களைக் கொண்டிருந்தார். தமக்குப் பயிற்சியுள்ள மொழிகளிலே தமிழைப் போல வலிமையும், திறமையும் உள்ள மொழி இல்லை என்று கூறிய பாரதி, வடமொழியை ஒரு ஒப்பற்ற பாஷை என்பார். அதைத் தேவபாஷை என்றும் பாரதி சிறப்பித்துக் கூறுவார்.

நம் முன்னோர்களும் அவர்களைப் பின்பற்றி நாமுங்கூடப் புண்ணிய பாஷையாகக் கொண்டாடி வரும் சமஸ்கிருத பாஷை மிகவும் அற்புதமானது. அதைத் தெய்வ பாஷை என்று சொல்வது விளையாட்டன்று. மற்ற சாதாரண பாஷைகளை யெல்லாம் மனித பாஷை யென்று சொல்வோ மானால், இவை அனைத்திலும் சிறப்புடைய பாஷைக்குத் தனிப்பெயர் ஒன்று வேண்டுமல்லவா? அதன் பொருட்டே அதைத் தெய்வபாஷை

என்கிறோம் (16:39)

என்று எழுதுவார்.

ஆனால் பாவேந்தர், தமிழ் மொழிக்கு முதல் எதிரியாக வடமொழியைக் காண்பார். தமிழில் கலந்த ஏராளமான வடமொழிச் சொற்கள், மக்களின் வடமொழி மோகம் ஆகியனவும், தமிழரின் இந்தத் தாழ்வான நிலைக்குக் காரணம் வடவர்தான் என்ற எண்ணமும் அவர் வடமொழிக்கு எதிரான கருத்துக்களைக் கொள்ளச் செய்தன. வடமொழியைச் செத்தமொழி என்றும், இந்தியை எருமைமொழி என்றும், செத்த மொழியில் புழுத்த மொழி என்றும் ஆவேசம் கொள்ளச் செய்கிறார். வடமொழியைப் பற்றி பாவேந்தர்

வடமொழிக் கொருபெயர் வடமொழி நூல்களில்
இல்லவே இல்லை ; என்ன வியப்பா?
சமஸ்கிருதம் எனச் சாற்றுவ தெல்லாம்
செம்மையுடன் ஒழுங்கும் பெற்றதைச் செப்பும்,
சமஸ்கிருதம் எனும் சொல் மொழியைக் குறிக்க
அமையவே இல்லையாம்..........(1862)

என்று குறிப்பிட்டுத் தமிழின் சிறப்பைக் கூறுவார். பாவேந்தர் அன்றைய மொழிச் சூழலைப் பிறமொழி ஆதிக்கத்தைப் பின்வருமாறு கூறுகிறார்.

ஆங்கிலமே தாய்மொழி ஆவது வேண்டுமெனும்
தீங்கில் சிறந்த சிறுமதியோர் - ஈங்குத்
திருந்தல் வேண்டும். செய்த செயற்கு
வருந்தல் வேண்டும் மனம்
இந்தி புகுத்துகின்ற எத்தர்க்கும் ஒத்தூதும்
மந்திக்கும் வேண்டும் வருமானம்............(1841)

என்று ஆங்கிலம், இந்தி வேண்டுவோரைச் சாடுவார்.

இத்தகைய பின்புலங்களில் பாவேந்தர், தமிழின் உயர்வைப் பற்றியே பாடியிருக்க முடியும். தமிழின் உயர்ந்த மரபு, பழமை, இளமை, இனிமை ஆகியன அவரின் பாடுபொருட்களாயின.

சமுதாயத்தில் நிலவிய வடமொழிசார் கருத்துக்கள்,

பாவேந்தரை மேலும் மேலும் வடமொழிமேல் வெறுப்பை ஏற்படுத்தச் செய்தன.

செந்தமிழும் வடமொழியால் வந்ததென்று சொல்லுகின்றார
அந்தப் பேச்சில் மெய்யுண்டோ பொன்னப்பா அது
பொந்தில் நுழைந்த கரடியா சின்னப்பா

..

ஆரியரும் தமிழரைப் போல் ஆதிமுதல் இங்கிருந்து
காரியங்கள் பார்த்தாராம் பொன்னப்பா - அவர்
ஊர் திருட வந்தவரே சின்னப்பா....... (1853)

என்ற வடமொழியை வடவரை எதிர்த்துப் பல கவிதைகள் எழுதினார்.

வீழ் ஆலின் வௌவாலைக் குயில் என்பார்போல்
தகுமொழி என்றும் தேவ மொழியீ தென்றும்
தம்மொழியைத் திராவிடத்தில் உயர்த்தப் பார்த்தார்
புகழ் தமிழாம் பூங்காவில் குயிலை மண்ணிற்
புதைத்திடவும் ஏதேதோ செய்து பார்த்தார் (1474)

என்ற ஆரியரின் சூழ்ச்சிக்கு எதிராகவே

எம்மொழிக்கும் தமிழ்ச் செம்மொழி வேறென
எண்பிக்க மாட்டாயா? தம்பி
நம் அடுக்களையில் நாய்பு குந்ததை
நவிந்து காட்டாயா? (1780)

என்று கூறுவார்.

எனவே, பாரதியின் தமிழ் உணர்வு, ஆங்கில மோகத்திற்கு எதிரானதாம். தேசியப் பண்பாட்டளவில் பிரதேச உணர்வாகவும் கொண்டால், பாவேந்தரின் தமிழ் உணர்வு, அன்றைய சமூகத்தின் பிறமொழி, பிறஇன உயர்வுகளுக்கு எதிராகக் கட்டப்பட்ட உணர்வாகும். பாவேந்தர் தமிழ் பற்றிப் பாடிய ஒவ்வொரு பாடலும் பாடலின் பொருளும் இதைத்தான் வலியுறுத்தும்.

4.3.1. பழமை பாராட்டல்

பாரதி, பாவேந்தர் இருவரும் தமிழின் தொன்மை குறித்துக் கூறியிருந்தாலும், தமிழைப் புதிய பயன்பாடுகளுக்குக் கொண்டு

செல்லவேண்டும் என்பதையும் வலியுறுத்துவார்.

பாரதி 'தெலுங்கு மஹாசபை' என்னும் கட்டுரையில்

> *தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள பாஷைகளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்தாலே ஒருவன் தமிழபிமானியாக மாட்டான். பள்ளிக் கூடத்துச் சாஸ்திரங்களெல்லாம் தமிழ்ப் பாஷையில் கற்றுக் கொடுக்கும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழராகப் பிறந்தோர் கூடியிருக்கும் சபைகளிலேயும், தமிழராகப் பிறந்தோர் ஒருவருக்கொருவர் பேசும் போதும் இதர பாஷைகள் பேசாமல் தமிழே பேசும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழில் புதிய கலைகள், புதிய காவியங்கள், புதிய உயிர் தோன்றும்படி செய்வோன் தமிழபிமானி (22:209)*

என்று தமிழின் பயன்பாட்டு எல்லையை விரிவுபடுத்த வேண்டும் என்பார். இதே கருத்தைப் பாவேந்தர்.

> *எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்*
> *தலைமுறைகள் பல கழித்தோம் குறைகளைந் தோமில்லை*
> *தகத்தாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர் (178)*

என்றும், துறைதோறும் நின் எழிலைக் கூட்டுவோம் என்றும். புதிய பயன்பாட்டுவழி கூறுவார். தமிழ் உணர்வு நிலையில் இருவரும் ஒன்றாக இருந்தாலும், தமிழின் பயன்பாட்டு நிலையில் இருவரின் கருத்துக்களும் வேறுபடுவதை இனிக் காணலாம்.

4.4. பொதுமொழி

பொதுமொழி என்பது ஒரு நாட்டு மக்கள் தங்களது இன அடையாளத்திற்காகவும், கருத்துப் பரிமாற்றம், ஆட்சி போன்ற செயல்பாட்டிற்காகவும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் ஒரு மொழியாகும். இதைத் தேசிய மொழி என்றும் கூறலாம். பல மொழிகள் வழங்கப்படுகின்ற சூழல் உள்ள நாடுகளில் இந்தத் தேசிய மொழி என்பது நாட்டுருவாக்கத்திற்கும், பொது தொடர்பாடலுக்கும் மிகவும் பயன்படக் கூடிய ஒன்று. இத்தகைய பொதுமொழி தொடர்பாகப் பாரதியும், பாவேந்தரும் கருத்தியல்

அடிப்படையில் வேறுவேறு கொள்கையினைக் கொண்டுள்ளனர். தேசியம், நாடு என்ற நிலையில் இருவரின் கருத்தாக்கங்களும் அணுகுமுறையும் வேறாக உள்ளன. பாரதி இந்தியாவின் பொதுமொழி குறித்தும், தமிழ்நாடு குறித்தும் தமது சிந்தனையைத் தெரிவிக்கிறார். ஆனால், பாவேந்தரின் சிந்தனை திராவிடம், தமிழ்நாடு தொடர்பாக உள்ளது. பாரதியின் கருத்தாக்கங்கள் "முப்பதுகோடி முகமுடையாள், ஆனால் சிந்தை ஒன்றுடையாள்" என்று விடுதலையைப் பற்றிய எண்ணமாக உள்ளது. ஆனால் பாவேந்தர் "வாழ்கின்றார் முப்பது கோடி என்றால் சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்" என்று பேதத்தின் அடிப்படையில் அவர் சிந்தனை அமைந்துள்ளது. பாரதிக்கு நாட்டு விடுதலை ஒன்றே முக்கியக் குறிக்கோளாக உள்ளது. ஆனால், பாவேந்தருக்குச் சாதி, இனம், மொழி பேதங்கள் அவற்றின் விடுதலை மனத்தைத் தாக்கியது எனலாம். பாரதியும் பேதங்களின் வழி ஒருமைப்பாடு காண விழைகிறான்.

> *இந்தியா பல விதப் பிரிவுகளை உடையதாய் இருந்த போதிலும் உண்மையிலே ஒன்றாய் இருப்பதற் கிணங்க, அதிலுள்ள வெவ்வேறு நாடுகளிலே வெவ்வேறு பாஷைகளிலிருந்த போதிலும் முழுமைக்கும் ஒரே பொது பாஷை வேண்டும்*

என்றும்,

> *தமிழர்கள் தமிழும் ஹிந்தியும் என இவ்வாறே எல்லா வகுப்பினரும் அறிந்திருப்பார்களானால் நமக்குப் பொது பாஷை ஒன்றிருக்கும்*

என இந்தியா பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளார் (29:348)

பாரதியின் பொதுமொழி பற்றிய நிலைப்பாடு ஒரே நிலையில் இல்லை. ஆரம்பத்தில் இந்தி பொதுப்பாஷையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆனால், பிற்காலத்தில் வடமொழி பொதுமொழியாக வேண்டும் எனத் தனது எண்ணத்தைத் தெரிவிக்கிறார்.

> *ஸமஸ்கிருத பாஷையே இந்தியாவுக்குப் பொது பாஷையென்றும் ஏற்கனவே ஆதிக்காலந்தொட்டு அதுவே பொது பாஷையாக இயல் பெற்று வருகிறது*

என்று அரவிந்தர் போன்றோர் கூறுவதை அவர் ஏற்றுக்கொள்கிறார்.

தமிழை ஒரு மாநில மொழியாகவும் வடமொழியை அகில இந்திய மொழியாகவும் கருதியுள்ளார். இது குறித்து அவர்

> *...............தமிழ்நாட்டில் தமிழ் சிறந்திடுக. பாரததேசம் முழுவதும் எப்போதும் போலவே வடமொழி வாழ்க. இன்னும் நாம் பாரத தேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூரணமாகச் செய்யுமாறு நாடு முழுவதும் வடமொழிப் பயிற்சி மென்மேலும் ஓங்குக. எனினும், தமிழ்நாட்டில் தமிழ்மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக (16:256)*

என்று கூறுவார்.

பாரதியின் வடமொழிப் பற்றுப் பற்றி முன்னர்க் குறிப்பிட்டதை இங்கு நினைவு கூரலாம். இந்திய நாட்டின் பண்பாட்டு மொழியாகப் பாரதி வடமொழியைக் காணுகிறார். ஆனாலும் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தமிழ்தான் முதல் நிலையில் அவருடைய மனதில் நிற்கிறது.

பாவேந்தரின் பொது மொழிக் கருத்தியல் பாரதியிடமிருந்து முற்றிலும் வேறுபட்டது. பாவேந்தரின் பொதுமொழியை அறிந்து கொள்வதற்கு முன் அவருடைய நாட்டு எல்லை பற்றிய கருத்தியலை அறிந்து கொள்ள வேண்டும்.

சிறுவர் சிறுமியர் தேசிய கீதம் எழுதிய காலகட்டத்தில் பாவேந்தர்

> *மன்னும் இமயமலை வடக்காம் புகழ்*
> *வாய்ந் திருக்கும் குமரி தெற்காம்*

என்றும்

> *பாரத நன்னாடு*
> *பழமை பெற்ற நாடு - தினம்*
> *சாரத் தமிழிலதைப் பாடு (67)*

எனப் பாரத தேசத்தை ஏற்றுத் தமிழில் அதைப்பாட நினைத்தார். ஆனால் பிற்காலத்தில் சமூக அரசியல் காரணங்களால் அவருடைய கருத்தியல் மாறுகிறது.

இந்தியா ஒருநா டென்று கூறித்
தமிழ ரைச்சிறு பான்மைய ராக்கி
உயிரை உறிஞ் கின்றது தில்லி (1466)

என்றும் தமிழருக்கு உரிய தகுதி தராததால் இந்தியாவை ஏற்க மறுக்கிறார்.

செந்தமிழா உன் நாட்டின் பேரென்ன செப்பென்றால்
இந்தியா என்றே இளிக்கின்றான் என்தாயே
பைந்தமிழ் நாட்டினையும் பாரதம் என்றும் சொல்வான்
எந்தவகை இச்சேய் உருப்படுவான் என் தாயே (1507)

என்று கூறுவார். பாவேந்தரின் கருத்தியலில்,

தெலுங்க நாடு செப்பு கேரளம்
கன்னடம் துளுவம் என்னும் நாடுகள்
அனைத்தும் புதுப்பெயர் ஆம் என அறிக
எல்லாம் பழந்தமிழ் நாடென இயம்புக (1754)

என்று பழந்தமிழ் நாடாகத் திராவிட நாட்டை முன்னிறுத்துவார்.

பாவேந்தரின் நாடு பற்றிய கருத்தியல் மாற்றத்தைச் சுயமரியாதைச் சுடர் பாடல்கள் பதிப்பின் வழியாக மணிகண்டன் (2001:16)விளக்குவார். "சுயமரியாதைச் சுடரின் பாடல்கள், பிற்காலத்தில் வெவ்வேறு தொகுதிகளில் இடம் பெற்றபோது சில மாற்றங்களோடு அவை பதிப்பாயின. இம்மாற்றங்கள் கவிஞராலேயே செய்யப்பெற்றவை. இம்மாற்றங்கள் பாடவேறு பாடுகள் கவிஞரின் காலந்தோறுமான கருத்து நிலை மொழி நடை குறித்த பார்வைகளை நமக்கு உணர்த்துகின்றன" என்று கூறிக் கருத்து நிலை மாற்றத்தால் பாரதநாடு என இருந்த தொடர்களைத் தாய்நாடு/தமிழ்நாடு என்ற மாற்றியதைப் பின்வருமாறு காட்டுவார்

முன்னை வடிவம்	மாற்றம் பெற்ற வடிவம்
கண்ட பாரததேசமே	கண்ட என் அன்னை நாடே
திவ்ய பாரததேசமே	திருவார்ந்த என்றன் நாடே
தூய பாரத தேசமே	தூய என் அன்னை நாடே
அழகி பாரததேசமே	அழகு செந்தமிழ் வையமே

பெரிய பாரத தேசமே பெரிய என் அன்னை நாடே

இத்தகைய பின்னணியில் "இந்தி பொது மொழி"யைப் பற்றிப் பாவேந்தரின் சிந்தனைகளைக் காணவேண்டும். 1948 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப்பாட்டு என்ற ஒரு தொகுதி வெளியிடப்படுகிறது. அதில்,

இன்னலை ஏற்றிட மாட்டோம் சொல்லும்
இந்தியப் பொதுமொழி இந்தி என்றாலோ (716)

என்றும்

வடக்கர் அனுப்பி வைத்த இந்த மொழியே-எம்
வாழ்வைக் கெடுக்க வந்த இந்தி மொழியே (721)

என்றும் இந்தி பொது மொழி என்ற கருத்தை ஏற்க மறுக்கிறார்.

பாவேந்திரின் கருத்துப்படி தமிழ்நாடு, தமிழ் மொழி என்ற நிலைப்பாடுதான், நிலைபெற்றுள்ளது. அதை,

ஒருமொழி ஓரினம் கொண்டதோர் நாடு
பிறன் அதில் அடிவைக்க நினைப்பதும் கேடு (1459)

என்பார். பாவேந்தர் வடமொழி, இந்தி அனைத்தும் பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் தமிழகத்தில் புகுந்தது என்பதைப் பல இடங்களில் குறிப்பிடுவார்.

பாரதி பொதுமொழி பற்றிக் கொண்டிருந்த கருத்துப் பாவேந்தருக்கு உடன்பாடில்லை. பொதுமொழி என்ற சிந்தனையை விடுதலைக்கு முன்னர்ப் பாரதி சிந்தித்தான். பாவேந்தரும் ஏறக்குறைய இந்தி பொதுமொழி, கட்டாய இந்தி திணிப்பு என்ற சூழ்நிலையில் தம் கருத்துக்களை வெளியிட்டார். இந்திய நாட்டில் பல மொழிகள் இருந்தாலும், அதற்குப் பொதுமொழி தேவையில்லை என்ற கருத்தையே பாவேந்தர் கொண்டிருந்தார்.

பல இனம் பலமொழி பற்றி ஒருசில-
பழம்பெரு நிலத்தில் பன்மொழி பல இனம்
இருப்பதால், இஃதொரு பல்கலைக் கழகம்
ஆனால், தேனாய்ப் பேசும் திருவே

ஓரினத்துக் குள்ள மொழியைப்
பல இனத் துள்ளும் பரப்ப முயல்வதால்
நாட்டில் ஒற்றுமை நண்ணும் என்ற
கோட்பாடு சரி என்று கொள்வதற் கில்லை
அவ்வவ் வினத்தின் அவ்வம் மொழிகளைச்
செம்மை செய்து செழுமை யாக்கி
இனத்து மக்கள் எவர்க்கும் பரப்பும்
ஒன்றினால் நாட்டில் ஒற்றுமை ஏற்படும்
என்பதென் எண்ணம் கன்னற்சாறே (1723)

பாவேந்தரின் தமிழ்ப்பற்று, வேறு எந்த மொழியையும் ஏற்க மறுக்கிறது.

பொதுவாகப் பல மொழிகள் வழங்கப்படும் ஒரு சூழலில் இன அடையாளத்திற்கு ஒருமொழி, பல மொழிகளுக்கிடையே கருத்துப் பரிமாற்றத்திற்கு ஒரு மொழி, பன்னாட்டுக் கருத்துப் பரிமாற்றத்திற்கு ஒரு மொழி என்று பிரித்து மொழிகளைப் பயன்படுத்துவர். பாரதி, பலமொழிகள் பேசுகின்ற நாட்டில் தேசிய ஒருமைக்காக இந்தி/வடமொழியைப் பொதுமொழியாகக் கருதினார். ஆனால், பாவேந்தர் பல மொழிகள் இருப்பதை உணர்ந்தாலும், இனத்தின் மொழிகள்தாம் வளரவேண்டும் என்று கருதுகிறார். மொழியின் மீது உள்ள மிகைப்பற்றே பிறமொழிகளுடன்/பிற மொழியாளர்களுடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தை மறைக்கிறது எனலாம்.

4.5. தமிழ் இலக்கணம்

ஒரு மொழியின் அமைப்புத்தான் அதன் இலக்கணம் என்பது மொழியியல் நோக்காகும். மொழியின் கூறுகளான ஒலிகள், உருபன்கள், சொற்கள் முதலியன ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறையில் இணைந்து வாக்கியங்கள் உருவாகின்றன. இத்தகைய ஒழுங்கமைப்பே இலக்கணமாகும். ஒரு மொழியில் இலக்கண நூல் இல்லையெனில், அம்மொழிக்கு இலக்கணம் இல்லை என்று பொருள் அன்று. எல்லா மொழிகளும் ஓர் இலக்கண அமைப்புடன்தான் செயல்படுகின்றன என்பதை நினைவில் கொள்ளவேண்டும். தமிழ் இலக்கணம் குறித்துப் பாரதி பின் வரும் கருத்தைத் தெரிவிக்கிறார்.

தமிழ் பாஷைக்கோ, இலக்கணம் முதன் முதலாக

அகத்தியராலும், அவருடைய சிஷ்யராகிய திரணதூமாக்நி (தொல்காப்பியன்) என்ற ஆரிய முனிவராலுமே சமைத்துக் கொடுக்கப்பட்ட தென்பதும் மெய்யே. அதனின்றும் தமிழிலக்கணம் பெரும்பாலும் சம்ஸ்கிருத இலக்கணத்தை அனு சரித்தே சமைக்கப் பட்டிருக்கிறதென்பதும் மெய்யே. எனினும் வட மொழிக் கலப்புக்கு முந்தித் தமிழுக்கு வேறு வகையான இலக்கணமிருந்து ஒருவேளை பின்னிட்டு மறைந்திருக்கக் கூடுமென்பதற்குப் பல ஹேதுக்கள் இருக்கின்றன (16:194)

தமிழில் மரபாகப் பெறப்பட்ட கருத்தையே பாரதி கொண்டிருக்கிறார். அகத்தியரும் தொல்காப்பியருமே தமிழ் மொழியில் இலக்கண அமைப்பை உருவாக்கினர். தமிழ் எவ்வாறு பேசவும், எழுதவும் படவேண்டும் என்பதை வரையறுத்தனர். அகத்திய முனிவருக்கு முன் தமிழ்மொழி இலக்கணமற்றே இருந்தது என்ற பொருள்படவே பலர்இவ்வாறு பேசி வருகின்றனர். தமிழை ஆதிசிவன் பெற்றுவிட அகத்தியர் அதைக் கண்டு மகிழ்ந்து நிறைவான இலக்கணம் செய்து கொடுத்ததாகக் கூறும் பாரதியின் கவிதைவரிகளும் இதே பொருளையே வெளிப்படுத்துகின்றன. இவையெல்லாம் தமிழ் மரபுவழி விளக்கத்தின் விளைவுகளாகும் (நுஃமான் :1999. 23)

இலக்கணம் பற்றிய நவீன நோக்கின் அடிப்படையில் அகத்தியரும் தொல்காப்பியரும் தமிழுக்கு முதன்முதலில் இலக்கணம் சமைத்துக் கொடுத்தனர் என்பதைவிடத் தங்கள் காலத்துத் தமிழ் மொழியின் உள்ளார்ந்த அமைப்பைக் கண்டறிந்து அதனை விதிவடிவில் இலக்கண நூலாக முதன்முதலில் வெளியிட்டவர்கள் இவர்களே என்ற பொருளில் எடுத்துக் கொள்ளலாம் என்று நுஃமான் (34) குறிப்பிடுவார்.

அகத்தியர் பற்றியும், அகத்தியம் பற்றியும் தொல்காப்பியர் அகத்தியரின் சீடர் என்பது பற்றியும் கூறப்படுவனவெல்லாம் கர்ண பரம்பரைக் கதைகளே தவிர அவற்றுக்கு அறிவியல் அடிப்படையிலான ஆதாரங்கள் எவையும் இல்லை. தொல்காப்பியத்திலோ, தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனர் எழுதிய பாயிரத்திலோ அகத்தியர் பற்றியோ, அகத்தியம் பற்றியோ

எவ்விதக் குறிப்புகளும் இல்லை. கி.பி.8ஆம் அல்லது 9 ஆம் நூற்றாண்டில் இருந்தே அகத்தியம் பற்றிய குறிப்புக்கள் தமிழ் நூல்களில் காணப்படுகின்றன என்று தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் கருத்தை நுஃமான் விளக்குவார். மேலும் அவர், அகத்தியர் பெயரில் ஓர் இலக்கண ஆசிரியர் இருந்தார் என்றும், அவருடைய பெயரில் இன்று வழங்கும் சில இலக்கணச் சூத்திரங்களைக் கவனமாகப் பரிசீலித்துப் பார்க்கும்போது அவை தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டவையாகவே கருதத்தக்கன என்றும், இவ்வகத்தியர் பல்லவர் கால நடுப் பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என்றும் தெ.பொ.மீ கூறுவார் . இது எவ்வாறு இருப்பினும் பழைய கர்ணபரம்பரைக் கதையையே பாரதி வரலாற்று உண்மையென ஏற்றுக் கூறியுள்ளார் எனக் கருதலாம்.

பாவேந்தர் தமிழ் இலக்கணம் தொடர்பாகக் கூறும்பொழுது அகத்தியரும், தொல்காப்பியரும் தமிழைக் கெடுத்தவர்கள் என்ற கருத்தையே கொண்டிருந்தார். பாவேந்தரும் பழைய நம்பிக்கையை ஏற்றுக் கொள்கிறார் என்றுதான் பொருள்கொள்ள முடியும். ஆனால் தொல்காப்பியத்தில் வடஎழுத்து, வடமொழி அமைப்புப் பற்றிக் கூறப்படுவதாலும், தொல்காப்பியர் ஆரியர் என்ற கருத்தாலும் தொல்காப்பியத்தை ஏற்க மறுக்கிறார். அகத்தியம் தொல்காப்பியம் இவற்றை நீக்கித் தமிழில் புதிய இலக்கணம் படைக்க விரும்புகிறார். தொல்காப்பியர், அகத்தியர் என்ற ஆரியரின் சீடன், இவரும் ஆரியர் என்ற கருத்தாக்கமும், வடமொழி ஆதிக்கமும் ஆரம்பகாலகட்டத்தில் பாவேந்தர் அவர்களை ஏற்காமைக்குக் காரணங்களாகும். பின்னர்த் தொல்காப்பிர் தமிழர் என்ற கருத்தை அடியொற்றி அவரைப் போற்றுகிறார்.

அகத்தியக் குள்ளன் ஆரியர் கொள்கையைப்
புகுத்தினான் செந்தமிழ்ப் பொன்னாடுதனில்! (694)

என்ற ஆரிய எதிர்ப்பும், வடமொழிக் கலப்புமே பாவேந்தருக்கு முதன்மையாகத் தெரிகிறதே தவிர, கர்ண பரம்பரைக் கதையென்றோ, அறிவியல் அடிப்படையிலோ அவர் பழைய இலக்கணங்களை ஒதுக்கவில்லை.

4.6. மொழிவளர்ச்சி

மொழி வளர்ச்சி என்பது சமுதாய வளர்ச்சியோடு

தொடர்புடையது என்ற அறிவியல் கருத்தின் அடிப்படையில், தமது கருத்தைக் கொண்டவர் பாரதி. எனவே மொழியைச் சமூகக் கருவியாகப் பார்க்கிறார். மொழி, குறிப்பாக மாறும் தன்மை கொண்டது என்பதை,

> இலக்கணத்தை எடுங்கள் ; பழையன கழிதலும்,
> புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்று
> பவணந்தி முனிவரே சொல்லுகிறார்

என்று பாரதி கூறுவார். மேலும் புனர் ஜன்மம் என்ற கட்டுரையில்,

> *நெடுங்காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக்காலத்துப் பாஷையைத் தழுவினவை. காலம் மாற மாறப் பாஷை மாறிக் கொண்டு போகின்றது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர்கள் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்க வேண்டும் (16:45)*

என்று மொழி மாற்றத்தைக் குறிப்பிடுவார், அதேபோல,

> *மனித அறிவு வளர்ச்சிக்குப் பாஷை ஒரு கண்ணாடி. ஒரு நாட்டாரின் அறிவு வளர்ந்து கொண்டு வரவர அந்நாட்டின் பாஷையும் விசாலமடைந்து வருகிறது (23:70)*

என்று மொழி மாற்றத்தைக் குறிப்பிடுவார்.

தமிழ்மொழி வளர்ச்சியடைய வேண்டுமானால் எல்லாத் துறைகளிலும் தமிழ் மொழியே பயன்படுத்தப்படவேண்டும் என்றார் பாரதி. அதே கருத்தைத்தான் பாவேந்தரும் கொண்டிருந்தார். ஆனால் எத்தகைய தமிழ் என்பதில்தான் இருவருடைய கருத்தும் வேறுபடுகின்றது. பாரதி மொழியை ஒரு கருவியாகக் கொண்டு புதிய துறைகளுக்கு ஏற்பப் புதிய கருத்துக்களுக்கு ஏற்பப் புதிய சொற்கள், புதிய எழுத்து முறைகள் பயன்படுத்தப்படவேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர். ஆனால் பாவேந்தரோ, தமிழ் மொழியை ஓர் இனத்தின் குறியீடாகக் கொண்டு மொழியை உணர்வு வழியில் அணுகுவதால், மொழிப்பயன்பாட்டில் ஒரு நெகிழ்வற்ற நிலைப்பாட்டையே

கொண்டிருந்தார்.

பாவேந்தர் மொழியின் இலக்கண மரபைப் போற்றி அதையே பின்பற்ற வலியுறுத்துவார். ஆனால் பாரதி மரபிலக்கணப் போற்றலை ஒரு பயனற்ற தன்மையாகக் கருதுவார். அதை அன்மொழித்தொகை கற்பிப்பது தொடர்பாகப் பாரதியின் பின்வரும் கூற்றின் வழியாக அறியலாம்.

> *நெல் எப்படி விளைகிறது என்பதைக் கற்றுக் கொடுக்காமல் அன்மொழித்தொகையாவது யாது என்று படிப்புச் சொல்லிக் கொடுப்பதை நினைக்கும் போது கொஞ்சம் சிரிப்புண்டாகிறது. அன்மொழித் தொகை சிலரைக் காப்பாற்றும். ஊர் முழுவதும் காப்பாற்றாது. நெல்லுதான் ஊர் முழுவதையும் காப்பாற்றும். அன்மொழித் தொகையைத் தள்ளிவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அன்மொழித் தொகையைப் பயிர் செய்து நெல்லை மறந்து விடுவது சரியான படிப்பில்லை என்று சொல்லுகிறேன் (22:74)*

பாரதியின் இக்கூற்றுப் பாரதி மொழியை ஒரு கருவியாகவே பாவித்தான் என்று கூற வழி செய்கிறது. இத்தகைய வேறுபட்ட அணுகுமுறைகளைப் பாரதி, பாவேந்தரின் மொழிபெயர்ப்புப் கலைச்சொல்லாக்கம், எழுத்துச் சீர்திருத்தம் இவற்றின் வழியாகக் காணலாம்.

4.7. மொழிபெயர்ப்பு

மொழி பெயர்ப்பு பற்றிய பாரதியின் கருத்துக்கள் பட்டறிவின் வெளிப்பாடாக உள்ளன. மொழி பெயர்ப்புத் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கும் உதவும் என்பது இருவரின் கருத்தாகும். ஆனால் பாரதியின் கருத்து அறிவியல் செய்திகள் குறித்த மொழி பெயர்ப்புக்கு முதன்மையளிப்பதாக உள்ளது. சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச் செல்வங்களைச் சேர்க்க என்றும், பிற நாட்டு அறிஞர்களின் சாத்திரங்களைத் தமிழில் தர வேண்டும் என்கிறபோதும், பொதுவான மொழி பெயர்ப்பாகத் தோன்றினாலும், குறிப்பாக அறிவியலை மனதில் கொண்டுள்ளார் பாரதி என்பதைப் ...

பஞ்ச பூதங்களின் இயற்கையைப் பற்றிய ஆராய்ச்சிகளிலே நம்மைக் காட்டிலும் ஐரோப்பியா முன்னேறி நிற்பது தெரிந்த விஷயம். ஆதலால் ஐரோப்பாவில் வழங்கும் லௌகீக சாஸ்திரங்களைத் தமிழில் எழுத வேண்டுமென்று பல பண்டிதர்கள் மிகவும் ஆவலோடிருக்கிறார்கள். ஏற்கனவே சில பகுதிகளில் ஆரம்பம் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறது. இம்முயற்சி மேலும் வளரும்; வளர்ந்து தீர வேண்டும் (18:154)

என்று கூறுவதிலிருந்து அறிகிறோம்.

மொழிபெயர்ப்பின் பல நிலைகளும் மொழி பெயர்ப்பில் மொழி எவ்வாறு அமையவேண்டுமென்று பாரதி, தன் மொழி பெயர்ப்பு முயற்சி வழியாக விளக்குவார். தாகூரின் கட்டுரைகளைத் தமிழாக்கிய போது, ரவீந்தர் வார்த்தைகளை அப்படியே மொழி பெயர்க்கவில்லை. “ஸாரம்சத்தை எனது பாஷையில் எழுதியிருக்கிறேன்” என்று கருத்துப் பெயர்ப்பைக் குறிப்பிடுவார். மேலும், எழுதுகின்ற செய்தி சாதாரண மக்களுக்கும் சென்று சேர வேண்டுமானால் அவர்கள் புரிந்து கொள்ளும் நடையில் எழுத வேண்டும் என்று கூறுவார். இதை,

இம் மொழி பெயர்ப்பைச் சகல ஜனங்களுக்கும் தெளிவாகும்படி எளிய நடையிலேயே அமைக்க வேண்டும் என்று சிரமப்பட்டிருக்கிறேன். என்னை யறியாமல் அகராதிப் பண்டிதர்களுடைய சில கற் சற் மொழிகள் விழுந்திருக்கின்றன. செய்யுள் அமைதி நாடி அம்மொழிகளுக்கு எளிய பிரதி பதங்களைப் போடாமல் இருந்து விட்டேன். இதன் பொருட்டு படிப்போர்கள் க்ஷமிக்குமாறு பிரார்த்தனை செய்கிறேன் (32)

என்று கூறுவதன் வழியாக அறியலாம்.

பத்திரிக்கை மொழி பெயர்ப்பைக் குறிப்பிடும் பொழுது அம்மொழி பெயர்ப்புத் தமிழ் மொழி அமைப்பிற்கு ஒத்ததாக இருக்க வேண்டும் என்று கருதுவார். ஐரோப்பிய மொழிகளிலே மொழி பெயர்க்கப்படும் போது,

ஸ்வபாஷையின் வழக்கங்களையும், பிரயோகங் களையும் கைவிட்டு அன்னிய பாஷையில் வசன நடையைப் பின்பற்றும் வழக்கம் கிடையாது என்றும், ஆனால் தமிழ் நாட்டிலோ முழுவதும் தமிழ் நடையை விட்டுவிட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திராதிபர்களிடம் காணப்படுகின்றது. (16:153-4)

என்றும் கூறுவார். அறிவியல் செய்திகளையும், உலகச் செய்திகளையும் மொழி பெயர்ப்பதையும், அதில் கவனத்தில் கொள்ளவேண்டிய தமிழ் மொழியமைப்பு, நடை ஆகியவற்றையும் பற்றிப் பாரதி அதிகம் அக்கறை கொள்கிறார்.

பாவேந்தரின் மொழிபெயர்ப்புக் கொள்கை மொழி பரப்பல், மொழிப் பற்றை வளர்த்தல் தொடர்பாக அமைந்துள்ளது. செய்தித்தாள்களைத் தமிழில் எழுதவேண்டும் என்று பின்வருமாறு கூறுவார்.

ஆங்கிலத்துச் செய்தித்தாள்
அருந்தமிழின் சீர்காக்க
எழுதுதல் வேண்டும்
தீங்கற்ற திராவிட நன்
மொழிகளிலே பலதாள்கள்
எழுதுதல் வேண்டும் (545)

என ஏடெழுதுவோரைக் கேட்கின்றார். அதேபோல அரசியல் சீர் வாய்ந்தவரின் கடமையை உணர்த்தும் போது, தமிழ் நடையைக் குறிப்பிடுவார்.

தமிழ் நடையில் நயம்வேண்டின்
தமிழ் நாட்டின் நடைமுறையைத்
தமிழ் நாட் டாரை
அமையவரை தல்வேண்டும்
அவ்வாற்றல் அமைவுற்ற
சுவடி தன்னை
உமை மறந்து மறுக்காதீர்
....
தமிழ் தழுவாச் சுவடிதனைத்

தணல் தழுவா திராதினிமேல்
தமிழ்நா டெங்கும் (519)

பாரதியார் பட்டறிவின் வழியாக எவ்வாறு மொழிபெயர்ப்பு அமையவேண்டும் என்று கூறியதை, பாவேந்தர் உணர்வு நிலையில் எச்சரிப்பாக வெளியிடுகிறார்.

பாரதியார் உலகச் செய்திகள் தமிழில் வரவேண்டும் என்று முக்கியமாகக் கருதுகிறார். ஆனால், பாவேந்தர் தமிழ்க் கவிதைகள் உலக முழுவதும் வரவேண்டும் என்ற ஏக்கத்தை வெளியிடுகிறார். பாவேந்தரின் மொழி பெயர்ப்புப் பயன் என்பது தமிழரின் கவிதை பரவவேண்டும் என்பதாக உள்ளது.

தாயெழிற் றமிழை, என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற் றென்ற (179)

என்று கூறும் பொழுது அங்கே மொழிபெயர்ப்புச் சிந்தனை இருப்பதைக் காணலாம். ஆயினும் இங்கே தமிழ்ப் பரப்புதல், தமிழ்க் கவிதையின் பெருமை பரவுதல் என்பதே முதன்மைப் படுத்தப்படுகின்றது.

4.8. எழுத்துச் சீர்திருத்தம்

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்ற நிலையில் பாரதியும் பாவேந்தரும் எதிரும் புதிருமாகவே இருக்கின்றனர். பிறமொழிப் பெயர்களைத் தமிழில் எழுதும் போது இரண்டு விதமான போக்குகளைக் காணலாம். ஒன்று மூல மொழியில் உச்சரிப்பது போலவே தமிழிலும் எழுதவேண்டும் மற்றொன்று பிறமொழி ஒலிகளைத் தமிழ் உச்சரிப்புக் கேற்றவாறு எழுதவேண்டும்.

பாரதி முதல் வகையான கருத்தைக் கொண்டவர். பிறமொழிச் சொற்களை அவ்வாறே எழுத முயற்சி செய்தும் பார்த்திருக்கிறார். 1915ஆம் ஆண்டு ஞானபானு என்னும் பத்திரிக்கையில் தமிழ் எழுத்துக்குறை என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் இதுபற்றி எழுதியுள்ளார்.

இங்கிலீஷ் அக்ஷரத்தில் ப்ரெஞ், அரபி, பார்ஸி,

> *ஸம்ஸ்க்ருதம் முதலிய பாஷைகளின் பதங்கள் சிலவற்றை எழுதுவதற்கு இங்கிலீஷ் அரிச்சுவடி இடங்கொடாததைக் கருதிச் சில புதிய குறிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லா ஐரோப்பிய பாஷைகளுமே அந்நிய பாஷைகளிலுள்ள விசேஷ உச்சரிப்புகளுக்கு இணங்கும்படி சில தனிக் குறிகள் ஏற்பாடு செய்து வைத்துக் கொண்டிருக் கின்றன. (23:68)*

என்றும், தமிழின் எழுத்துக் குறையை உணர்ந்து, இந்தக் குறையை நீக்கும் பொருட்டு, மிகச் சுலபமாக ஐந்து நிமிடங்களில் யாரும் கற்றுக் கொள்ளக்கூடிய சில குறியீடுகளைத் தாம் தயார் செய்து வைத்திருப்பதாகவும் கூறுகிறார் பாரதி. அவருடைய கருத்துப்படி பிறமொழிச் சொற்களை அம்மொழியில் உச்சரிப்பது போல ஒலிச் சிதைவின்றி உச்சரிக்கவும் எழுதவும் வேண்டும். அவ்வாறு எழுதுவதற்குத் தற்போது வழக்கில் உள்ள எழுத்துக்கள் போதா இக்குறையை நீக்குவற்குச் சில குறியீடுகளைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று அறிகிறோம்.

மேலும் பாரதி,

> *ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற எழுத்துக்களைத் தமிழ் அரிச்சுவடியில் நமது பூர்வீகர் சேர்த்திருக்கிறார்கள். இவற்றைச் சேர்க்காவிட்டால் தமிழ் நேரே பேச முடியாமலும் எழுத முடியாமலும் போய்விடுமென்று அவர்களுக்கு அச்ச முண்டாயிற்று.*
>
> *தொல்காப்பியர் கட்டின அரிச்சுவடி போதாத வண்ணமாக நமது பாஷை வளர்ச்சி பெற்றவுடனே நமது முன்னோர்களின் மேற்காட்டிய எழுத்துக் களையும் சேர்த்தார்கள்.*
>
> *நாமும் அப்படியே நமக்கு இக்காலத்தில் ஏற்படும் உச்சரிப்புக் கஷ்டங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்குக் கிரந்த எழுத்துக்களைச் சேர்க்கலா மென்று சில பெரியோர்கள் கருதுகிறார்கள். ஆனால் அதைக் காட்டிலும் அடையாளங்களைப் போடுவது சுலபமான வழி (23:69)*

என்று பாரதி குறிப்பிடுவார்.

பாரதி கூறிய எழுத்துச் சீர்திருத்தம் என்பது இன்றைய மொழியியல் கருத்துக்களோடு இணைத்து நோக்கத்தக்கது. எழுத்துக்களைப் பொறுத்தவரை புதிய எழுத்துக்களை உருவாக்குவது, இருக்கும் எழுத்துக்களைச் சீர்திருத்துவது என்ற இரண்டு நிலைகள் உள்ளன. பாரதி எழுத்துச் சீர்திருத்தத்தை "நமது தமிழ் மொழி விசாலமடைய வேண்டும்" என்ற கருத்தில் தெரிவிக்கின்றார்.

பாவேந்தர், எழுத்துச் சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பாகவே தமது கருத்தைத் தெரிவிக்கிறார். எழுத்துச் சீர்திருத்தத்தைப் "பழம் அழுகச் செய்வதுவா உங்கள் வேலை" என்றும் "தோல் விழுங்கிச் சுளைகளை ஏன் எறிகின்றீர்கள்" என்றும் குறிப்பிடுகிறார். ஆனாலும் அவர் சார்ந்த இயக்கம் சார்பாகப் பெரியாரின் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்கிறார் என்று அறிகின்றோம்.

பாரதி மொழி வளர்ச்சிக்காக எழுத்துச் சீர்திருத்தம் தேவை என்று எண்ணியதற்கு நேர்மாறாகக்,

கழுத்தறுப்பு வேலைகளைச் செய்வதெல்லாம்
காளைகளைக் காயடிக்கும் செயலை ஒக்கும் (1867)

என்று தமிழின் உயிர் நிலையை அழிப்பது போன்ற செயல் எனப் பாவேந்தர் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கருதுகிறார்.

பாரதி, பிறமொழிச் சொற்களைத் தமிழில் எழுதுவது தொடர்பாக எழுத்துக் குறையைச் சிந்தித்தார். ஆனால் பாவேந்தரோ, தமிழ் மொழியைப் பிறமொழி வடிவத்தில எழுதுவதையே கண்டிக்கிறார்.

செந்தமிழ்ச் சொற்களை இந்தியில் எழுதுதல்
அறிவிலாச் செயல்? அறமிலாச் செயல் (1535)

ஏனெனில் எழுத்தைக் கொல்வதன் வழியாக மொழியையும், இலக்கியத்தையும், இனத்தையும் கொல்வதாகக் கருதுகிறார்.

பாவேந்தர் பார்வையில் எழுத்து என்பது மொழியின் உயிராக உள்ளது.

4.9. கலைச் சொல்லாக்கம்

கலைச் சொல்லாக்கத்தின் அவசியத்தைப் பற்றிப் பாரதி நன்கு உணர்ந்திருக்கிறார். பாரதி தமிழ் மொழியில் இலக்கிய வளர்ச்சியோடு, அறிவியலும் வளர வேண்டும் என்று எண்ணுகிறார். அந்த எண்ணத்தின் வெளிப்பாடுதான் "சாஸ்திர பரிபாஷை" என்ற கட்டுரையாகும்.

> *ஒரு கூட்டத்தார் அல்லது ஒரு சாஸ்திரக்காரர் விசேஷார்த்தம் தோன்றும்படி உடன்பட்டு வழங்கும் பொது வழக்கமல்லாத சொல்*

எனக் கலைச் சொல்லைக் குறிப்பிடுகிறார். முன்னர்க் குறிப்பிட்டது போலப் பாரதி, கலைச் சொல்லாக்கத்தில் தமிழுக்கே முதலிடம் கொடுப்பதைக் காண்கின்றோம்.

கலைச் சொற்கள் நிலையிலும் பாரதி தேசம் முழுமையும் மனத்தில் கொள்கிறான். இத்தகைய தேச முழுக்கக் கலைச் சொல்லாக்கத்தில் ஒருமைப்பாடு நிலவ வடமொழியைப் பொதுமொழியாகக் கொள்ளலாம் என்று பாரதி கருதுகிறார். பரிபாஷை சேகரிக்க ஒரு ரூபாய் என்ற தலைப்பில்,

> *ஸ்ரீ காசியிலே, நாகரிப்ரசாரிணி சபையார், ஐரோப்பிய சங்கேதங்களை யெல்லாம் எளிய சம்ஸ்கிருத பதங்களில் போட்டு, மிகப் பெரியதோர் அகராதி உண்டாக்கி வருகிறார்கள். அந்தச் சொற்களை வேண்டிய வரை, இயன்ற வரை தேச பாஷைகள் எல்லாவற்றிலும் ஏக காலத்தில் கைக் கொண்டு வழங்கலாம். ஐரோப்பாவில் எல்லா பாஷைகளும் இவ்விதமாகவே லத்தீன், யவன பரிபாஷைகளைக் கைக்கொண்டிருக்கின்றன. இவ்வாறு செய்வதால் நமது தேச பாஷைகளில் சங்கேத ஒற்றுமையேற்படும். அதனால் சாஸ்த்ரப் பயிர் தேச முழுவதிலும் வளர்ந்தோங்கி வருதல் எளிதாகும் (16:155)*

என்று தெரிவிப்பார்.

கலைச் சொல்லாக்கத்தை இயன்ற வரை தேச மொழிகள் எல்லாவற்றிலும் பயன்படுத்தலாம் என்று பாரதி குறிப்பிடுவதை

இங்குக் குறிப்பிடவேண்டும்.

இக்கொள்கை கலைச் சொல்லாக்கத்தில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை கொடுத்த கொள்கைக்கு முரணாகப் படலாம். ஆனால், இப்பொதுமை என்பதைக் கலைச் சொல்லாக்க உத்திகளின் பொதுமையாக எடுத்துக் கொள்ளலாம். கலைச் சொல்லாக்க மாதிரிகளை எடுத்துக் கொண்டு, தமிழ் மொழிக் கூறுகளை இத்தகைய மாதிரிகளில் இட்டு நிரப்பலாம் என்று எடுத்துக் கொள்ளலாம்.

பாவேந்தரின் சொல்லாக்கம் என்பது தமிழாக்கம், வேர்ச்சொல் ஆய்வாக உள்ளது. பாவேந்தருக்குக் கலைச் சொல் வழியாக மொழி வளர்ச்சி என்பதைவிட மொழிப்பாதுகாப்பு, மொழித் தூய்மையாக்கம், மொழியின் தொன்மை இவற்றை நிலைநாட்டுவதே தலையாய குறிக்கோளாக உள்ளது. சுயமரியாதைச் சுடரை மறுபதிப்புச் செய்யும் பொழுது அதில் உள்ள வடமொழிச் சொற்களை மாற்றித் தமிழ்ச் சொற்களால் நிரப்பியதை மணிகண்டன் (2001) குறிப்பிடுவார். பாவேந்தரின் தமிழ்ச் சொல்லாக்கங்கள் பின்வருவன.

வழிநடைச் சிரமம் - வழிநடைத் தொல்லை

சிந்தனா லோகத்தை - நினைவென்ற உலகத்தை

அநுஷ்டிப்பதால் - மேற் கொள்வதால்

சந்தோஷமும் - மனமகிழ்வும்

கல்யாண - கடிமண

பிரபுக்கள் - பணக்காரர்

நிசமான வார்த்தை - நேரான சொற்கள்

பாவேந்தரின் தனித் தமிழ் ஈடுபாடு, வழக்கத்தில் உள்ள சொற்களுக்கு இணையான சொற்களை உருவாக்கச் செய்துள்ளது.

தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை

என்று தமிழ்ச் சொல்லின் சுவையைப் பெரிதும் போற்றி உள்ளார்.

பாவாணரின் சொல்லாராய்ச்சியைப் பாராட்டி

வடமொழியும் ஆங்கிலமும் மற்றும் வடக்கிற்
படுமொழிகள் என்ற பலவும் - தடவியே
அந்தமிழோ ஆதியெனுந் தேவநே யர்தாம்
எந்தமிழர் எல்லோர்க்கும் வேந்து (1887)

என்று கூறுவார். பாவேந்தரின் கொள்கை, வேர்ச்சொற்களை ஆராய்ந்து எல்லா மொழிகளுக்கும் தமிழ்தான் தாய் என்று நிறுவுவதாகும். இது தமிழின்பால் உள்ள மிகை உணர்வின் வெளிப்பாடாகும். பாவேந்தர் பாரதிபால் அளவற்ற மதிப்பு கொண்டிருந்தாலும், மொழி வளர்ச்சி நிலையில் தமக்கெனத் தனிக் கருத்தியலைக் கொண்டிருந்தார்.

மொழிச் சிந்தனைகளைப் பற்றிய பாரதியின் கருத்துக்கள் மொழி வளர்ச்சி என்ற கருத்தியலின் அடிப்படையில் அமைந்துள்ளன. தமிழ்மொழி உணர்வுடன், பிற மொழிகளில் உள்ள செயல்பாட்டை உற்று நோக்கி இந்தியத் தேசியம் என்ற நிலையில், தமது கருத்துக்களை வெளியிடுகிறார் பாரதி.

பாவேந்தரின் மொழிச் சிந்தனைகளோ, பிற மொழியின் ஆதிக்கம், திணிப்பு, கலப்பு என்ற நிலைக்கு எதிராகத் தொன்மை, பாதுகாப்பு, மொழி உணர்வை வளர்த்தல் என்ற தமிழ்த் தேசியக் கருத்தியலின் அடிப்படையில் அமைந்ததாகும். மொழி மீட்பு என்ற நிலையில் அறிவு நிலைக் கருத்தியல்கள் செயல்பாட்டிற்கு உதவாது. மொழி மீட்பு என்பது உணர்வு நிலையில், மக்கள் இயக்கமாகச் செயல்படும் பொழுதுதான் வெற்றிபெறும்.

இயல் ஐந்து

பாரதி, பாவேந்தர் : படைப்பாளியின் பகல்கனவு

பிராய்டிய அணுகுமுறை

5.1. முன்னுரை

ஒரு படைப்பாளி தன் படைப்பை எவ்வாறு உருவாக்குகிறான் என்பது விந்தையான ஒன்று. படைப்பிற்கான கருவை எங்கே தேர்வு செய்கிறான்? அதைப் பலரையும் கவரும் வண்ணம் எவ்வாறு மொழிப்படுத்துகிறான்? மொழிப்படுத்தத்தின் போது அவனுடைய இலக்கியப் புலமையை எவ்வாறு பயன்படுத்துகிறான்? என்பன ஆராய்ச்சிக்குரிய தளங்களாகும். பாரதியும், பாவேந்தரும் தமிழ் இலக்கிய உலகில் மிக உன்னதமான இடத்தில் இருப்பதற்குக் காரணம் அவர்களுடைய படைப்புத் திறன்தான். இவர்களின் படைப்புத்திறனை இந்த ஓர் இயலில் அளவிடமுடியாது. ஒவ்வொரு படைப்பாளியையும், சம காலச் சமூக நிகழ்வு ஏதோ ஒன்று பாதித்து இருக்கும். அதை அவன் படைப்பாக்கி இருப்பான். இப்படைப்பை மறைமுகக் குறியீடுகள் வழியாகவோ, நேரடியாகவோ வெளிப்படுத்துவான். தன்னைப் பாதித்த அக்கருவைப் பற்றிய ஏக்கத்தை அவன் வெளியிடலாம். அக்கருவைப் பற்றிப் பகல்கனவு காணலாம். பாரதி, பாவேந்தர் ஆகியோரின் பகல் கனவுகளை மட்டும் இங்கே ஆராய்ந்து, அவர்களின் படைப்புத் திறன் வெளிப்படுத்தப்படுகிறது. இதற்குச் சிக்மண்ட் பிராய்டு அவர்களின் படைப்பாளியும் பகல் கனவும் என்ற கட்டுரை அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது.

பாவேந்தரின் பகல் கனவு படைப்புகளைப் பிராய்ட் அவர்களின் கோட்பாட்டடிப்படையில் சற்று விவரிக்கலாம்.

5.2. படைப்பாளியும் பகல்கனவும்

பிராய்ட்(1908) அவர்கள் "Creative Writers and day dreaming"என்ற கட்டுரையில் இலக்கியப் படைப்பாளியின் உளவியலைப் பகுத்தாராய்வார். ஒரு படைப்பாளி என்பவன், விளையாட்டில் ஈடுபடும் குழந்தை தனக்கான உலகத்தைப் படைத்துக் கொண்டு அதில் மகிழ்ச்சி காண்பது போல, ஒரு கற்பனை உலகைப் படைத்துக் கொள்கிறான். இவ்விருவரும் தங்கள் கற்பனை உலகத்தை மிகுந்த ஈடுபாட்டோடும், உணர்வுப் பூர்வமாகவும் படைத்து மகிழ்கின்றனர். ஆனால், எதார்த்த உலகம் என்பது இச்சூழல்களுக்கு முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும்.

குழந்தையில் கண்ட விளையாட்டின் இன்பத்தை, வளர்ந்த பின் வேறு ஒன்றிற்கு மாற்றுகிறான். குழந்தையாக இருந்தபோது விளையாட்டில் இன்பன் கண்டவன் வளர்ந்தபின் கற்பனையில் இன்பம் காணுகிறான். இந்தக் கற்பனையே பகல் கனவாகிறது என்று பிராய்ட் கூறுவார்.

குழந்தையின் விளையாட்டைப் பிறர் கவனிப்பதுபோல் மனிதனின் பகல் கனவைக் கவனிக்க இயலாது. வளர்ந்த மனிதன் தனது கற்பனைகளைப் பிறரிடமிருந்து மறைக்கிறான். இந்த இரு செயல்பாட்டிற்கும், அதாவது விளையாட்டிற்கும், கற்பனைக்கும், அடிப்படையாக ஓர் உந்துதல் இருக்கவேண்டும். அந்த உந்துதல் என்பது அவர்களுடைய ஆசைகள் அல்லது விருப்பங்களாக இருக்கலாம் என்பார் பிராய்ட்.

குழந்தையின் விளையாட்டு அதன் விருப்பங்களுக்கு ஏற்ப அமைவது போலப், படைப்பாளனின் கற்பனைகளும் ஒரு நிறைவேறாத ஆசையின் அடிப்படையில் அல்லது விருப்பத்தின் அடிப்படையில் பிறந்ததாகிறது. இக்கற்பனை வழியாகத் தனது விருப்பங்களை நிறைவு செய்வதாகவும், நிறைவடையாத நடைமுறை வாழ்க்கையை நிறைவுடையதாக்குவதாகவும் அமைகிறது.

படைப்பாளனின் கற்பனை ஒரு தீவிரமான உணர்விலிருந்து உருவாகிறது என்றும், இக்கற்பனை நிகழ்காலம், இறந்தகாலம்,

எதிர்காலம் ஆகிய முக்காலத்தோடும் தொடர்புடையது என்றும் விளக்குவார் பிராய்ட். நிகழ்காலச் சூழலில் ஏதோ ஒன்று படைப்பாளனின் மனதில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தி, ஒரு விருப்பத்திற்குத் தூண்டுதலாக அமைகிறது. அத்தூண்டல் அவனுடைய குழந்தைப் பருவத்தில் நிறைவு படுத்தப்பட்ட அனுபவங்களை நினைவுக்குக் கொண்டு வருகிறது. அதன்பின், வருங்காலத்திற்கான ஒரு கற்பனையாக, இந்த ஆசை வடிவமைக்கப்படுகிறது. இவ்வருங்காலத்தைக் குறித்த கற்பனையே பகல் கனவாகிறது என்று விளக்குவார் பிராய்ட். இவ்வகையில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியன படைப்பாளனின் விருப்பத்தால் ஒருங்கிணைக்கப் படுகின்றன.

பகல்கனவை எல்லோரும் கண்டாலும் அதைப் பெரும்பாலும் வெளியே சொல்வதில்லை. பிறருக்குத் தெரியாமல் மறைக்கிறோம். ஆனால், படைப்பாளன் எந்தவித குற்ற உணர்வுமின்றித் தன் கனவை நம்மோடு பகிர்ந்து கொள்கிறான்.

படைப்பாளனையும் பகல் கனவு காணுதலையும் தொடர்பு படுத்தும் பொழுது இரண்டு வகையான படைப்பாளனை வேறுபடுத்திக் காட்டுவார். இதிகாசங்கள், புராணங்கள் போன்றவற்றைப் படைத்துப் பலராலும் மதிக்கப்படும் படைப்பாளரிடமிருந்து, ஓர் அங்கீகாரத்திற்காக ஏங்கும் படைப்பாளனை வேறுபடுத்துவார். இத்தகைய படைப்பாளனின் படைப்பில் சில பொதுக் கூறுகளைக் காட்டுவார். அவர்களுடைய கதையில் வரும் கதாநாயகன் பல்வேறு சிக்கல்களுக்கு ஆளானாலும் "எனக்கு எதுவும் ஆகாது" என்ற படைப்பாளனின் தன் முனைப்பை வெளிப்படுத்துவதாகப் படைக்கப்படுவது; பல பெண்கள் கதாநாயகனைக் காதலிப்பதாக அமைப்பது; நல்லவர்கள், கெட்டவர்கள் என்ற பாத்திரங்களைப் படைத்து இவர்களின் செயல்களால் தன்முனைப்பிற்கு/சுயத்திற்கு (*ego*) ஓர் உயர்வைத் தேடிக்கொள்வது என்று பலவாறாக அமைவதை விளக்குவார்.

இத்தகைய படைப்புக்களில் மூல படைப்பிலிருந்து முழுவதுமாக மாற்றப்பட்ட, அதைத் தழுவி எழுதப்பட்ட படைப்புக்களையும் ஒதுக்க முடியாது என்று பிராய்ட் கூறுவார். படைப்பாளி பயன்படுத்திய கதைக்கரு, கதையமைப்புப் பழங்கதைகளிலிருந்தோ, தொன்மங்கள், புராணங்களில்

இருந்தோ, நாட்டுப்புறக் கதைகளிலிருந்தோ எடுக்கப்பட்டதாக இருக்கலாம்.

பிறரைப்போல அல்லாமல் படைப்பாளி எந்தவித தயக்கமும் இன்றித் தன் கனவை நம்மோடு பகிர்ந்து கொள்வான். பல கிளைநதிகள் இணைந்து ஒரு பெரு நதியாக, வெள்ளப் பிரவாகமாக உருவெடுப்பது போலப், பல சூழல்களில் பெறப்பட்ட கருத்தைக் கற்பனையோடு இணைத்துப், படைப்பை உருவாக்குகிறான். அவ்வாறு உருவாக்கும் பொழுது இரண்டு வழிகளைப் பின்பற்றுவதாகப் பிராய்ட் கூறுவார். அவை,

1. தன் பகல் கனவில் "தான்" என்னும் உணர்வை மறைத்து உருமாற்றித் தருதல்.
2. கற்பனையை வாசகர்கள் ஏற்றுக் கொள்வதற்குக் கையூட்டாக இலக்கிய இன்பத்தை இலக்கியத்தில் இழையோட விடுதல்.

ஆகியனவாகும்.

இதுகாறும் விளக்கியவற்றிலிருந்து பின்வரும் கருத்துக்களைப் பெறலாம்.

1. பகல்கனவு என்பது குழந்தைப் பருவத்தில் விளையாட்டில் கண்ட இன்பத்தைப் பிரதிநிதிப்படுத்துவதாக அமைகிறது. ஏனையோர் பகல்கனவை தம்முடைய இன்பத்திற்காகக் காணும் பொழுது, படைப்பாளி அதைத் தயக்கமின்றி வெளியிட்டு இலக்கியத்தின் வழியாகப் பிறருக்கு மகிழ்ச்சியூட்டுகிறான்.

2. பகல் கனவு காணுவதற்கு அடிப்படையாக அமைவது நிகழ்காலத்தின் ஏதோ ஒரு தூண்டல். அத்தூண்டல் படைப்பாளியின் மனத்தில் ஓர் ஆசையை உருவாக்குகிறது. அந்த ஆசை கடந்தகால நினைவுகளுக்குச் சென்று, அதன் அடிப்படையில் எதிர்காலத்தைக் கட்டமைப்பதாக இருக்கும்.

3. படைப்பாளியின் கற்பனை பல்வேறு மூலங்களின் இருந்து புறப்பட்ட பெரு வெள்ளம் போலப் பலவேறு இலக்கிய மூலங்களிலிருந்து பெறப்படலாம்.

4. 'தான்' என்ற தன்முனைப்பு மறைக்கப்பட்டு, இலக்கிய இன்பத்தை வழங்வதாக இருக்கவேண்டும்.

இத்தகைய பின்னணியில்தான் பாரதி, பாவேந்தரின் பகல்

கனவு ஆராயப்படஉள்ளது. பாரதியும், பாவேந்தரும் ஓர் அங்கீகாரத்திற்கு ஏங்கும் கவிஞர்கள் இல்லையாயினும், அவர்களின் பகல் கனவு ஆய்வுக்கு ஏற்றதுதான்.

5.3. குயில் பாட்டு

மகாகவி பாரதியின் படைப்புக்களில் மிக உயர்ந்த படைப்பாகக் கருதப்படுவது குயில்பாட்டாகும். முப்பெரும் படைப்புக்களான பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில்பாட்டு ஆகிய மூன்றும் மூன்று நோக்கில் படைக்கப்பட்டவை என்று கூறுவர். பாஞ்சாலி சபதம் தேசிய நோக்கிலும், கண்ணன்பாட்டு பக்தி நோக்கிலும், குயில்பாட்டு தத்துவ நோக்கிலும் படைக்கப்பட்டன என்பது பொதுக்கருத்து.

ஆன்ற தமிழ்ப் புலவீர்! கற்பனையே யானாலும்
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானும் சற்றே இடமிருந்தால் கூறீரோ?

என்ற அடிகள் இப்பாட்டைத் தத்துவ நோக்கில் காண்பதற்கு அடிப்படையாகின்றன. பாரதியின் கற்பனை வளத்திற்கும், கவித்திறனுக்கும் குயில்பாட்டுத் தனிப்பெருஞ் சான்றாக இருப்பதோடு, தத்துவ விளக்கத்திற்குப் பொருந்துவதாகக் கருதுவர். இப்பாடலைத் தத்துவ நோக்கில் ஆராய்ந்தவர்களில் கு.ராஜவேலு,(1988) சுப்புரெட்டியார், (1982) ஆகியோர், குயில் உயிருக்கும், கவிஞன் இறைவனுக்கும் குறியீடாக அமைகிறது என்று கருதுவர். ஆனால், தெ.பொ.மீனாட்சி சுந்தரம், (1960) அவர்கள் கவிஞனை உயிராகவும், குயிலை இறையாகவும் கருதுவார்.

இப்பாடலின் கடைசி அடிகளை ஆராய்ந்த வேறு சில அறிஞர்கள்,

வேதாந்தத்திற்கு இடமிருந்தால் சொல்லுங்கள் என்ற குறிப்பில்தான் பாரதி வேண்டுகிறார். இந்தப் பாடலில் பாரதியார் திட்டமிட்டுத் தத்துவக் கருத்தைப் பொதித்து வைத்துப் பாடியிருக்கிறார் என்று கருதுவதற்கு இடமில்லை என்றும் கருதுவர். இவர்கள் குயிலை அழகுக்கு அடையாளமாகவும், அன்பு, கவித்திற[illegible], இசைத்திறன் ஆகியவற்றிற்குக் குறியீடாகவு[illegible] [illegible]ண்டுள்ளனர்

குயில்பாட்டைச் சமுதாய நோக்கில் ஆராய்ந்த பொற்கோ (1998)

மகாகவி பெண்மையைப் போற்றுபவர், சக்தியை வழிபடுபவர், புதுமைப் பெண்ணைக் காணத் துடிப்பவர். அவர்கண்ட குயில் தமிழ்ச் சமுதாயத்தின் சராசரிப் பெண்ணுக்குக் குறியீடாகிறது

என்பார். மேலும் அவர் இந்தியப் பண்பாட்டு ஒருமையில் பாரதியார் மிகுந்த நம்பிக்கை உள்ளவர் என்ற உணர்வோடு பார்த்தால் குயிலின் சோகம், இந்தியப் பெண்ணின் சராசரிக் கோபம் என்பது விளங்கும் என்பார். இவ்வாறு பல்வேறு விளக்கங்களுக்கு இப்பாடலை உட்படுத்திப் பார்த்துள்ளனர். இத்தகைய ஒப்பீடுகளும் விளக்கங்களும் பாரதி தமிழ் இலக்கிய மரபிற்கும், இந்தியத் தத்துவக் கோட்பாடுகளுக்கும் ஆட்பட்டிருந்த நிலையை விளக்கும்.

இவ்விளக்கங்களோடு, குயில்பாட்டில் ஆங்கில இலக்கிய மணம் வீசக் காணலாம் என்று மருதநாயகம் (2004) குறிப்பிடுவார். ஆங்கிலத்தில் வேர்ட்ஸ் வொர்த் குக்கூ பற்றியும், நைட்டிங்கேல் பற்றியும் இன்னபிற பறவைகளைப் பற்றியும் பாடியுள்ள பாடல்கள் பல. அவற்றை எல்லாம் பாரதி படித்திருக்க வாய்ப்புண்டு என்று ஆங்கிலத்தின் தாக்கத்தை விளகுவார்.

குயில்பாட்டு இத்தனை விளக்கங்களுக்கும் இடம் தருவதாக அமைந்துள்ள நிலையை ஒவ்வொருவரும் தத்தம் நோக்கில் விவரித்துள்ளனர். இவ்விவரிப்புக்களுக்கு எவ்வாறு இப்பாடல் இடம் தருகிறது என்பதை உளவியல் அடிப்படையில எடுத்துக்காட்டலாம். இப்பாடலைச் சிக்மண்ட பிராய்ட் அவர்கள எழுதிய “படைப்பாளனும் பகல் கனவும்”, என்ற கட்டுரை வழியாக அணுகும் பொழுது, பல்வேறு புதிய விளக்கங்களுக்கான அடிப்படைகளைப் புரிந்து கொள்ள முடியும். இப்பாடலைப் பிராய்ட் அவர்களின் கட்டுரையோடு பொருத்திப் பார்ப்பதற்குப் பாரதியின் பாடல் அடிகளே (சுந்தரமூர்த்தி, 2000 (பதிப்பு)) உறுதுணையாக உள்ளன.

இன்னிசைத் தீம் பாடல் இணைந்திருக்கும் விந்தைதனை
முன்னிக் கவிதை வெறி மூண்டே நனவழியட்

பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே கண்டேன் யான்

என்று குயில் பாட்டின் தொடக்கத்திலும்.

சோலை, குயில், காதல் சொன்ன கதை யாவும்
மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி யென்றே கண்டு கொண்டேன்

என்று இறுதி அடிகளிலும், பாரதி இது ஒரு பகல் கனவு, கற்பனை என்று தெளிவாகக் கூறிவிடுகிறார். எனவே, இப்பகல் கனவிற்குச் சிக்மண்ட் பிராய்டின் கட்டுரை எவ்வகையில் பொருத்தமாகிறது என்பதை விளக்கலாம். அவ்வாறு விளக்கும்பொழுது பாரதி தம் படைப்பிற்கான மூலத்தை எங்கே பெற்றார்; அதனை வைத்துப் படிப்போரின் எண்ணத்தில் ஏராளமான உணர்வுகளை எவ்வாறு தூண்டினார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

5.3.1. கருவாக வரும் இசை

பாரதியின் பகல்கனவுதான் குயில்பாட்டு என்று பார்க்கும் பொழுது, குயில்பாட்டின் கரு என்பது என்ன? என்பதை வைத்துத்தான், பாரதியின் உளவியலை அணுகமுடியும். குயில்பாட்டை வேதாந்தமாக இல்லாமல் அதைப் படித்தவுடன் பொதுவாக வெளிப்படும் செய்தி அல்லது குயில்பாட்டில் பெரிதும் பேசப்படும் செய்தியைக் கருவாகக் கொள்ளலாம். அவ்வாறு பேசப்படும் செய்தி இங்கே இசையாக உள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். பாரதியின் பகல் கனவுக்கு அடிப்படையாவது,

இன்னிசைத் தீம்பாட் டிசைத்திருக்கும் விந்தை
....
இன்னிசைப் பாட்டினிலே யானும் பரவசமாய்
....
நாதக் கனலிலே நம் முயிரைப் போக்கோமோ?

என்ற அடிகள் தாம்

பாரதியார் கட்டுரை மேற்கோள் வானதி பதிப்பகம் 1981இல் வெளியிட்ட நூலில் இருந்து எடுக்கப்பட்டவை.

அதேபோலக் குயிலின்பாட்டாக வரும் வரிகள் அனைத்தும் இசையையும் முன்னிலைப் படுத்தியுள்ளமை காணத்தக்கது.

நாதம், நாதம், நாதம்
நாதத் தேயோர் நலிவுண்டாயின்
சேதம் சேதம் சேதம்
தாளம், தாளம், தாளம்
தாளத்திற்கோர தடை யுண்டாயின்
கூளம், கூளம், கூளம்
பண்ணே, பண்ணே, பண்ணே
பண்ணிற் கேயோர் பழுதுண்டாயின்
மண்ணே, மண்ணே, மண்ணே
குழலே, குழலே, குழலே
குழலிற் கீறல் கூடுங்காலை
விழலே விழலே விழலே

கவிஞரின் கூற்றிலும் இசையின் சிறப்பு வெளிப்படுத்தப் படுகிறது. குயில், கிழமாட்டுடன் காதல் கொண்ட பிறகு கவிஞர் கூற்றாக வரும் பின்வரும் அடிகள் முக்கியமானவை.

ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினும்
காணா முதம் படைத்த காட்சி விந்தையடா?
காட்டுநெடு வானம் கடலெல்லாம் விந்தையெனில்
பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா!
பூதங்கள் ஒத்துப் புதுமைதரல் விந்தையெனில்
நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ?
ஆசைதரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே
ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ?

என்ற இசையின் மேன்மையைப் பாரதி கூறுகிறார்.

பாரதி இசையைக் கருவாக் கொண்டு குயில்பாட்டை எவ்வாறு இலக்கியப்படுத்தியிருக்கிறார் என்பதைப் பிராய்டின் கட்டுரைவழி விளக்கலாம்.

5.3.2. தற்காலத் தூண்டல்

பிராய்டின் கருத்துப்படி பகல்கனவிற்கு அடிப்படையாக

அமைவது நிகழ்காலத்தில் உள்ள ஏதோ ஒரு தூண்டல் என்பதாகும். இந்தத் தூண்டல் ஒன்றைப்பற்றிய குறையோ, நிறையோ, அதனால் உருவாகின்ற தாக்கம், அதனைச் சரிசெய்யும் விருப்பம் என்ற நிலைகளில் அமையலாம். பாரதியைப் பொறுத்தவரை அவருடைய காலச்சூழலில் ஏராளமான நிகழ்வுகள் அவரின் மனநிலையைத் தூண்டியிருக்க வாய்ப்பிருக்கின்றன. தேச விடுதலை, மொழி, பக்தி என்று பலவற்றோடு இசையும் ஒன்று. இந்த இசை எவ்வாறு அவரின் மனநிலையைப் பாதித்துள்ளது என்பதையும் அதை அவர் இலக்கியமாகப் படைக்கும் பொழுது எத்தகைய குறியீடுகளின் வழி வெளிப்படுத்துகிறார் என்பதையும் பிராய்டின் கருத்துப்படி விளக்கலாம்.

இசையைப் பொறுத்தவரை தமிழ்ச் சூழல் சரியாக இல்லை என்பது பாரதியின் எண்ணம். அந்த இசையைச் சரி செய்ய வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாகும். இதை நாம் அவர் எழுதிய கட்டுரைகளின் வழியாகப் புரிந்து கொள்ளலாம். குறிப்பாக "ஸங்கீத விஷயம்" என்ற தலைப்பில் அமைந்த கட்டுரை பாரதியின் மனத்தில் இசை ஏற்படுத்திய தாக்கத்தைக் காட்டும். மனிதனுக்கும் பறவைக்கும் உள்ள உறவைக் கூறும்பொழுது,

> *இங்குள்ள ஜந்துக்களிலே மனிதருக்கும் பறவைகளுக்கும் தான் பாடத் தெரியும். மற்ற மிருகங்களுக்குப் பாடவராது. பறவைகள் வானத்தில் பறக்கும் வழக்கமிருப்பதால் அவற்றின் மனநிலை சங்கீதத்திற்கு இசைகிறது போலும். மனிதன் உடம்பினாலே பறக்காவிட்டாலும் உள்ளத்தைத் திசைவெளியிலே பறக்கும்படி செய்கிறார். அப்போது இயற்கையிலேயே பாட்டு தோன்றுகிறது*

என்று கூறுவார்.

தமிழ்நாட்டுச் சங்கீதத்தின் இன்றையநிலை, வித்வான்களின் நிலை பாரதியின் மனதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

> *ரச ஞானமில்லாதபடி பல்லவிகளும், கீர்த்தனங்களும் பாடுவோர் சங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள். இக்காலத்துச் சங்கீத வித்வான்களிலே பலர்*

சங்கீதத்திற்கு நவரசங்களே உயிர் என்பதை அறியார்

என்றும்,

தமிழ்நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால் திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களை வருஷக் கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தோற்காது உள்ள தேசங்களில் இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள

என்றும் வித்வான்களின் நிலையை எண்ணி வருந்துகிறார்.

மேலும் அவா,

இங்கே ஓரிரண்டு பேரைத்தவிர மற்றபடி பொதுவாக வித்வான்களுக்கெல்லாம் தொண்டை சீர்கெட்டிருப் பதைப் பார்க்கும்போது எனக்கு மிகவும் வியப்புண் டாயிற்று

என்றும் கூறுவதிலிருந்து அவரின் எண்ணப்பாதிப்பை உணரலாம்.

பாரதி தமிழ்நாட்டு வித்வான்கள் மற்றும் பொது ஜனங்கள் பாடும் சங்கீதத்தைச் சீர் செய்ய விரும்புகிறான்.

தமிழ்ப் பெண்களின் பாட்டைக் கையெடுத்து வணங்குகிறோம். ஆனால் அதில் ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்கள் பல இருக்கின்றன

என்றும்

நம்மவர் தொண்டையை நேரே பழக்குவதில்லை. காட்டு வெளிகளிலே போய்க் கர்ஜனை செய்ய வேண்டும். நதி தீரங்கள், ஏரிக்கரை, கடற்கரைகளிலே போய்த் தொண்டையைப் பழக்க வேண்டும்

என்றும் வழிமுறைகள் கூறுவார்.

பிராய்ட் அவர்களின் கருத்துப்படி படைப்பாளனுக்கு நிகழ்காலத்தில் ஏற்பட்ட தாக்கமாகப் பாரதிக்கு இசையின் சீர்கேடு உள்ளது. இத்தாக்கம் பழைய நினைவுகளைத் தூண்டுவதாக

அமைந்து, இசைச் சீரமைவுக்கு வழி வகுக்கவேண்டும். அந்த நிலையில் பாரதியின் மனதில் அன்றைய இசைநிலை, பழைய நினைவுகள் கிளம்புவதையும் அவரே குறிப்பிடுவார்.

> *சுமார் 12 வருஷங்களுக்கு முன்பு நான் இரண்டு மூன்று வருஷம் ஸ்ரீகாசியில் வாசஞ் செய்தேன். அங்கே பாட்டுக் கச்சேரி செய்யவரும் ஆண்களுக்கெல்லாம் நேர்த்தியான வெண்கலக்குரல் இருந்தது. பெண்களுக் கெல்லாம் தங்கக் குரல் (218)*

என்று பழைய நினைவுகளைக் குறிப்பிடுவார்.

அதே நேரத்தில் பழைய நினைவுகளில் இசை பற்றிய நிறைவும் இருக்கவேண்டும் என்ற பிராய்டின் கருத்தையும் அவர் குறிப்பிடுவதிலிருந்து காணலாம்.

> *நம்முடைய சங்கீத சாஸ்திரம் ஐரோப்பிய சாஸ்திரத்தைவிட மேலானது என்று ரவீந்தரர் சொல்லும் வார்த்தை உண்மையென்பது இரண்டு முறைகளிலும் பழக்கமுடைய பண்டிதரெல் லோருக்கும் தெரிந்த விஷயமாகும் (மாலை,196)*

என்று கூறுவார்.

பழையகாலத்துச் சங்கீதங்களில் உள்ள மனநிறைவையும் அந்தவகையில் இசையை மாற்றவும் கருத்துரைகள் கூறுகிறார்.

> *பொதுப் படையாகப் பார்க்குமிடத்து, நமது மாதர் பாட்டுக்களின் இனம் பின்வருமாறு:*
>
> 1. *கல்யாண பாட்டு, நலங்கு, பத்யம், ஊஞ்சல் ஓடம் முதலியன*
> 2. *கும்மிப்பாட்டு, குதித்துப்பாடுகிற பாடல்கள்*
> 3. *அம்மானை, தூது, மாலை, சோபனம் முதலிய நீண்ட கதைப்பாடல்கள்*
> 4. *பொதுத்தாலாட்டு, விளையாட்டுப் பாடல்கள், ஜவாளிகள், கீர்த்தனை முதலியன.*
>
> *மேலும், பண்ணைகளில் வேலை செய்யும் பெண்கள்*

நெல்குத்துவோர், சுண்ணாம்பு இடிப்போர், குறிகாரி, தொம்பச்சி முதலிய வகுப்பினர் தத்தமக்கென்று தனியான மெட்டுக்கள் வைத்துக் கொண்டிருக் கிறார்கள். மேற் கூறப்பட்ட பாட்டுக்களில் மிக இன்பமான சந்தங்கள் பல இருக்கின்றன" (பெண்ணின் பாட்டு, (பக்.226-227)

என்று கூறுவார்.

பண்டைத் தமிழ்நாட்டின் பாட்டுக்களை எம்பாவை, அம்மானை, தும்பி, குயில், கிளி முதலிய தூதுப்பாடல்கள், தெள்ளேணம், சுண்ணம் இடித்தல், சாழல், உந்தி, பூவல்லி, தோணோக்கம், ஊசல், காலைத் துயில் எழும்பும் பாட்டு எனப் பல்வேறு வகைகள் இருந்தன என்றும் குறிப்பிடுவார்.

மேற்கூறிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டு. பிராய்டின் கருத்துக்களைக் குயிற்பாட்டோடு பொருத்திக் காணலாம்.

5.3.3. கருவும் கவிதையும்

சாதாரண மனிதன் தான் கண்ட பகல் கனவை வெளியிடத் தயங்குவான். ஆனால் படைப்பாளி தன் கனவை அழகிய கவிதையாக்கி வெளியிடுகிறான். பாரதியின் பகல் கனவு தமிழ் இசையை மேம்படுத்துவதாக அமைந்துள்ளது. அதைக் கவிதை இலக்கியமாக வெளியிடும் பொழுது பல்வேறு குறியீடுகளையும் கதைக் கூறுகளையும் உள்ளடக்கி வெளியிடுகிறான். பாரதியின் பகல் கனவு குயில்பாட்டாக வெளிவரும் பொழுது, அதில் பாரதி பயன்படுத்திய குறியீடுகள், பிராய்டின் உளவியல் அடிப்படையில் அமையும் தன்முனைப்பு, கருத்துப் பெருவெள்ளம் ஆகியனவற்றை இனி விள்க்கலாம்.

பாரதி குயிலை இசைக்கான குறியீடாகக் கொள்கிறான். இக்குயில் தன்னிலை தடுமாறித் திரியும் மாயக்குயிலாகவும், பொய்ப்பறவையாகவும் படைக்கிறான் பாரதி. இக்குயில், இன்றைய இசையின் நிலையாகக் கொள்ளலாம். குயிலானது கவிஞனின் கையில் வீழ்ந்து கவிஞனின் காதலைப் பெற்றபின் பெண்ணாக மாறுகிறது. குயில் பெண்ணாக மாறுவது கவிஞனின் விருப்பமான இசைக்குக் குறியீடாகும். தமிழ்ப் பெண்ணையும்

பாட்டையும் கையெடுத்து வணங்கும் பாரதி பெண்ணைத் தெய்வீகமாகக் காணுகிறான்.

விண்டுரைக்க மாட்டாத விந்தையடா! விந்தையடா!
ஆசைக் கடலின் அமுதடா! அற்புதத்தின்
தேசமடா! பெண்மைதான் தெய்வீகமாம் காட்சியடா

என்று பெண்மையைப் புகழ்வதுடன், பெண்ணைப் பண், கூத்து இவற்றின் சாரமெல்லாம் ஏற்றிய இன்னமுது என்று இசையோடு பின்வரும் அடிகளில் விளக்குகிறார்.

.........................ஓர் வார்த்தை
கற்றவர்க்குச் சொல்வேன் ; கவிதைக் கனிபிழிந்து
சாற்றினிலே, பண் கூத்(து) எனுமிவற்றின் சாரமெலாம்
ஏற்றி அதனோட இன்னமுதைத் தான் கலந்து
காதல் வெயிலிலே காய வைத்த கட்டியினால்
மாதவளின் மேனி வகுத்தான் பிரமன் என்பேன்.

இவ் விளக்கங்களால் நிகழ்காலத்தில் கவிஞனின் விருப்பத்தைத தூண்டும் இசையின் குறியீடாகக் குயிலும், எதிர்காலத்தில் கவிஞன் மாற்ற விரும்பும் இசைக் குறியீடாகப் பெண்ணும் அமைந்துள்ளது காணத்தக்கது.

இலக்கியப் படைப்பிற்குப் பெரிதும் துணையாய் இருப்பது காதலாகும். காதலின்பம் என்பது எல்லோருக்கும் பொதுவாக இன்பமளிப்பதாக இருப்பதால், காதலின்பத்தைப் படைப்பின் ஓர் அங்கமாகப் பாரதி படைக்கிறான்.

காதலின்பத்தைப் பாரதி தமிழ்நாட்டு நாகரிகம் (பக்.282) என்ற கட்டுரையில் பின்வருமாறு விளக்குவார்.

உயிருக்கும் மனத்துக்கும் ஆத்மாவுக்கும் ஒரு சேர இன்பமளிப்பதனால் காதலின்பம் இவ்வுலக இன்பங்கள் அனைத்திலும் தலைமைப்பட்டதாயிற்று. ஆதலால், நான்கு புருஷார்த்தங்களுள் அதாவது மனிதப்பிறவி எடுத்ததனால் ஒருவன் எய்தக் கூடிய பெரும்பயன்களைக் கணக்கிடப் புகுந்த நம் முன்னோர் காதலின்பத்தையே இன்பமெனும் பொதுப் பெயரால் சொல்லியிருக்கிறார்கள்

என்பார்.

குயில் நான்காம் நாள் வரக் கூறியதும், நான்காம் நாள் குயில் பெண்ணாக மாறிக் காதலின்பம் தந்ததையும் மேற்கூறிய பாரதியின் கருத்தோடு இணைத்துப் பார்த்து இன்புறத்தக்கது.

பாரதி தன் பகல்கனவை இலக்கியமாக ஆக்கும்பொழுது ஒவ்வொன்றையும் மிகச் சீரான குறியீடுகளில் வைத்துப் படைத்துள்ளார். இங்கே நிலைதிரிந்த குயில், குரங்கையும். மாட்டையும் காதலிக்கிறது. முன் பிறவியில் மாமன் மகனான மாடனும், மொட்டைப் புலியனின் மூத்த மகனான நெட்டைக் குரங்கனும் வருகிறார்கள். சேரமான் மைந்தனைக் குயில் காதலிக்கிறது. அதே நேரத்தில் நெட்டைக் குரங்கனுக்கு நிச்சயத்தும், மாடனுக்கு அவனுடைய வருத்தம் சகிக்காமல் மாலையிடவும், விரும்புகிறது. இக்குறியீடுகளை எல்லாம் விளக்கும் பொழுதுதான் பாரதியின் இலக்கியப் படைப்பின் திறன் புரியவரும். அதே நேரத்தில் இப்படைப்பின் பின்னால் இருக்கும் உளவியலையும் அறிந்து கொள்ள முடியும்.

பாரதியின் உளவியலையும் அவர் இலக்கியத்தில் படைத்த குறியீடுகளையும், அவரின் பிற எழுத்துக்களில் வெளியிட்டுள்ளார். இவை பாரதியின் உளவியலை உறுதி செய்வதற்குரிய சான்றுகளாகும்.

இக்குயில் பாட்டில் வரும் அடிகளான,

முன்னம் ஒருநாள் முடிநீர் பொதியமலை
தன்னருகே நானும் தனியே ஒரு சோலைதனில்
மாங்கிளையில் ஏதோ மனத்திலெண்ணி வீற்றிருந்தேன்
ஆங்குவந்தார் ஓர் முனிவர் ஆரோ பெரியவரென்று
பாதத்தில் வீழ்ந்து பரவினேன் ஐயா எனை
ஆதரித்து வாழ்த்தியருளினார்..........

என்பதும்,

வீறுடைய வெந்தொழிலால் வேடர் குலத்தலைவன்
வீரமுருகன் எனும் வேடன் மகளாகச்
சேரவள நாட்டின் தென்புறத்தே ஓர் மலையில்

வந்து பிறந்து வளர்ந்தாய் நீ. நல்லிளமை
முந்தும் அழகினிலே மூன்று தமிழ்நாட்டில்
யாரும் நினக்கோர் இணையில்லை என்றிடவே

என்பதும் பாரதியின் உள்ளக் கருத்துக்களைக் குறியீடாக வெளிப்படுத்தத்தக்கன.

தமிழ்நாட்டு மாதருக்கு (பக்.264) என்ற கட்டுரையில் பாரதி வெளியிட்ட கருத்தை மேற்கூறிய கவிதைஅடிகளுடன் இணைத்துக் காணலாம்.

தமிழ் பாஷைக்கோ, இலக்கணம் முதல் முதலாக அகஸ்தியராலும், அவருடைய சிஷ்யராகிய திரண தூமாக்நி (தொல்காப்பியர்) என்ற ஆரிய முனிவராலும் சமைத்துக் கொடுக்கப்பட்ட தென்பதும் மெய்யே

ஆதியில் பரமசிவனால் படைப்புற்ற மூல பாஷைகள் வடமொழியென்று சொல்லப்படும் சமஸ்கிருதமும் தமிழுமேயாம் என்று பண்டைத் தமிழர் சொல்லியிருக்கும் வார்த்தை வெறுமே புராணக் கற்பனை அன்று
மிகப் பழைய தமிழ்ப் பாஷையும் மிகவும் புரதான மலையாள பாஷையும் ஒரே வஸ்துதான். பிற்காலத்திலும் சேரநாடு தமிழகத்தில் ஒரு பகுதியாகவே கணக்கிடப்பட்டு வந்தது. சேரர் அனைவரும் தமிழரசரே (தமிழ்நாட்டு நாகரிகம்:274)

குயில் பாட்டில் காணப்படும் வீரமுருகன், மாமுனிவர், சேரமன்னர் இவர்கள் யாவரும் தமிழ் தொடர்பான குறியீடுகளாகக் கொள்வதில் தவறில்லை.

இங்கே இலக்கியப்படுத்தப்பட்ட குயில் என்பது தன்னிலை திரிந்த தமிழ் இசைதான் என்பதைப் பின்வரும் அடிகள் வழியாகவும் உணரலாம்.

கானப் பறவை கலகலெனும் ஓசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
ஆற்று நீரோசை அருவி யொலியினிலும்
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்

ஓலத் திடையே உதிக்கும் இசையினிலும்
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதிலும் ஊறிடுந்தேன் வாரியிலும்
ஏற்றப்பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்கும்
பொற்றொடியர் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணமிடிப் பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்க
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணைமுத லானமனிதர்
வாயினிலும் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்கொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்.

குயில் தன் வரலாற்றைக் கூறுவதாக வரும் இந்த அடிகள் இசைக்கான மூலாதாரங்களைக் காட்டுவனவாக உள்ளன. எனவே, பாரதி குயிலைச் சீர் கெட்டிருக்கும் இசைக்கான குறியீடாகத்தான் கொண்டுள்ளார் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

இந்தக் குயில்பாட்டில் வருகின்ற இன்னும் இரண்டு குறியீடுகள் மிக முக்கியமானவை. அவை குரங்கும் மாடும் ஆகும். மாடும், குரங்கும் முற்பிறவியில் மாமன் மகன் மாடனாகவும், நிச்சயம் செய்யப்பட்ட நெட்டைக் குரங்கனாகவும் உள்ளன. இவை ஒவ்வொரு பிறவியிலும் குயிலைப் பின் தொடர்ந்து வருவதாகப் பாரதி படைத்துள்ளார்.

மாடன் குரங்கன் இருவருமே வன்பேயாகக்
காடுமலை சுற்றி வருகையிலே கண்டுகொண்டார்
..
நின்னைக் குயிலாக்கி நீ செல்லும் திக்கிலெல்லாம்
நின்னுடனே சுற்றுகின்றார் ; நீ இதனை? தேர்கிலையோ?

என்ற அடிகள் குயிலை மாற்றியவர்கள் பேயாக அலையும் மாடும், குரங்கும் என்பதாக வந்துள்ளன. மேற்கூறிய அடிகள், தமிழ் இசையின் இன்றைய நிலைக்குக் காரணமானவர்களைச் சுட்டிக் காட்டுவதுபோல் உள்ளன.

இந்தக் குறியீடுகளை விளங்கிக் கொள்வதற்கு அவருடைய

'ஸங்கீத விஷயம்' கட்டுரை உதவியாக அமையும். பாரதி அக்கட்டுரையில் இசையின் நிலையைக் குறிப்பிடும் பொழுது இரண்டு பேரைப் பின்வருமாறு குறிப்பிடுவார்.

> *தமிழ் நாட்டு வித்வான்களுடைய சங்கீதத்தைப் பற்றி மேலே எழுதினேன். மற்ற சாதாரண ஜனங்கள் படும் பாட்டைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்ச்சி செய்ய விரும்புகிறேன் (பக்.219)*

> *அவர் இக்காலத்துப் பாடகர் அதிக சங்கதிகளாலும், ரச நாசத்தாலும் சொற்களைத் திரித்தல், விழுங்குதல் முதலிய செய்கைகளாலும் இயன்றவரை ஆபாசமாக்கிவிட்ட போதிலும்....... (பக்.216)*

> *பாட்டுக்குத் தாளமே யொழிய தாளத்திற்குப் பாட்டில்லை என்ற விஷயத்தைப் பாடுவோர் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும்*

என்பன போன்ற கருத்துக்கள் வித்வான்கள் பாட்டைக் கெடுக்கும் முறை சார்ந்தன. சாமான்யமாகப் பாடும் பொழுது ஜனங்களும் எவ்வாறு பாட்டைக் கெடுக்கின்றனர் என்பதைப் பின்வருமாறு குறிப்பிடுவாா.

> *முதலாவது நமது குடும்ப ஸ்திரிகளின் பாட்டை யெடுத்துக் கொள்வோம் .... ஆனால் பெரும்பான்மையோர் சங்கீத லஷணமே தெரியாமல் தவறாகப் பாடுகிறார்கள், பெரும்பான்மை யோருக்குத் தொண்டை நன்றாகப் பழகவில்லை. பெரும்பான்மையோருக்குப் படிப்பு மிகவும் குறைவாகவும் சூனியமாகவும் இருப்பதால் இவர்கள் பாடும் பாட்டுகளிலே சொற்பிழையும், பொருட் பிழையும் மொய்த்துக் கிடக்கின்றன. அதிலும் இவர்கள் தீஷிதர் தியாகையர் முதலியவர் களின் கீர்த்தனங்களைப் பாடும்போது தாளம், சுருதி ஒன்றையும் கவனிக்காமல் பதங்களைச் சூறையாடி மிகவும் விகாரப்படுத்தி விடுகிறார்கள் (பக்.220)*

என்று கூறுவார்.

பாரதி தம் கட்டுரையில் தெரிவித்த கருத்தைக் கவிதையாக்கும் பொழுது குறியீடுகளின் வழிப் பாத்திரங்களைப் படைக்கிறார். இங்கே மாடு என்பது மாமன் மகனாகக் காட்டப்பட்டிருப்பதால், மாட்டைச் சாமான்ய மக்கள் பாடும் பாட்டிற்குக் குறியீடாகக் கருதலாம். குரங்கை, வித்வான்களின் குறியீடாகக் கொள்ளலாம். பாரதி பார்வையில் இவர்கள் இருவரும் இசையைக் கெடுக்கிறார்கள் என்பதாகும்.

பாரதியின் கருத்துக்கள் குறியீடுகளாகப் குயில்பாட்டில் அமையும் விதத்தைப் பின்வரும் படத்தின் வழியாக விளக்கலாம்.



5.3.4. பகல் கனவும் தன் முனைப்பும்

பகல்கனவின் மிக முக்கியமான பகுதி தன்முனைப்பாகும். பொதுவாகப் பகல்கனவில் தன்முனைப்பு *(ego)* என்பது முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், கவிதை இலக்கியம் படைக்கும் பொழுது, அங்கே தன்முனைப்பு மறைந்து இருக்கும் என்று பிராய்ட் குறிப்பிடுவார். இங்கே பாரதியின் தன்முனைப்ப கவிஞராகப் படைக்கப்பட்டுள்ளது. கவிஞனைக் குயில் காதலிப்பது, கவிஞனால் குயிலுக்குப் பெண் பிறவி கிடைப்பது போன்றன தன்முனைப்பின் வெளிப்பாடுகளாகும். தன்னைவிட்டால் தமிழிசை உய்வதற்கு வேறுவழியில்லை என்ற எண்ணத்தின் வெளிப்பாடே குயில் கவிஞனைச் சேர்ந்ததும்

பெண்ணாக மாறுவதும் எனலாம். ஆனாலும் இக்குயில்பாட்டில் கவிஞனுடைய தன்முனைப்புப் பல நிலைகளில் மறைக்கப்பட்டு உள்ளதையும் அறியலாம். குயில் முதலில் கவிஞனைக் காதலிப்பது பின்னால் கவிஞனைக் குயிலின் பின்னால் அலையவிடுவது, கவிஞன் கண்முன் மாடு, குரங்கு இவற்றைக் குயில் காதலிப்பது, மாடு , குரங்கு எதிரிகளாவது போன்றவற்றில் கவிஞனின் தன்முனைப்பு முன்னிறுத்தப்படவில்லை. மாறாக இவை படிப்போர் மனத்தில் ஒருவித இரக்கத்தை ஏற்படுத்துகிறது. அதேபோலப் பூர்வ ஜென்மத்தின் இளவரசனாக வந்த கவிஞன் கொலை செய்யப்படுவதாகக் காட்டுவதும், தன்முனைப்பைக் குறைத்துக் கொண்டு படிப்போர்க்குக் கவிஞன் மேல் ஒரு நன் மதிப்பைக் கூட்டுவதற்காக அமைத்ததாகும் என்றும் கருதலாம். பொதுவாக மனிதன் பகல்கனவு காணும் பொழுது தன்முனைப்பை உயர்த்தித்தான் இன்பம் காணுவான். ஆனால் கவிஞன் பகல் கனவு காணும்பொழுது அதுவும் இலக்கிய வெளிப்பாடாக அமையும் பொழுது, தன்முனைப்பைக் குறைத்து வாசகர்களுக்கு இன்பத்தை ஊட்டுவான் என்ற பிராய்டின் கருத்தைக் குயில்பாட்டின் வழியாக உணரலாம்.

5.3.5. கவிதைப் பெருவெள்ளம்

பிராய்டின் கருத்துப்படி பகல்கனவு படைப்பாகும் பொழுது ஏற்கனவே உள்ள பழங்கதைகள், தொன்மங்கள், நாட்டுப்புறக் கதைகள் ஆகியவற்றில் காணக்கிடக்கும் கூறுகளைக் கவிஞன் கையாளலாம். பழைய கதைகளைப் புதுப்பித்தோ, மாற்றியோ பகல்கனவை வெளியிடலாம். ஒவ்வொரு மூலத்திலிருந்தும் சிறுசிறு கூறுகளை எடுத்துப் பெருவெள்ளம்போல இலக்கியவாக்கம் நடைபெறலாம் என்றும் பிராய்ட் கூறுவார். கவிஞன் தான் கேட்ட, படித்த அனைத்திலிருந்தும் சிறுசிறு கூறுகளைப் பெற்றுப் பகல்கனவை இலக்கியமாக்கலாம். இதனடிப்படையில் குயில்பாட்டைக் காணும்பொழுது பாரதியிடம் உள்ள தமிழ் இலக்கிய ஆளுமை தெரியவரும்.

குயில்பாட்டின் மூலங்களைப் பாரதி எங்கெங்கிருந்து ஒவ்வொரு அகப்பையாக மொண்டு கொண்டான் என்பதற்கான பட்டியலே வியப்பிற்குரியது. குயில்பாட்டு நாட்டுப்புற நிகழ்ச்சிகளை விவரிக்கும்

கலித்தொகை, பரிபாடல் போன்றுள்ளது என்றும் சாபமிடுதல், சாபம் பெற்ற மனிதர் வேண்டுதல், சாபத்தீர்வுக்கு வழி கூறல் பண்டைய புராணக் கதைகளை நினைவூட்டுகிற தென்றும், சிலம்பு, மணிமேகலை முற்பிறப்புக் கதையை அறவாணர் கூறியதுபோல் இங்கு அகத்தியர் குயிலின் கதையைக் கூறுகிறார் என்றும், கண்ணாலம், மாடன். மொட்டைத் தலையன், நெட்டைக் குரங்கன் என்ற சொற்கள் குறவஞ்சிச் சொற்களை ஒத்திருக்கின்றன

என்றும் தமிழறிஞர்கள் கூறுவதாக மருதநாயகம். (2004:18) குறிப்பிடுவார்.

மேலும்,

அவரது கவிதை மரத்திற்கு வேரும், வேரடி மண்ணும், அடிமரமும் தமிழிலக்கிய மரபே. பிறமொழிக் கவிஞர்களிடமிருந்து அவர் பெற்றவை யெல்லாம் அழகிய கிளைகளாகத் தழைத்திருக்கின்றன வண்ணவண்ணப் பூக்களாக மலர்ந்திருக்கின்றன. திருக்குறள், சிலம்பு, மணிமேகலை, தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, கம்பராமாயணம் ஆகியவற்றை ஆழ்ந்து கற்றதோடல்லாமல் பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகள் ஆகியோர் கவிதைகளையும் ஓதியுணர்ந்து தமிழ்க் கவிதைக்குப் புத்துயிர் அளிக்க முனைந்தவர் பாரதி

என்றும் மருதநாயகம் (மேலது:17) குறிப்பிடுவார்.

குயில்பாட்டை வேதாந்த நோக்கிலும் இலக்கிய நோக்கிலும், சமூக நோக்கிலும் காண இடம் தருவது பாரதியின் தமிழிலக்கிய, பக்தி இலக்கிய மரபின் வெளிப்பாடுகள் எனக் கொள்ளலாம்.

குயில்பாட்டைப் பிராய்டின் உளவியல் அணுகுமுறையில் பார்க்கும் பொழுது, அது பாரதியின் தமிழ் இசை குறித்த பகல்கனவுதான் என்பது புலனாகிறது. கவிஞன் கண்ட பகல்கனவு இலக்கியமாகும் பொழுது, பல குறியீடுகள் வழியாக அவரின் தமிழிலக்கிய மரபு வெளிப்படுத்தப்பட்ட விதத்தையும் அறிந்து கொள்ளலாம்.

5.4. பாவேந்தரின் பகல் கனவு

பாவேந்தரின் பகல் கனவை இரண்டு பாடல்களில் காணலாம். தமிழ்க் கனவு என்ற தலைப்பில் அமைந்த பாடல் ஒன்று. மற்றொன்று எந்நாளோ? என்ற பாடல், முதல்பாடல் கனவுநிலை என்பதை "உடனே திடுக்கிட்டு விழித்தேன்" என்ற அடியின் வழியாக அறியலாம். இரண்டாவது பாடலில் தமிழ் மக்களின் மேன்மை எந்நாளோ? என்ற ஏக்கத்தை வெளிப்படுத்தும் பாடல். அப்பாடலிலும் பாவேந்தர் கனவு காணுகிறார்.

பாவேந்தரின் கனவுக்குத் தூண்டுதலாக இருந்த நிகழ்கால நிகழ்ச்சி தமிழர்களின் தாழ்ந்த நிலை

அந்தோ! அந்தோ! பழைய
நைந்த தமிழரொடு நானிருந்தேனே! (182)

என்ற நிகழ்கால உண்மை அவரை ஏங்க வைக்கிறது.

இன்னாளி லேதமிழ் நாட்டினிலே யுள்ள
என்றமிழ் மக்கள் துயின்றிருந்தார்.
அன்னதோர் காட்சி இரக்கமுண் டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே!

இந்த நிகழ்கால நெகிழ்ச்சி, பண்டைத் தமிழர்களின் எழுச்சியை வைத்து, எதிர்கால மக்களின் நலனை இலக்கியம் ஆக்குகிறார்.

தமிழர்களின் ஒற்றுமையின்மை, கல்வி, புகழ் இல்லாத தன்மை, மொழி பற்றிய சிந்தனை இல்லாத நிலை இவற்றின் அடிப்படையில் இவர் எதிர்காலத்தைக் காட்டுகிறார்.

தமிழ்நா டெங்கும் தடபுடல் அமளி
பணமே எங்கணும் பறக்குது விரைவில்
குவியுது பணங்கள்! மலைபோற் குவியுது
தமிழின் தொண்டர் தடுக்கினும் நில்லார்
ஓடினார் ஓடினார் ஓடினார் நடந்தே!
ஆயிரம் ஆயிரத் தைநூறு பெண்கள்
ஒளிகொள் [illegible]யில் உறுதி காட்டி
இறக்கை கட்டி [illegible]ன் றார்கள்?

ஐயோ! எத்தனை அதிர்ச்சி உதஸாகம்!
சமுத்திரம் போல அமைந்த மைதானம்
அங்கே கூடினார் அத்தனை பேரும்
குவித்தனர் அங்கொரு கோடி ரூபாய்
வீரத் தமிழன் வெறிகொண் டெழுந்தான்!
உரக்கக் கேட்டான் ; உயிரோ நம் தமிழ்?
அகிலம் கிழிய ஆம்! ஆம் ! என்றனர்
ஒற்றுமை என்றான் ; நற்றேன் என்றனர்
உள்ளன்பு ஊற்றி ஊற்றி ஊற்றித்
தமிழ் வளர்ச்சிக்குச் சங்கம் ஒன்று
சிங்கப் புலவரைச் சேர்த்தமைத் தார்கள்!
கரைத்துக் குடித்துக் கனிந்த கவிஞர்கள்
சுடர்க்கவி தொடங்கினார்! பறந்தது தொழும்பு
கண்கடு மொழியில் கற்கண்டுக் கவிதைகள்
வாழ்க்கையை வானில் உயர்த்தும் நூற்கள்

தொழில் நூல், அழகாய்த் தொகுத்தனர் விரைவில்
காற்றி லெலாம் கலந்தது கீதம்
சங்கீத மெலாம் தகத்தாயத் தமிழ்
காதலெலாம் தமிழ் கனிந்த சாறு
கண்ணெதிர்த் தமிழ்க் கட்டுடல் வீரர்களே
காதல் ததும்பும் கண்ணா என்றனைக்
கோதை ஒருத்தி கொச்சைத் தமிழால்
புகழ்ந்தாளென்று பொறாமல் சோர்ந்தது
வீழ்ந்தாள் உடனே திடுக்கென விழித்தேன்.(181; 182)

எந்நாளோ! என்ற கவிதையும் ஏறத்தாழ இதே பொருளின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது.

என்னருந் தமிழ் நாட்டில் எல்லோரும் கல்விகற்று.
கலை ஞானத்தால் இமய மலைபோல் புகழைப்
பெறுவது எந் நாளோ?

கைத்திறச் சித்திரங்கள், கவிதைகள், வானநூல்கள்
சிற்பம், விஞ்ஞானம், காவியங்கள், இன்னபிற
உலகத்தின் புதுமைகளை எல்லாம் புத்தகசாலையில
வைப்பது எந் நாளோ?

தமிழ்க் கவிதையை ஆயிரம் மொழியில் காண உலக மக்கள் விரும்பினார்கள் என்று எப்போது காதில் விழும்?

பார்த்தொழில் போர்த் தொழில் அனைத்தும் கற்ற தமிழரைக் கண்டு புவியெல்லாம் நடுங்குவது எந்நாள்?

தமிழரின் உள்ளத்தால் ஒருவர் போல ஒற்றுமையுடன் ஒன்று சேரும் நாள் எந்நாள்?

தமிழரைக் குற்றம் கூறியவரை நொறுக்கினார் என்று கேட்கும் நாள் எந்நாள்?

தமிழன் சுட்டு திசையில் உலகம் சென்று கதிபெற்றது என்பதை கேட்பது எந்நாளோ?

தமிழ் மண்ணில் உலகை மயக்கவும், பகையை அழிக்கவும், வானத்தில் பறந்து உலகை கலக்குதல் எந்நாள்?

தமிழகத்தின் ஆண் பெண் சமத்துவமாக உள்ளனர் என்று கேட்பது எந்நாள்?

பாவேந்தரின் கனவு அப்படியே மாற்றியமைத்துப் பார்க்கும் பொழுது, அவரின் உள்ளத்தைத் தாக்கிய தமிழர்களின் நிலையை அறிந்து கொள்ளலாம். இந்நிலை ஒவ்வொன்றையும் நிவர்த்தி செய்வதாகவே பாவேந்தரின் கனவு அமைகிறது.

தமிழ்நாடு எங்கும் அமைதி
பணமே இல்லாமல் வறுமையில் உள்ளனர்
தமிழுக்கு தொண்டு செய்ய யாரும் இல்லை
பெண்கள் கண்களில் ஒளி இழந்து வீட்டினுள் இருக்கின்றார்.
தமிழர்களிடையே ஒற்றுமை இல்லை
நம் தமிழை உயிர் போல நினைக்க வேண்டும் என யாரும் எண்ணவில்லை
ஒற்றுமையின்றி உள்ளனர்
தமிழ் வளர்க்கும் சங்கம் இல்லை
தமிழாய்ந்த கவிஞர்கள் இல்லை
வாழ்க்கை உயர்த்தும் கவிதைகள் இல்லை

இசையில் தமிழ் இல்லை
தமிழர்கள் உடல் வலிமையற்று இருக்கின்றனர்
கொச்சைத் தமிழ் பேசுகின்றனர்.

பாவேந்தரின் கனவுக்கு அடிப்பொருளாக இருப்பவை எல்லாம், தமிழ்க் கவிஞரின் வறுமை, தமிழர்களின் ஒற்றுமையின்மை, பிறமொழியின் கலப்பு எனலாம். இந்த நிலைகளையே அவர் கவிதைப்படுத்தியுள்ளார் .

பாவேந்தர் தம் உள்ளத்து உணர்ச்சிகளை நேரடியாகவே, ஏக்கமாக வெளியிட்டுள்ளார். இவரது பாடல்கள் நெடும்பாடலாக இல்லாமல் இருப்பதால் பாரதியைப்போல் பல குறியீடுகள் வைத்து மறைமுகமாகக் கூறவில்லை என்று கருதலாம். ஆனாலும் இலக்கிய இன்பம் தரும் வகையில் எந்நாளோ? என்ற பாடலைக் கவிதைப் படுத்திய விதம் ஆராயத்தக்கது.

"தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தென்றன் செவியில் வந்து"

"..............................இன்ப ஊற்றுக்
கேணியிற் குளிப்ப தெந்தாள்?"

"கண்களும் ஒளியும் போலக்
கவி மலர் வாசம் போலப்"

போன்ற உவமைகளும், விண்ணிடை ரதம், பண்ணிடைத் தமிழ், மண்ணிடை வாள் என்ற மொழியமைப்பும், இலக்கிய இன்பத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

பாரதியின் குயில்பாட்டு, நெடும்பாடலாக இருப்பதால் பாரதி தன் மனத்தில் உள்ள இலக்கியக் கருவை எல்லாம் ஆங்காங்கே இணைத்துப் பகல் கனவாக வெளியிட்டுள்ளார்.

பாவேந்தர் குயிலைத் தமிழ் மக்களை எழுப்ப வந்த குரலாகக் கொள்கிறார். அதனால்தான் குயில் என்று தனது பத்திரிக்கைக்குப் பெயரிட்டார். குயிலின் குறிக்கோள்களும், செயல்பாடுகளும், தமிழின் தொன்மையைப் பறைசாற்று வதற்காகவும், தமிழ் மொழியைக் காக்கும் வாளாகவும் இருந்துள்ளன.

பிராய்டின் கருத்துப்படி பண்டைய நாள் சிறப்பின் அடிப்படையில் தமிழின் எதிர்காலத்தைக் கட்டமைப்பதாகப் பாவேந்தரின் கனவு இருக்க வேண்டும். பாவேந்தர் பண்டைய தமிழ், தமிழர் பெருமையை இந்தப் பாடலில் கூறவில்லை யெனினும் பல்வேறு இடங்களில் அதைப் பற்றிக் கூறியுள்ளார். அவரின் தமிழ்க் கனவு என்ற பாடலுக்கு ஏற்பப் புலவரின் வறுமையைத் தீர்த்த பழம் மன்னர்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதுவார்.

பண்டு தமிழ்ச் சங்கததை
உண்டு பண்ணிய மன்னன் சீரெல்லாம்
விண்டு புகழ்ந்து பாடி
இன்னும் வியக்கின்றார் இப் பாரெல்லாம்!
அண்டும் புலவர்க் கெல்லாம்
அந்நாள் மன்னர் கொடுத்த கொடைதானே
தண்டமிழ் இந்நாள் மட்டும்
சாகாமைக்கே அடிப்படை மானே!
புலவர் நினைப்பை யெல்லாம்
பொன் னெழுத்தால் பதித்து நூலாக்கி
நலம் செய்தா ரடி மானே
நம் தமிழ்வேந்தர் நம்மை மேலாக்கி
இலை என்ற புலவர்க்கோ
எடையின்றிப் பொன் தந்தார் மூவேந்தர்
கலை தந்தார் நமக்கெல்லாம்
அதனால் இன்றைக்கு நாம் தமிழ் மாந்தர் (243)

அன்றும் இன்றும் என்ற தலைப்பில் பாவேந்தர் அன்றைய தமிழ்ப் புலவரின் நிலையையும், சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்ததையும், நூல்கள் வெளியிட்டதையும் கூறுகிறார். ஆனால் இன்றைய சூழல் அவ்வாறு இல்லாததால் அப்பழம்பெருமையின் அடிப்படையில் கனவு கானுகிறார்.

பண்டிருந்த தமிழர் மேன்மை
பழுதாக முழு துமே
கண்டிருந்தும் குகையிற் புலிபோல்
கண்ணுறக்கம் ஏனோ? (242)

என்று தமிழரின் விழிப்பில்லா நிலை அவரின் மனதைத் தாக்குகிறது.

இறந்தொ ழிந்த
பண்டை நலம் புதுப்புலமை
பழம் பெருமை அனைத்தையும்நீ
படைப்பாய்! இந்நாள் (513)

என்று கூறுவதன் வழியாகப் பண்டைப் பெருமையின் அடிப்படையில் தமிழின் எதிர்காலத்தைக் கட்டமைப்பதற்கான தமிழ்க்கனவு தான் என அறியலாம்.

ஒவ்வொரு படைப்பாளியின் மனதிலும் ஏதோ ஒன்று ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அத்தாக்கம், படைப்பாளியின் கற்பனையைத் தூண்டித் தான் கற்ற இலக்கியங்களோடு இணைத்துப் படைப்பை உருவாக்கச் செய்கிறது. இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, பாரதியின் படைப்பு பெரும் கற்பனையையும் புனைவுகளையும் கொண்டுள்ள ஆனால் பாவேந்தரின் படைப்புக்கள் எல்லாம் நேரடியாக, தமிழரின் தாழ்வு நிலையை எடுத்துரைப்பதாக வந்துள்ளன. பாவேந்தரின் சிந்தனைகள் எல்லாம் தமிழ், தமிழர் உயர்வுதான் என்பதை இந்த ஆய்வின் வழியாகப் புரிந்து கொள்ளலாம்.

இயல் ஆறு

பாவேந்தர் தமிழ்

மொழிபெயர்ப்பியல் அணுகுமுறை

6.1. முன்னுரை

பாவேந்தரின் தனித்தன்மை என்பதில் தமிழ் உணர்வும், புரட்சிக் கருத்துக்களும் சிறப்பிடம் பெறும். தமிழ் உணர்வை மையமாகக் கொண்டு, தமிழ் மக்கள், தமிழ்நாடு, தமிழ் வளர்ச்சி என்று மொழிவழித் தேசியத்தைக் கருவாக்கிக் கவிதைகள் புனைந்துள்ளார். மொழியின் வளர்ச்சியே மக்கள் வளர்ச்சி என்பதைக் கருவாகக் கொண்டவர் பாவேந்தர்.

இதுவரை தமிழ் பற்றி இந்த அளவு எவரும் பாடியதில்லை என்று கூறும் வண்ணம் தமிழைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். தமிழ் மொழியின் சிறப்பையும், தமிழின் உயர்வையும் வெளிப்படுத்தும் வண்ணம் பல்வேறு வகையான அடைகளைத் தமிழுக்குப் பயன்படுத்தியுள்ளார். இவ்வடைகள் இவரது தமிழ்ப் பற்றைக் காட்டுவதோடு நில்லாமல் மொழிக்கே புதிய அணியாக அமைகின்றன. இவ்வடைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் பொழுது உள்ள சிக்கல்களை இவ்வியல் ஆராய முற்படுகிறது. இதற்குத் தரவாகப் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் 1996ஆம் ஆண்டு வெளியிட்ட பாரதிதாசன் கவிதைகள் என்னும் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்நூலில் பாரதிதாசனின் 200 சிறந்த கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் இடம் பெற்றுள்ளன.

பதின்மூன்று அறிஞர்கள் மொழிபெயர்த்த இக்கவிதைகள் கால வரிசைப்படுத்தப்பட்டுக் முதலில் வெளிவந்த ஆண்டு, இதழ் என்ற குறிப்புக்களோடு அமைந்துள்ளன. இந்நூலில் இடம் பெற்றுள்ள கவிதைகள் பெரும்பாலும் பிறமொழி பெயர்ப்புகளில் இடம்பெறாத கவிதைகளின் தொகுப்பு எனலாம். இந்நூலில் இடம்பெற்ற கவிதைகளில் பாரதிதாசன் பயன்படுத்திய தமிழ் அடைகளையும் அவற்றிற்கு ஆங்கில மொழி பெயர்ப்பையும் மொழிபெயர்ப்பியல் கண்ணோட்டத்தில் இங்கு ஆராயலாம்.

6.2. தமிழ் அடை

தமிழுக்கு அடையளித்தல் என்பது பாவேந்தருக்கு முன்னரே தொடங்கப்பட்ட ஒன்றாகும். தமிழ் என்னும் சொல் தொல்காப்பியத்தில் செந்தமிழ்நிலம், செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் (சொல் 398, 400) என்ற அடையுடன் காணப்படுகிறது. அதற்கு அடுத்தாற்போலச் சங்க இலக்கியத்தில் தண்டமிழ் (புறம் 51) என்ற அடையும், அருந்தமிழ், தென்தமிழ் என்ற அடைகள் சிலப்பதிகாரத்திலும், இன்தமிழ் என்பது சீவகசிந்தாமணியிலும் இடம் பெற்றுள்ளன. தமிழுக்கு இன்றுவரை அமைந்த அடைகள் சுமார் 250 என்று கடிகாசலம் (1982: 4,13) குறிப்பிடுவார்.

தமிழுக்குக் கிடைத்த அடைகளில் பாவேந்தரின் பங்களிப்புத் தனித்தன்மை வாய்ந்தது. இதற்குக் காரணம் வேறு கவிஞர்கள் தமிழ் மொழியின் பயனைப் பாடினார்கள். ஆனால், பாவேந்தரோ தமிழையே கருவாகக் கொண்டுப் பாடியுள்ளார். தமிழுக்குப் பயன்படுத்தப்பட்ட அடைகள் தமிழுக்கு வளம் சேர்ப்பதற்காகவும், கவிதைச் சிறப்பிற்காகவும் மட்டுமே அமைந்தன என்று கூற இயலாது. இந்த அடைகளின் பயன்பாட்டிற்குப் பின்புலமாக அமைவது தமிழ் மொழி அரசியலாகும். பொதுவாக இந்திய மொழிப்பரப்பில் ஆங்கிலம் என்பது சமூக உயர்வுக்குப் பயன்படும் மொழி எனவும். வடமொழி சமயமொழியாகவும், இந்தியப் பண்பாட்டின் மொழியாகவும் கருதப்பட்டன. மொழிக்கு அது பயன்படுத்தப்படும் சூழலை வைத்து அரசியலமைப்பு, சட்டங்கள் வழித் தகுதி அளிக்கப் படுகிறது. ஆனால், இச்சட்டங்களை மீறி மொழிக்குத் தகுதி அளிப்பதில் மக்களின் மனப்பாங்குகள் தனி இடம் வகிக்கின்றன. இம்மனப்பாங்குகள்தாம் மொழிக்குத் தனிப் படிமங்களை அல்லது மொழி பற்றிய பிம்பங்களை உருவாக்குகின்றன. இப்பிம்பங்கள்

மொழியில் இல்லை. அவை மொழிக்கு வெளியில் இருந்து கட்டமைக்கப்படுகின்றன. இக்கட்டமைப்பிற்குப் பெரிதும் காரணமாக அமைவது அம் மொழிச் சமூகத்தின் அரசியலாகும்.

தமிழுக்கு அளிக்கப்பட்ட அடைகளில் சிலவற்றை அண்ணாமலை (1999) ஆராய்ந்து அதற்கான காரணங்களையும் விளக்குவார். செம்மொழி என்பது அன்றைய பேச்சு வழக்கில் இருந்து செப்பமிடப்பட்ட தன்மையைக் காட்டுவதற்கும், இலக்கணக் கட்டமைப்பைக் காட்டுவதற்கும் அமைக்கப்பட்ட அடையாகச் சுட்டுவார். அதேபோலத் தென்மொழி என்பது வடமொழிக்கு எதிர்வினையாகக் கட்டமைக்கப்பட்டது என்பது புலனாகும். தமிழகச் சூழலில் ஒரு காலகட்டத்தில் இருந்த, வடமொழி மேலாண்மைக் கலப்பும் வடமொழிக்குப் புனையப்பட்ட பிம்பங்களும் தமிழ் மொழியின் தாழ்வுக்குக் காரணங்களாக அமைந்தன. வடமொழி எதிர்ப்பு என்பது தமிழ் மொழியின் தனிததன்மை, தொன்மை, வளமை போன்றவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. பக்தி இலக்கியங்களில் கட்டமைக்கப்பட்ட தூயதமிழ் என்ற அடை சடங்குத் தூய்மைக்கு இணையாக வேறு சொற்கள் கலவாத நிலையைக் காட்டும். அதேபோலக் கன்னித்தமிழ், தாய்த்தமிழ் என்ற அடைகளும், தமிழின் வளமை, தனித்தன்மை, உயிர்ப்புச் சக்திக்குக் குறியீடுகளாக அமைகின்றன. தாய்த் தமிழ் என்பது வணங்கப்படுவதற்கு ஒப்பானது, தமிழர்களுக்குத் தாயானது என்று தொடங்கி, திராவிட மொழிகளின் தாயாகவும், உலக மொழிகளின் தாயாகவும் இவ்வடையின் பரப்பு விரிவாக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழிக்கு வழங்கப்பட்ட அடைகள் மொழியின் தனித்தன்மையைக் காட்டுவதோடு, தமிழ் மொழிக்கு எதிராக அமைந்த வேற்றுமொழி மேலாண்மை, அம்மொழியின்பால் இருந்த மக்களின் மனப்பாங்குகள் ஆகியவற்றின் வீச்சையும், அவற்றிற்கு எதிரான அரசியலையும் காட்டும்.

6.3. பாவேந்தரின் தமிழ் அடைகள்

பாரதிதாசனும் தமிழை, தமிழ் உயர்வை, தமிழ்த் தொண்டை, தமிழ்க் கல்வியைப் பாடுவதற்குக் காரணம், தமிழரின் தன்னிலை மறந்த நிலைதான். பாவேந்தர் தமிழ் அடைகள் பயன்பாட்டிற்கான விளக்கங்களைப் பின்வரும் அவரின் பாடல் விளக்கும்.

இயற்கை அன்னை அருளிய இன்தமிழ

அயல் மொழி வேண்டா ஆர் எழில் சேர்தமிழ்

நிறைதமிழ் இந்நாள் நெடுநிலம் முழுதும்

குறைவில தென்று குறிக்கும் தனித்தமிழ்

தமிழர் வாழ்வின் தனிப் பெருமைக்கும்

அமைந்த சான்றாம் அமுதுநேர் செந்தமிழ்

அந்நாளில் அற்றசால் புலவர்

எந்நாள் தோன்றியதோ எனும் பழந்தமிழ்

தமிழ்நாடு பலப்பல தடுப்பரும் இன்னலில்

அமைந்தும் அணுவும் அசையாப் பெருந்தமிழ்

(இசையமுது.பக்.30)

எனவரும் இந்தப்பாடல் தமிழ் அடைகளையும் அவற்றிற்கான விளக்கங்களையும் சுட்டுகிறது.

மொழி பெயர்ப்புக்காகத் தேர்வு செய்யப்பட்ட 200 கவிதைகளிலும் பாவேந்தர் இதுபோல் ஏராளமான உவமைகள், உருவகங்கள், பயன்படுத்தியுள்ளார். இக்கவிதைகளில், செந்தமிழ், ஊரறியும் தமிழ், தகத்தகாயத் தமிழ், இன்பத் தமிழ், பைந்தமிழ், கன்னித் தமிழ், முத்தமிழ், பாலோடு நேர்தமிழ், இன்தமிழ், ஒண்டமிழ், தெள்ளுதமிழ், தாயெழிற்றமிழ், பண்ணிடைத் தமிழ், இசையாம் தமிழ், மங்காத தமிழ், வீரஞ் செய்கின்ற தமிழ், செழுந்தமிழ், அருந்தியிருந்திட்ட தமிழ், கொச்சைத் தமிழ், வண்தமிழ், நெடுந்தமிழ், நற்றமிழ், முத்தமிழ், பசுந்தமிழ், புலமைத்தமிழ், புகழ்தமிழ், தூயதமிழ், அருந்தமிழ், எனப் பல்வேறு அடைகளையும் உருவகங்களையும் பயன்படுத்தியுள்ளார். இக்கவிதைகளை முன்னர்க் குறிப்பட்டதுபோல் 13 மொழி பெயர்ப்பாளர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர். இவ்வடைகள் மொழி பெயர்க்கப்பட்ட விதத்தை அறிந்து கொள்ளும் முன் பாரதிதாசன் கவிதைகள் மொழி பெயர்க்கப்பட்ட விதத்தையும், அதில் உள்ள சிக்கல்களையும் அறிந்துகொள்வது அடைகளின் மொழிபெயர்ப்பை அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

6.4. மொழிபெயர்ப்பு வகைகள்

பொதுவாக மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியில் உள்ள

கருத்துக்களை மற்றொரு மொழிக்கு மாற்றியமைக்கும் முறையாகும். இக்கருத்துக்களை மாற்றும் பொழுது மூலமொழியில் காணப்படும் பொருள், சுவை, தன்மை, போன்றவை மாறாமல் இலக்கு மொழியின் தன்மைக்கு ஏற்ப அமைய வேண்டும். மூல மொழியிலிருந்து இலக்கு மொழிக்கு மொழி பெயர்க்கும் பொழுது, கருத்துச் சிதையாமலும் மூல மொழிக்கு நேர்மையாகவும் இருக்க வேண்டும் என்பது பொதுவிதி. மொழிபெயர்க்கப்படும் பனுவலின் தன்மைக்கு ஏற்பக் கவிதை, கதை, உரைநடை , அறிவியல் போன்ற தன்மைகளை அதே நடையுடனும், தன்மையுடனும் மொழிபெயர்ப்பது என்பது மொழி பெயர்ப்பாளரின் தனித் திறமையைப் பொறுத்தது. எனவேதான் மொழி பெயர்ப்புப் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. பொதுவாகக் கவிதை மொழிபெயர்ப்பு மற்ற மொழிபெயர்ப்புகளை விடச் சிறிது கடினமானது.

இந்நிலையில் பாவேந்தரின் கவிதைகளின் ஆங்கில மொழி பெயர்ப்பைக் காணும்பொழுது, மொழிபெயர்ப்பாளரின் திறனுக்கு ஏற்பப் பல்வேறு விதமாக அமைந்துள்ளது. எடுத்துக்கொண்ட கவிதையின் தன்மை குறையாமல் குறிக்கோள் மொழியில் பெயர்க்கும் பாங்கும் காணப்படுகிறது.

'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்ற பாடலின் மொழி பெயர்ப்பு (பக்-96) மூலமொழியின் சொற்கள், கருத்து குறையாமல் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் வரும் தமிழ் உவமைகளின் மொழி பெயர்ப்பு ஆங்கிலத்தன்மையோடு ஒத்திருப்பதாகவும் அமைந்துள்ளது. (கணபதி)

தமிழுக்கும் அமுதென்று பேர் - *Tamil too is as nectar know*

தமிழுக்கு நிலவென்று பேர் - *Tamil is as the moon described*

தமிழுக்கு மணமென்று பேர் - *Tamil is as fragrance considered*

தமிழுக்கு மதுவென்று பேர் - *Tamil as delightful mead is deemed*

இப்பாடலில் வரும் 'என்றுபேர்' என்பது known, described, considered, deemed என்று உள்ளது. தமிழில் 'பேர்' என்ற சொல்லின் தன்மை பலவாறாக உள்ளதை அறிந்து மொழிபெயர்க்கப்

பட்டுள்ளது. அதேபோல *nectar, mead* போன்ற பழைய ஆங்கிலச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. அமிழ்து என்பது தேவர்கள் பருகுகின்ற ஒரு பானம் என்றும் தேனும் நீரும் கலந்த ஒருவித மது என்றும் பழைய பொருட்களில் கையாளப்பட்டுள்ளது. இது மொழி பெயர்ப்பின் ஒரு நிலை.

காற்றிலெல்லாம் கலந்தது கீதம்
சங்கீதமெல்லாம் தகத்தகாயத்தமிழ்
காதெல்லாம் தமிழ்க் கனிந்த சாறு
கண்ணெதிர் தமிழ்க் கட்டுடல் வீரம்
songs got mixed units all the wind
sparkling Tamil found a place in music
All love was suffused with juce
Pleasing presence of Tamil soldier strong. (மருதநாயகம்)

மேற்கூறிய பாடல் கருத்துக் குறையாமல், அமைப்பு மாறாமல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இம்மொழி பெயர்ப்பு நடைமுறை, ஆங்கிலத்தில் இருப்பதால் தமிழில் உள்ள இலக்கணச் சொற்கள் விரித்து ஆங்கிலத்தில் ஆளப்பட்டுள்ளன.

மொழி பெயர்ப்பின் மூன்றாவது வகையாகத் தமிழில் உள்ள கருத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, அதற்குப் பொருள் உரைக்கும்படி அமைந்த மொழி பெயர்ப்புகள்

நெடுந்தமிழ் நாடெனும் செல்வி நல்ல
நிலைகாண வைத்திடும் பெண்களின் கல்வி
'The well being of our Tamil land
is closely linked
To women's advancement (தங்கப்பா-198)

சுடர்படு முதியோள் தோளினின்றும்
அடிமிசை வீழ்ந்து புரளும் சலசலப்
பொன்னாடைதனில் ஆடினர்
அன்னாய் அகம் புறம் குளிர்ந்தோம் என்று
We are happy in mind and body
said the Tamils enjoying the shower (நாடர்-446)

மேற்கண்ட பாடல்களில் வரும் பல உவமைகள் உருவகங்களைப் பல சொற்களை விடுத்துப் பொதுக் கருத்து மட்டும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதில் மொழி நிலையிலும் கருத்து நிலையிலும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

மொழிபெயர்ப்பாளர் , கருத்தை எடுத்துக் கொண்டு அதை விளக்கும் முறையாகச் சிலவற்றைச் சேர்த்து மொழி பெயர்க்கும் நிலையிலும் மொழி பெயர்ப்புகள் உள்ளன.

சலுகை போனால் போகட்டும் - என்
அலுவல் போனால் போகட்டும்
தலைமுறை ஒரு கோடி கண்ட என்
தமிழ் விடுதலை ஆகட்டும்
Let them take away my job
Let then take away
the privilege I enjoy
I donot care
my only concern is
freedom for my mother tongue
that has seen
A hundred thousand generation (தங்கப்பா, 552)

இந்நூலில் இடம் பெற்றுள்ள மொழிபெயர்ப்புக்கள் பல்வேறு நிலைகளில் இருப்பதற்கான காரணங்கள் மொழிபெயர்ப்பாளர்களை மட்டும் சார்ந்தவையல்ல. மொழி பெயர்ப்புக்கான அளவு கோல் முறைகள் வகுக்கப்படாதது ஒரு காரணமாகலாம். இதற்கான வேறு காரணங்களைக் காட்ட வேண்டுமெனில் அது மொழியின் சிக்கலும் பண்பாட்டுச் சிக்கலும்தான்.

6.5. மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்

பொதுவாக மொழி பெயர்ப்பில் சிக்கல்களாகச் கருதப்படுவன மொழி நிலையிலும் உள்ளன. பண்பாட்டு நிலையிலும் உள்ளன. இரண்டு வேறுபட்ட மொழி அமைப்பும், பண்பாடும் உள்ள சமூகங்களுக்கு இடையே மொழிபெயர்ப்பு நடைபெறும்பொழுது இச்சிக்கல்கள் தோன்றும். மொழியும் பண்பாடும் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளது. மொழி

பண்பாட்டின் கூறுகளைப் பிரதிபலித்தே நிற்கும். பண்பாட்டின் பல கூறுகள் மொழி வழியே கட்டப்படுகின்றன. ஒரு சமுதாயத்தின் பண்பாடு என்பது நிறப்பெயர்கள், உறவுமுறைப் பெயர்கள் போன்றவற்றில் பிரதிபலிக்கின்றது.

இரண்டு வேறுபட்ட பண்பாடுகளைக் கொண்ட மொழிகளுக்கு இடையே மொழிபெயர்ப்பு நடைபெறும்பொழுது பண்பாட்டுக் கூறுகளைப் பிரதிபலிக்கும் இணைச் சொற்கள் இல்லாமல் இருக்கலாம். அத்தகைய சொற்கள் மொழிபெயர்ப்பில் சிக்கலை ஏற்படுத்தும். அத்தகைய சொற்களை மொழி பெயர்க்கும் பொழுது மூலமொழிக் கூறுகள் அப்படியே குறிக்கோள் மொழியில் கொடுக்கப்படுகின்றன. அதற்கு எடுத்தக்காட்டாக இம்மொழி பெயர்ப்பில் பாரதிதாசன் எடுத்தாண்ட தமிழ்ப் பண்பாட்டுச் சொற்களான பொங்கல், காந்தள் பூ, கொன்றை, யாழ், ஆடி போன்ற சொற்கள் ஆங்கிலத்தில் அப்படியே கொடுக்கப் பட்டுள்ளன.

மூலமொழியின் பண்பாட்டுக் கூறுகளுக்கு ஆங்கில மொழியில் ஓரளவு நிகரான சொற்களைக் கண்டறிந்து தருவது மற்றொரு முறையாகும். இத்தகைய வழிமுறையும் இம்மொழி பெயர்ப்பில் உள்ளது.

குயில் - *Cuckoo*

சேல் - *Solman fish*

தமிழ்ப் பண்பாட்டுச் சொற்கள் அதற்கு நிகரான சொற்களையும் கூறுகளையும் கொண்டு ஆங்கிலப் பண்பாட்டிற்கு மாற்றியமைக்கப்பட்ட நிலையைப் பின்வரும் பாடல் விளக்கும்.

'சேலை நிகர்த்த விழிவுடையாள்
எந்தன் செந்தமிழ்ப் பத்தினி வந்துவிட்டாள்'

"Came my prestine-pure-Tamil-spouse-dear
The lady solman-eyed"

இங்குப் 'பத்தினி' என்பது தமிழ்ப் பண்பாட்டுக்கே உரிய சொல். ஆங்கிலப் பண்பாட்டில் இந்தச் சொல்லைக் கொண்டு செல்லும் முறை அச்சொல்லின் ஒவ்வொரு பொருண்மைப் பரிமாணத்தையும் மொழிபெயர்ப்பது போல அமைந்துள்ளது.

ஆங்கிலப் பண்பாட்டில் விழியை மீனுக்கு உவமையாக்கும் நிலை உள்ளதா? என்பது ஆய்விற்குரியது.

தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் மொழிபெயர்க்காமல் அப்படியே விட்டுவிடும் நிலையும் இம்மொழிபெயர்ப்பில் உள்ளது.

'ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன் முன்னேற்றம்.'
Each forword step of sweet tail
is your own progress, my Tamil youth(தேவேந்திரன் ப.298)

இங்கு உள்ள சிலம்பு என்ற சொல் மொழி பெயர்க்காமல் விடப்பட்டுள்ளது.

மொழி பெயர்ப்பில் பண்பாட்டுக் கூறுகளோடு மொழிக் கூறுகளும் மொழி பெயர்த்தலுக்குத் தடையாக அமையலாம். தமிழ் மொழியில் வரும் சிலேடை, அடுக்குத்தொடர், புதிய சொற் சேர்க்கை ஆகியன ஆங்கிலத்தில் பெயர்க்கப்படும் பொழுது தடைகளாகின்றன. அத்தகைய மொழியமைப்புகள் சுருக்கப்பட்டோ, விரிவாக்கம் செய்யப்பட்டோ பொதுக் கருத்து தோன்றுமாறு மொழி பெயர்க்கப்பட்டுள்ளமையைப் பின்வரும் எடுத்துக்காட்டுகள் விளக்கும்.

1. நனியுண்டு நனியுண்டு காதல்
   Intense love for Tamil பக்.164

2. சொல் தச்சு
   Cleverly mouth his words பக்.440

3. பேரறிவாளர்
   Thinker great பக்.152

இந்த மொழி பெயர்ப்பில், பாரதிதாசன் பாடல்கள் மொழி பெயர்க்கப்பட்ட நிலையையும், மொழி, பண்பாட்டுக் கூறுகளின் மொழி பெயர்ப்புப் தன்மையையும் வைத்துப் பாவேந்தரின் தமிழ் அடைகள் மொழி பெயர்ப்பை ஆராயும் போது பல்வேறு உண்மைகள் புலப்படும்.

6.6. தமிழ் அடைகள் மொழிபெயர்ப்பு

பாரதிதாசனின் தமிழ் அடைகளைப் பெரும்பாலான மொழிபெயர்ப்பாளர்கள் மொழி பெயர்க்காமல் விட்டுள்ளனர். தமிழ் அடைகள் மொழி பெயர்க்கப்பட்ட விதம் பின்வருமாறு அமைந்துள்ளது.

செந்தமிழ்	-	*Prestine Tamil , Tamil rich, Tamil Prestine.*
தகத்தகாயத் தமிழ்	-	*Glory of Tamil, sparkling Tamil.*
மங்காத தமிழ்	-	*Ever-splendrous Tamil.*
இன்பத்தமிழ்	-	*Sweet Tamil*
பைந்தமிழ்	-	*Rich Tamil, Tamil beautiful*
கன்னல் தமிழ்	-	*Sweet Tamil*
முத்தமிழ்	-	*Triangle Tamil*
பாலோடு நேர்தமிழ்	-	*Nactorine Tamil*
ஒண்டமிழ்	-	*Sweet Tamil*
தெள்ளுதமிழ்	-	*Classic Tamil*
இனிதாகியதமிழ்	-	*My Tamil sweet*
தாயெழிற்றமிழ்	-	*To see mother Tamil*
பண்ணிடைத் தமிழ்	-	*Russing music and Tamil*
இசையாம் தமிழ்	-	*Sweet, rich Tamil its music*

பெரும்பாலான அடைகளுக்கு மொழி பெயர்ப்பாக *Sweet* என்ற ஆங்கிலச் சொற்கள் பெயர்க்கப்பட்டுள்ளன. செந்தமிழ் என்ற சொல்லுக்கு நிகராக ***Prestine*** என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல்லின் பொருளாக *original condition, spotless, fresh as*

if new, ancient என்று கொடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சொல் பெரும்பாலான தமிழ் அடைகளுக்குப் பொருத்தமாக இருப்பினும் செந்தமிழுக்கு ஒரே மொழிபெயர்ப்பாளர் இவ்வாறு பயன்படுத்தியுள்ளார். தமிழ் அடைகளை ஓரிருவர் தவிர வேறு மொழி பெயர்ப்பாளர்கள் மொழி பெயர்க்கவில்லை.

முன்னர்க் குறிப்பிட்டதுபோலத் தமிழ் மொழிக்கு அடைகள் அளிப்பது தமிழ் மொழிக்கு உரிய நிலை என்று கூறுலாம். வேறு எந்த மொழிக்கும் இல்லாத வகையில் தமிழ் மொழிக்கு இத்தனை அடைகள் வழங்கப்படும் நிலைக்கு இரண்டு காரணங்களைச் சுட்டலாம். ஒன்று தமிழ் இலக்கண இலக்கியத்தின் இருபது நூற்றாண்டுச் சிறப்பு, இரண்டு தமிழ் மொழிமீது தொடர்ந்து இருந்த அந்நிய மொழிகளின் மேலாதிக்கம். தமிழர்களின் நீண்ட நெடிய இலக்கியப் பாரம்பரியம் பல மொழிகளின் மேலாதிக்கத்தை எதிர்த்துத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளவும், தமிழர்களிடையே மொழிப்பற்றை ஏற்படுத்தவும் காரணமாயின. திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய மொழிகள் மொழிக்கலப்பைப் பெற்றிருப்பினும், தமிழ் பிற மொழிக் கலப்பை நீக்கித் தூய தமிழாக இன்றும் மிளிர்கிறது. இதற்குத் தமிழ்க் கவிஞர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் அரசியல்வாதிகள் இவர்களின் பங்கு மகத்தானது. இது தமிழுக்கே உரிய சிறப்பு. இந்நிலையில், தமிழில் உள்ள அடைகள், தமிழை ஒரு மொழியாக மட்டுமல்லாமல் ஒரு தனிப் பண்பாடாகவும் காட்டுகிறது. தமிழ்மொழியின் ஒவ்வொரு அடையும் அவ்வடையின் பின் உள்ள பொருளும் அரசியலும் ஒரு மொழிப்பண்பாட்டைச் சுட்டியே உள்ளன. தமிழ் அடைகளை மொழிபெயர்க்கும் பொழுது, அவற்றில் மொழிச் சிக்கல்களும், பண்பாட்டுப் பொருண்மையும் அடங்கியுள்ளதால் மொழி பெயர்ப்பில் தனிக்கவனம் தேவைப்படுகிறது.

அதோடு மட்டுமலலாமல், நாம் நம் இலக்கியங்களை நம் கவிஞர்களைப் பிற மொழியினருக்கு மொழி பெயர்ப்பு வழியாக அறிமுகம் செய்யும் பொழுது, எந்தப் பரிமாணத்தை எவ்வாறு அறிமுகப்படுத்துகிறோம் என்பதில்தான் சிறப்பு உள்ளது. பாரதிதாசனின் கவிதைகளை மொழிபெயர்க்கும் பொழுது அவரின் தமிழ்ப் பற்றும் புரட்சிக் கருத்துக்களும் தவிர்க்க இயலாதவை. மொழிக்குப் புதிய புதிய பரிமாணங்களைத் தந்த கவிஞரைச் சரியான முறையில் அறிமுகப்படுத்துவதுதான் சிறப்பு. எனவே,

கவிஞரின் தமிழ் அடைகளைச் சரியானபடி அதன் மொழி பண்பாட்டுச் சிறப்புக்களுடன், மொழி பெயர்ப்புச் செய்வதே மொழி பெயர்ப்பாளரின் தலையாய பணியாகும்.

துணை நூல்கள்

1. அன்னி தாமசு, 1995. பாரதிதாசன் தமிழுணர்வு. உலகத் தமிழ்க் கல்வி இயக்கம். தமிழூர்.

2. இராமமூர்த்தி, எல். 2005. மொழியும் அதிகாரமும். அகரம். தஞ்சாவூர்.

3. சண்முகம்.செ. 2004. பாவேந்தரின் மொழியுணர்வும், மொழி நடையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

4. சுந்தரமூர்த்தி, சி., 2000. பாரதியார் கவிதைகள் (பதி), பாவை பப்ளிகேசன், சென்னை.

5. சுப்ரமணிய பாரதி ஸ்ரீ., 1964 மகாகவி பாரதியார் கட்டுரைகள், அருணா பதிப்பகம், மதுரை.

6. சுப்ரமணிய பாரதியார், 1981. மகாகவி பாரதியார் கட்டுரைகள், வானதி பதிப்பகம், சென்னை.

7. சுப்பு ரெட்டியார், ந., 1982. குயில்பாட்டு ஒரு மதிப்பீடு, சென்னை.

8. திருவாசகன். ஆ., சுரதா கல்லாடன், 1993. பாரதிதாசன் கவிதைகள் (பாவேந்தர் பாடல்களின் முழுத்தொகுப்பு) அருள் சுடர் பதிப்பகம். சென்னை.

9. நுஃமான், எம்.ஏ., 1999 (1984) பாரதியின் மொழிச் சிந்தனைகள், சவுத் விஷன், சென்னை.

10. பொற்கோ, 1998. குயில்பாட்டு ஒரு மதிப்பீடு, சென்னை.
11. மணிகண்டன், ய. 2001. பாரதிதாசனின் அரிய படைப்புக்கள், அய்யாநிலையம், தஞ்சாவூர்.
12. மருதநாயகம், ப. 2004, பாரதி ஆறு பாரதிதாசன் பத்து, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
13. ராஜவேலு, கு., 1968. வான்குயில், சென்னை.
14. ஜெயா. வ, 1989. பாரதி மொழிநடை, ஜெயா பதிப்பகம், மதுரை.

English

1. Annamalai, & 1979. ***Movement for Linguistic Purism,*** the case of Tamil.In. Language movements in India 35-59. CIIL, Mysore.
2. Annamalai, E., 1999. "Language Metaphor and Metonymy : The Political Use of Language", ***PJDS*** 9:1.
3. Bharathidasan, ***Selected Poems,*** 1996. PILC, Pondicherry.
4. Freud, Sigmund, 1962. ***Creative Writers and Day Dreamrs*** (1908), In Art and Literature; Penguin Books.
5. John Fiske. 1990. ***Introduction to Communication Studies,*** Routledge, Newyork.
6. Meenakshi Sundaram, T.P. 1960. ***Prof.T.P. Meenakshi Sundarams' 60th Birthday commemoration Volume,*** Annamalai nagar.
7. Newstupny, J.V., 1989. ***Language Purism as a Type of Language Correction,*** In Politics of purism mouton, New York.
8. Ramamoorthy, L. 2000. ***Modernation in Tamil,*** PILC, Pondicherry.
9. Thomas, George. 1991. ***Linguistic Purism,*** Longman, London.
10. Van Dijk. A. Teun., 1998. ***Ideology.*** A Multi disciplinary Approach, SAGE Publications. London.



தமிழ்ப் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டு வெளியீடு